


# பணுவில்

இதழ்-௨

பிரதேச கலாசாரப் பேரவை,
வலி.மேற்கு பிரதேச செயலகம்,
சங்கானை.
2016

# "பணுவில்"

## இதழ் – 02

வலிகாமம் மேற்கு பிரதேச கலாசார பேரவை,
பிரதேச செயலகம், வலி.மேற்கு,
சங்கானை.
2016

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பணுவில் (இதழ் -02) |
| நூலின் வகை | : | ஆண்டிதழ் |
| முதற்பதிப்பு | : | கார்த்திகை, 2016. |
| பதிப்புரிமை | : | மலர்க்குழு |
| வெளியீடு | : | வலி.மேற்கு பிரதேச கலாசார பேரவை,<br>பிரதேச செயலகம்,<br>சங்கானை. |
| தாள் வகை | : | Art Paper |
| அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | 112+v |
| பிரதிகள் | : | 300 |
| நிதி அனுசரணை | : | வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம். |
| அச்சுப்பதிப்பு | : | அன்றா பிறிண்டேர்ஸ்,<br>356A, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். |

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந்த மிழணங்கே!

பல்உயிரும் பலஉலகும் படைத்து அளித்துடைக்கினும் ஓர்
எல்லை அறுபரம் பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதிரத்து எழுந்தே ஒன்று பல ஆயினும்
ஆரியம் போல் உலகவழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துமே

**மனோன்மணியம் : பெ.சுந்தரம்பிள்ளை**

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கித் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த அனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**-சுப்பிரமணிய பாரதியார்**

# கலாசார பேரவைக் கீதம்

வளர்கலை வளர்ப்போம் வாழ்வினில் உயர்வோம்
வளர்பிறை போன்ற எம் கலாசார பேரவை
உளத்தே கொண்டநல் உயரிய நோக்கினை
உயர்ந்தே ஓங்கிட உவந்தே வளர்ப்போம்
(வளர்கலை வளர்ப்போம்)

பாடற் தலங்கள் பற்பல நிறைந்தே
பக்தியை ஊட்டப் பண்புகள் வளரத்
தேடற்கு அரியநல் ஞானமுங் கல்வியும்
சேர்ந்தே இலங்கிடும் சீர் வலி.மேற்கு

சித்தர்கள் ஞானிகள் வாழ்ந்த பிரதேசம்
சிற்பம் மருத்துவம் கைத்தொழி லோடுநல்
வித்தகக் கலைஞர்கள் நிறைந்த வலி.மேற்கு
வீறுநற் சரித்திரம் படைத்த பிரதேசம்

நிலவளம் கடல்வளம் நிறைபெரு நிலத்தில்
பல்பெரும் வளத்தொடு பனைவள முண்டு
கலையொடு இயலிசை நாடகத் தொடுசீர்க்
கவிஞரும் சுவைஞரும் பொலிந்த பிரதேசத்தில்
(வளர்கலை வளர்ப்போம்)

வளர்கலை வளர்ப்போம்!
வளர்கலை வளர்ப்போம்!!
வளர்கலை வளர்ப்போம்!!!

# பிரதேச கலாசார பேரவையின்
# நிர்வாக செயற்குழு விபரம்

| | | |
|---|---|---|
| 1. தலைவர் | : | திரு. அ.சோதிநாதன், பிரதேசசெயலர், வலி.மேற்கு பிரதேச செயலகம், சங்கானை. |
| 2. உபதலைவர் | : | கலாநிதி சி.மகேந்திரன், |
| 3. செயலாளர் | : | திரு.த.அமலதாஸ், கலாசார உத்தியோகத்தர், வலிமேற்கு, பிரதேச செயலகம், சங்கானை. |
| 4. உபசெயலாளர் | : | திரு.த.சிறீஸ்கந்தராசா, கலாசார அபிவிருத்தி உதவியாளர், வலி.மேற்கு, பிரதேச செயலகம், சங்கானை. |
| 5. பொருளாளர் | : | திருமதி.கா.நிருபா, சித்தங்கேணி. |

செயற்குழு உறுப்பினர்கள் :-

01. திரு.ந.சர்வானந்தன், கிராம அலுவலர்
02. திருமதி.ஆ.சிவதட்சணாமூர்த்தி, சங்கானை
03. திரு.ந.குமணன், வாழ்வின் எழிச்சி உத்தியோகத்தர்
04. திருமதி.ம.ரசிதா, அபிவிருத்தி உத்தியோகத்தர்
05. திரு.சி.சிறீரங்கன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
06. திரு.இ.சரவணபவன், அராலி மத்தி
07. திரு.மு.சடாட்சரம், தொல்புரம் மத்தி
08. திரு.செ.சிவசுப்பிரமணியம், மூளாய் தெற்கு
09. திரு.சி.சுந்தரலிங்கம், சங்கானை மேற்கு
10. திரு.ஆ.கனகரட்ணம், சுழிபுரம் கிழக்கு
11. திரு.செ.உதயச்சந்திரன், தொல்புரம்
12. திரு.நா.தவநாகமீனேஸ், வட்டு.மேற்கு

# மலர்க்குழு

**திரு.அ.சோதிநாதன்**
கலாசார பேரவையின் தலைவரும்,
வலி.மேற்குப்பிரதேச செயலரும்,
பிரதேச செயலகம்,
சங்கானை.

**கலாநிதி சி.மகேந்திரன்,**
கலாசார பேரவையின் உபதலைவர்

**திரு.த.அமலதாஸ்**
கலாசார பேரவையின் செயலாளரும்,
கலாசார உத்தியோகத்தரும்
பிரதேச செயலகம்,
சங்கானை.

**திரு.த.சிறிஸ்கந்தராஜா**
உபசெயலாளரும்,
கலாசார அபிவிருத்தி உதவியாளரும்
பிரதேச செயலகம்,
சங்கானை.

**திரு.க.ஜெசீதன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திரு.யே.யேசுரட்ணம்**
கிறிஸ்தவ கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திரு.செ.சிவசுப்பிரமணியம்**
பேரவை உறுப்பினர்

**திரு.செ.உதயச்சந்திரன்**
பேரவை உறுப்பினர்

# இதழினுள்ளே

1. தமிழ்த்தாய் வாழ்த்து ........ iii

2. தமிழ்மொழி வாழ்த்து ........ iv

3. பேரவைக் கீதம் ........ v

4. பிரதேச கலாசார பேரவை நிர்வாக செயற்குழு விபரம் ........ vi

5. மலர்க்குழு விபரம் ........ vii

**ஆசிச் செய்திகள்**

6. ஆலய குருவினுடையது ........ 1

7. பங்குத்தந்தையினுடையது ........ 2

**வாழ்த்துச் செய்திகள்**

8. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சருடையது. ........ 3

9. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடையது ........ 4

10. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளருடையது. ........ 5

11. கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளருடையது. ........ 6

12. பிரதேச செயலாளருடையது. ........ 7

13. வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருடையது. ........ 8

14. வெளியீட்டுரை ........ 9

**ஆக்கங்கள்**

15. வரலாற்றுப் புகழ் மிக்க வலி.மேற்கு ........ 11

16. வலி.மேற்கு அளித்த வீர மங்கையே நீடூழி வாழ்க ........ 15

17. நாட்டியத்தில் ஜதியின் முக்கியத்துவம் ........ 16

18. சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் சரித்திரம் படைக்கும் சான்றோர்கள் ........ 22

19. எண்ணிலா ஆண்டுகள் வாழிநிது பணுவிலே ........ 28

20. பனைவளமும் வளமான வாழ்வும் ........ 29

21. வித்தகா! நீதான் விடைபகர்வாய் அப்பா! ........ 31

22. யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய சுற்றுலா மையங்களின் உள்ளார்ந்த வளங்கள் பற்றிய ஒரு மதிப்பீடு ........ 33

23. பணுவிலாய் நம்மைக் காக்கும் செயலகமே வாழி! வாழி! ........ 42

24. பெண் உரிமையும் யாழ்ப்பாணச் சமூகமும் ........................................ 45
25. "வல்லூறுகள்" ........................................ 50
26. அறிவறிதலும் ஆசிரியமும் ........................................ 54
27. சமூக நலன் பேணுதலின் அவசியம் ........................................ 62
28. சித்த மருத்துவ நாடி அறிவியலும் மரணத்தை அறியும் வழி முறைகளும் ........................................ 64
29. அருகிவரும் மிருக பலி ஒருபோதும் இனி வேண்டாம் ........................................ 68
30. மறைஞான அனுபவ வெளிப்பாட்டில் மாணிக்கவாசகரும் குணங்குடி ........................................ 71
31. தமிழர் பண்பாடும் ஓவியக்கலையும் ........................................ 80
32. இன்றைய கால கட்டத்தில் அறநெறிப்பாடசாலைகளின் முக்கியத்துவம் ........................................ 83
33. வட்டு. மிசனரி தலைமைகளின் கவனத்தை ஈர்த்த இந்து அறிவியல் சிந்தனைகள் ........................................ 86
34. வலி.மேற்கு வரகவி அமரர் பொன்னாலை பே.க. கிருஸ்ணப்பிள்ளை ........................................ 92
35. உற்பத்தித்திறன் முக்கியத்துவம் ........................................ 97
36. தொல்புரம் கலாலயமும் பாரம்பரிய கலைகளும் ........................................ 100

பிரதேச செயலகம் வலிகாமம் மேற்கு

மக்களின் மாண்பை நோக்கி

වලිකාමම් බටහිර ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය

DIVISIONAL SECRETARIAT VALIKAMAM WEST

## குருமுதல்வரது ஆசிச்செய்தி



பிரதேச செயலகமும் வலி.மேற்கு பிரதேச கலாசார பேரவையும் இணைந்து 'பணுவில்-02' என்னும் பிரதேச மலரினை வெளியிட்டு வருவதையிட்டு நாம் மகிழ்வும் பெருமையும் அடைகின்றோம். எமது பிரதேசத்தின் மாண்பை எடுத்தியம்பும் இம்மலரானது ஓர் வரலாற்று ஆவண நூலாகவும் திகழ்கின்றது. எமது பிரதேசத்தின் அனைத்து விடயங்களையும் உள்வாங்கி சிறப்பான முறையில் வெளிவருகின்றது. இது ஓர் அனுபவப்பகிர்வாகவும் திகழ்கின்றது. இம்முயற்சியில் ஈடுபடும் அன்பர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இம்மலரினை எதிர்வரும் காலத்தில் பிரதேச செயலக இணையத்தளத்திலும் வெளிவர முயற்சிகள் செய்தல் வேண்டும். எமது மக்கள் இன்று புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் ஏராளமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் எமது பிரதேச சமகால தரவுகள் செய்திகள், சிறப்புக்களை அறியும் பொழுது எமது பிரதேச அபிவிருத்திக்கு அது சாதகமாகவும் அமைவதுடன் அங்கு வாழும் இளம் தலைமுறையினர் எமது பிரதேச சிறப்புக்களை அறியும் வாய்ப்பும் ஏற்படுத்தப்படுகின்றது.

சிவகாமிபாகர் சிதம்பரேஸ்வரப்பெருமான் திருவருளால் 'பணுவில் -02' மலர் சிறப்பாக வெளிவரவும் கலாசார விழா சிறப்பாக நடைபெறவும் இறையருளை இறைஞ்சி வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

**சந்நிதாச்சாரியார்,**
சிவஸ்ரீ. சபா.வாசுதேவக்குருக்கள்,
வீணாகான குருபீடம்,
குருமார் சந்நிதானம்,
சித்தன்கேணி.

## சங்கானை புனித சலேசியார் ஆலய பங்குத்தந்தையின் ஆசியுரை



இன்று நாம் அவசர உலகில் இயந்திரம் போன்று செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்துக்குள் சென்று கொண்டிருக்கின்றோம். இத்தருணத்தில் இயந்திர வாழ்க்கைக்கு ஏற்ப "பணுவில்" எனும் முதல் நூலில் தமிழிலக்கிய கலாசார பண்பாட்டை வளர்த்திட பரப்பிட பாதுகாக்க வேண்டிய முயற்சியில் நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை பெருமையுடன் எழுதியுள்ளோம்.

தொடர்ந்தும் இவ்வருடமும் அதன் நோக்கம் மாறாத வண்ணம் "பணுவில் - 02" என தொடர்ச்சியாக வரும் இந்நூலில் அமைந்துள்ள ஆக்கங்கள் வாசிப்பவர்களை விழிப்புணர் வடையச் செய்து நல்வழி செயல்படவும் அதற்கு ஊக்குவிக்கவும் தூண்டும் என நம்புகிறேன். மேலும் இவ்வெளியீட்டு செயற்பாட்டிற்கு இறைவனின் ஆசீர் நிறைவாகக் கிடைக்கவும் ஆசீர்வதிக்கின்றேன்.

"பணுவில்" நூலின் அனைத்துப்பக்கங்களையும் வாசித்து உண்மை நேர்மையோடு மனிதப்பண்பாடு மிக்க கலாசார விழுமியத்தை பேணுதலின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றினூடாக ஆன்மீக வாழ்வினை அனுபவிக்கின்றோமா என இத்தருணத்தில் சிந்தித்து பார்த்தல் அவசியமாகிறது. ஏனெனில் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் அனைத்துமே எமக்கு இறைவனால் கிடைக்கப் பெற்ற கொடைகள், ஆசீர்கள், செல்வங்களேயாகும்.

எனவே ஒவ்வொரு சமயத்தவரும் இறைவனில் பயங்கொண்டு போலி வேடம் தரித்த வண்ணம் வாழாமல் கருத்துடன் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து இறைவனின் பிரசன்னத்தின் பலனைப் பெற்றுக்கொள்வோமாக! மேலும் அன்றைய தலைமுறைகளிலிருந்து இன்றைய இளம் தலைமுறையினர் மரபு வழிவரும் விழுமியங்களை பேணிப்பாதுகாத்து பெருமையடைவார்களாக!

**அருட்பணி ஜோசவ் பாக்கியம்,**
பங்குத்தந்தை, நற்கருணைநாதர் சபை,
புனித சலேசியார் ஆலயம்,
சங்கானை.

## வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் வாழ்த்துச்செய்தி



வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும், வலிகாமம் மேற்கு பிரதேச கலாசார பேரவையும் இணைந்து "பணுவில்" எனும் பிரதேச மலரினை கடந்த வருடம் தொடக்கம் வெளியிட ஆரம்பித்தனர். அவ்வகையில் இவ் வருடமும் வெளியிடப்படவிருக்கும் "பணுவில் 02" என்ற மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

இன்றைய நவீன உலகின் போக்கிற்கேற்ப தன்னை இயைபுபடுத்திக் கொண்ட மனிதன் தன் பிரதேசத்தினது வரலாறு, பண்பாடு, கலை, கலாசார மரபுகள், பிரதேச வழக்கங்கள் என்பவை பற்றி தெரிந்து கொள்வதிலும், அவை அழிந்து போகாதவாறு பாதுகாத்து வளர்த்தெடுப்பதிலும் பின்னிற்கின்றான். ஒரு மனிதனானவன் தான் வாழும் பிரதேசம் தொடர்பான தகவல்கள், தொன்மை வரலாறுகள், பழக்கவழக்கங்கள், மரபுசார் பண்பாட்டம்சங்கள் என்பவற்றால் பிரதேசத்திற்குரியவனாக மாறுகிறான். அவ்வகையான தகவல்களை இன்றைய சந்ததியினரும், எதிர்கால சந்ததியினரும் அறிந்து கொள்வதற்கு பிரதேச ரீதியாக வெளியிடப்படும் இவ்வாறான மலர்கள் மிகவும் துணை புரிகின்றன.

எனவே ஒரு பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு, கலை மரபுகள், தொல்லியல், ஆன்மீகம், பிரதேச வழக்காறுகள் மற்றும் பிரதேசம் சார் பொது விடயங்களை உள்ளடக்கி இப்பிரதேசத்தில் வாழும் இலக்கிய கர்த்தாக்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள் மற்றும் துறைசார் ஆர்வலர்கள் ஆகியோரது ஆக்கங்களைத் தாங்கியதாக இம்மலர் வெளியிடப்படுகின்றமையானது பாராட்டிற்குரிய விடயமாகும். இம்மலர் சிறப்புற வெளிவர உழைத்த அனைவரையும் பாராட்டுவதுடன் விழா இனிதே நடைபெற வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**த. குருகுலராசா,**
கல்வி அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி



சங்கானை பிரதேச செயலகமும் வலி.மேற்கு பிரதேச கலாசார பேரவையும் இணைந்து வெளியிடும் "பணுவில்" எனும் இரண்டாவது மலருக்கு வாழ்த்து தெரிவிப்பதில் மட்டற்ற பெருமகிழ்வடைகின்றேன்.

தனித்துவமான கலாசார மரபுகளைக்கொண்ட பிரதேசமாக வலிகாமம் மேற்கு பிரதேசம் திகழ்கின்றது. அந்த வகையில் பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு, கலைமரபுகள், தொல்லியல், ஆன்மீகம், பிரதேச வழக்காறுகள் மற்றும் பொது விடயங்களை உள்வாங்கி பிரதேசத்தில் வாழ்கின்ற இலக்கிய கர்த்தாக்கள், கல்வியியலாளர்கள், எழுத்தாளர்கள், துறைசார் ஆர்வலர்களின் ஆக்கங்களைக்கொண்டு வெளியிடப்படும் "பணுவில் 02" எனும் மலரினை வெளியிடும் முயற்சிக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப் பிரதேசத்தின் பண்பாடுகளை பேணுவதுடன் அவை அழியாத வகையில் பாதுகாத்து அதனை ஆவணப்படுத்தி அடுத்த சந்ததி அறியும் வகையில் மலராக வெளியிடும் முயற்சி உண்மையில் போற்றத்தக்க செயலாகும்.

அந்த வகையில் இவ்வரிய முயற்சிக்கு உந்துதலாக இருக்கும் பிரதேச செயலர், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களையும் மனதாரப் பாராட்டுவதுடன் கலை, கலாசார, பண்பாட்டு பணிகள் மேன்மேலும் தொடரவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**நா.வேதநாயகன்,**
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலர்,
யாழ். மாவட்டம்.

# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி



வலி.மேற்கு பிரதேச செயலகமும் வலி.மேற்கு பிரதேச கலாசார பேரவையும் இணைந்து வெளியிடும் "பணுவில்" பிரதேச மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மலரானது வலி.மேற்கு பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு, கலைமரபுகள், தொல்லியல், ஆன்மீகம், பிரதேச வழக்காறுகள் மற்றும் பொது விடயங்களை உள்வாங்கி பிரதேசத்தில் வாழ்கின்ற இலக்கிய கர்த்தாக்கள், கல்வியியலாளர்கள், எழுத்தாளர்கள், துறை ஆர்வலர்கள் ஆக்கங்களை தாங்கி வெளிவருவதுடன், சான்றுப்படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன்.பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும் என்பதும் பேருண்மையாகும். இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசாரப்பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இ.இரவீந்திரன்**

செயலாளர்,

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்

இளைஞர் விவகார அமைச்சு,

வடக்கு மாகாணம்.

## கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



மானசீக பண்புகள் நிறைந்த இந்நாட்டின் பாரம்பரியத்தையும், கலையம்சங்களையும் ஒவ்வொரு மூலை முடக்குகளிலும் நிறைந்த சம்பிரதாயம் மிக்கதாக வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு எம்மிடம் தரப்பட்டுள்ளது. அதனை திடகாத்திரமான முறையில் பாதுகாப்பதும் எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதும் எமது தார்மீக பொறுப்பாகும். அந்தவகையில் வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் வருடாந்த கலாசார விழாவினை நடாத்துவது தொடர்பாக நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்முறை "பணுவில் 02" நூலில் வரலாறு, பண்பாடு, கலை மரபுகள், தொல்லியல், ஆன்மீகம், பிரதேச வழக்காறுகள் மற்றும் பொது விடயங்கள் உள்ளடக்கப்பட்டு வெளிவர இருப்பதை நான் பெரிதும் வரவேற்பதோடு, பிரதேசத்தின் பாரம்பரிய கலைகளோடு மனித விழுமியங்களும் சமூகத்தை நன்னெறிப்படுத்தும் என்பதில் எந்தவிதமான மாற்றுக்கருத்துக்களும் இருக்கமுடியாது. வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாரம்பரிய கலைகள் தொடர்பாக நான் அறிவேன். அவை தொடர்பான தகவல்கள் அனைத்தும் சகல சமூகத்தினரையும் சென்றடைய வேண்டும் என்பதே பலரினதும் தேவைகளாக இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. அதற்கு "பணுவில் 02" ஆனது சிறந்த ஊடகமாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அந்தவகையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எனும் வகையில் வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் கலாசார விழாவின்போது வெளியிடப்படுகின்ற "பணுவில் 02" சிறப்பு மலர் தொடர்பாக நான் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இவ் வருடாந்த கலாசார மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் பெருமிதமடைவதோடு, கலாசார பேரவையின் கலாசார விழாவானது வெற்றிகரமாக நடந்தேறவும் இனிவரும் காலங்களில் மென்மேலும் சிறப்புற இவ்வாறான நிகழ்வுகள் நடாத்தப்படுவதற்கு எல்லாவிதமான அனுகூலங்களும் கிடைக்கப்பெற வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

**அனுஷா கோகுல பர்னாந்து**

பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம்,

பத்திரமுல்ல.

## பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி



ஈழமணித் திருநாட்டின் வடபால் விளங்கும் யாழ்ப்பாணத்தில் வலிகாமம் மேற்கு பிரதேசம் நெறிப்படுத்தப்பட்ட நிர்வாகக் கட்டமைப் புடன் பொருளாதார, சமூக, சமய, கலை கலாசார கல்வி பாரம்பரிய விழுமியங்களை நிறைவாகக் கொண்டது. சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய பெரும் பிரதேசங்கள் இந்நிர்வாக அலகிற்குட்பட்டவையாகும். இப்பிரதேச மக்கள் அறிவு, ஆற்றல், ஆளுமைமிக்கவர்கள். இதனால் அன்றிலிருந்து இன்றுவரை பல படைப்புகள் வெளிவருகின்றன. அறிஞர்கள், புலவர்கள், கலைஞர்கள், சான்றோர்கள் எனப் பலரும் பன்முக ஆளுமையுடன் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களால் பிரதேசம் பெருமை பெறுகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க பல விடயங்களைத் தன்னகத்தே கொண்டு இப்பிரதேசத்தின் பௌதிக மற்றும் மனித வளங்களையும், பண்புகள், நடத்தைகளையும் ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கின்ற முதல் முயற்சியாக 2015ஆம் ஆண்டில் "பணுவில்" என்ற பிரதேசமலர் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது இரண்டாவது பணுவில் மலர்கின்றது. இம்மலர்ச்சியினால் நாம் எல்லோரும் அகமலர்ச்சியடைகின்றோம். முதல் நூலில் சேர்க்கப்படாத பல விடயங்களையும் இந்நூல் தாங்கிவருவது பிரதேசத்திற்குப் பெரிதும் நன்மை பயக்கும் எனக் கருதுகின்றேன். பிரதேச கலாசாரப் பேரவையினரின் இப்பயன்தரு முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும். பலரின் கூட்டு முயற்சியாக கூட்டுப் பொறுப்பாக மலரும் இம்மலர் இப்பிரதேச மக்களால் படிக்கப்பட வேண்டியதும், பாதுகாக்கப்பட வேண்டியதாகும்.

பிரதேச வளங்களையும் வாழ்வியல் அனுபவங்களையும், வழக்காறுகளையும் நிறை வாகக் கொண்டுள்ள இந்நூல் ஒரு தகவல் பெட்டகமாக அமைவதுடன், ஆய்வு இலக்குகளைக் கொண்ட மாணவர்களின் பல்துறை சார்ந்த தேடல்களை மேம்படுத்தவும் உதவும் என்பது எனது நம்பிக்கையாகும். எவ்வாறாயினும் இப்படைப்பு காத்திரமாக மலர்வதற்கு முழு முயற்சியுடன் ஈடுபட்ட கலாசாரப் பிரிவு உத்தியோகத்தர்கள், கலாசாரப்பேரவை உறுப்பினர்கள் ஆக்கங்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய சான்றோர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இப்படைப்பு பயணம் மென்மேலும் நகர்ந்து பயனுள்ள வாசனை மலர்களாக என்றும் மலரவேண்டும். இதற்கு இறைவனின் திருவருள் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**அ.சோதிநாதன்,**
பிரதேச செயலரும்,
கலாசாரப்பேரவையின் தலைவரும்
வலி.மேற்கு, சங்கானை.

## வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள
## உதவிப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



வலி.மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட கலை கலாசார விடயங்களை மேம்படுத்தும் வகையில் வலி.மேற்கு பிரதேச செயலகமும் அதன் கலாசாரப்பேரவையும் இணைந்து வருடாவருடம் கலாசார விழாக் களையும் அதனுடன் இணைந்ததாக கலாசார அபிவிருத்தி சார் செயற் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றமை மகிழ்வுக்குரியது. ஓர் பிரதேசத்தின் பண்பாடு என்பது அங்கே நிலவுகின்ற ஆரோக்கியமான சமூகத்தின் வழி வெளிக்கிளம்புகின்றது. அந்தவகையில் வலி.மேற்கு பிரதேசம் உயர்ந்த பண்பாட்டின் உறைவிடமாக காலந்தோறும் தன்னை நிலைநிறுத்தி நிற்பதை நாம் நன்கறிவோம்.

இப்பிரதேசத்திற்கு பண்டைக் காலந்தொட்டு பெருமை சேர்த்து வரும் பழமையான கிராமங்களாக தொல்புரம், சுழிபுரம், அராலி, பண்ணாகம், சித்தன்கேணி, சங்கானை, வட்டுக்கோட்டை என்பன விளங்கி வருகின்றமை எனக்கூறின் மிகையாகாது. யாழ்ப்பாணத்தின் ஒரே ஆறான வழுக்கையாற்றையும் இந்துக்களின் புனித தீர்த்தங்களில் ஒன்றான திருவடி நிலையையும் கிராமியக்கலைகளுக்குப் பெயர்பெற்ற வட்டுக்கோட்டையையும் நாதஸ்வரக் கலைக்குப் பெயர்பெற்ற தொல்புரத்தையும் பண்டிதர்களையும் புலவர்களையும் நிறைவாகக் கொண்ட பண்ணாகத்தையும் அறிவார்ந்த கல்விதனை அள்ளி வழங்கிவரும் முதன்மைமிகு நூற்றாண்டு கண்ட பாடசாலைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதே வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவாகும்.

இங்கு சிறந்த நிர்வாகச் செயற்பாட்டுடன் நின்றுவிடாது, கலாசாரச் செயற்பாடுகளையும் வலி.மேற்கு பிரதேச செயலகம் கலாசாரப் பேரவையுடன்இணைந்து ஆற்றிவருகின்றது. பிரதேச பண்பாட்டு அபிவிருத்திக்கு மேலான ஒத்துழைப்பினை வழங்கி வரும் பிரதேச செயலர், கலாசார துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் பேரவை உறுப்பினர்களையும் இன்றைய இப் "பணுவில்-02" மலரின் இனிய வரவினூடாக மனதாரப்பாராட்டுகின்றேன். மேலும் இவ்விதழ் வெளியீடும் அதனோடு இணைந்து நடைபெறும் கலாசார விழாவும் சிறப்புற எல்லாம்வல்ல இறை அருள் வேண்டி எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வனஜா செல்வரட்ணம்,**
உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

# வெளியீட்டுரை

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படும் "பணுவில் 02" மலரினூடாக சில செய்திகளைப் பகிரும் இத்தருணம் மகிழ்ச்சிக்குரியது. சித்தர்களையும், ஞானிகளையும் பெரும் பண்டிதர்களையும், புலவர் களையும் பல்துறை அறிஞர்களையும் கலைஞர்களையும் காலந்தோறும் பிரசவித்து வரலாற்றுப் புகழ்பெற்றது இவ் வலி. மேற்குப் பிரதேசம். காடு திருத்தி கழனியாக்கி வாழ்ந்த பெரும் விவசாயப் பெருமக்களையும் கடலாடி கடலுணவால் உரமேறி கலைவாழ்வில் இப்பிரதேசத்திற்கு களிநிறை மகிழ்வூட்டிய கைவினைஞர்களையும் ஏற்றமிகு கல்வியால் தொழில்பெற்று வளம் சேர்க்கும் அரச ஊழியர்களுடன் வாணிபத்தாலுயர்ந்த வணிக குடிகளாலும் நிறைவுபெற்று உயர்ந்து நிற்கிறது இவ் வலி.மேற்கு.

இங்கே சோழியர் வழி வந்தவூரான சோழிபுரம் மருவி இன்று சுழிபுரமாகவும் சித்தர்கள் வாழ்ந்து சிறந்த பகுதி இன்று சித்தன்கேணியாகவும் இராமாயணக் கதையுடன் தொடர்பு படுத்தப்படும் அனுமானது தீயால் மூளாத உயர் பிரதேசமாக மூளாயும் என விரிவுபெற்று பொன்னாலை, தொல்புரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி, பண்ணாகம் என பண்டைக் கிராமங்களைக்கொண்டு விளங்கி அவற்றின் வரலாறுகளைப்பகிர்கின்ற அறாத் தொடர்ச்சியின் எச்சங்களை இன்றளவும் கொண்டு செழிப்புறும் பிரதேசமே வலி. மேற்கு என துணிந்து கூறலாம்.


இத்தகு உயரிய வரலாற்றுப் பெருமைசேர் வலி.மேற்கின் கலை, ஆன்மீகம், தொல்லியல், மானிடவியல், சமூகவியல், வரலாறுகள் கலைமரபுகளை ஆவணப்படுத்தும் நோக்குடன் கடந்த வருடம் முதல் "பணுவில்" வெளிவர ஆரம்பித்துள்ளது. அந்நூலின் வரவின் அவாபற்றி குறிப்பிடுகையில்,

"பனைமரத்தின் ஓர் பகுதிப் பொருள் தான் "பணுவில்". அது நுங்கின் மூடி. மாறிவிட்ட இன்றைய காலத்தில் கண்ணைக் கவரும் அழகிய கரண்டிகளால் உணவுண்ண பழகிவிட்ட போதிலும் எம் முன்னோர் ஒடிந்து விழுந்த ஒற்றைப் பணுவிலை எடுத்து ஆவி கிளம்ப சுடும் கஞ்சியை கோலி ஊதி ஊதிப்பருகியபோது உண்டான சுவை இன்றில்லை. இப்படித்தான் எம் முன்னைய குழந்தைகள் பணுவிலின் இரண்டு முனைகளைக் கிழித்து உதட்டில் பொருத்தி ஒடித்திரிந்து ஊதிய விசிலில் உண்டான மகிழ்ச்சி இன்று பறிபோயிற்று. வாசிப்பின் ஆர்வமும்

அறிதலின் வேகமும் குன்றிவரும் இந்த சமூகத்தால் மறந்துவிட்ட ஓர்வாய் மொழிச் சொல்தான் "பணுவில்". இது குரும்பையை இறுகப் பிடித்து நுங்காக்கி பின் பழமாக்கி பயன்தரும் என்ற நம்பிக்கையில் இம்மலரின் பெயராகிறது" எனக்குறிப்பிடப்பட்டிருப்பதனூடாக அதே நோக்கத்தின் தொடர்ச்சியாகவே "பணுவில் 02" உம் வெளிவருகின்றது.

இதனுள்ளே முகிழ்ந்திருக்கின்ற ஆக்கங்கள் யாவும் இவ் வலி.மேற்கு பிரதேசத்தவர்களதும் பிரதேச செயலகத்தில் பணியாற்றுவோரதும் படைப்புக்களாய் அமைந்திருப்பது நூலிற்கு தனிச்சிறப்பினைத்தருகிறது. இந்நூலின் வரவின் நோக்கமும் இதனூடாக நிறைவேறுகிறது என்னும் திருப்தியும் எமக்குண்டு. மேலும், இந்நூலுருவாக்கத்திற்கு படைப்புகளை வழங்கியவர்களுக்கும் இந்நூல் வெளியீட்டுக்கு எமக்கு தகுந்த தருணங்களில் ஆலோசனைகளையும் வழங்கிய பிரதேச செயலர் மற்றும் பிரதேச செயலக ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள், பேரவை உறுப்பினர்கள், நூலுருவாக்கத்துக்கு நிதி அனுசரணை வழங்கிய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினர்க்கும் நூலிற்கான ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகளை வழங்கியவர்களுக்கும் இந்நூலினை அழகுறப் பதிப்பித்து வழங்கிய "அன்றா" பதிப்பகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**-மலர்க்குழு-**



வலி. மேற்கு பிரதேச செயலகப் பிரிவின்
கலாசார மையங்கள்
வ
105000
110000
172
173
174
175
176
177
168
169
170
171
158
157
167
165
166
160
161
162
163
164
159
178
179
180
181
AB
B
1. வழுக்கை ஆறு
2. ஆவுரஞ்சிக் கல்
3. துணவி பிள்ளையார் கோவில்
4. பிரகதீஸ்வரர் ஆலயம்
5. பொன்னாலை ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலயம்
6. திருவடி நிலை
7. தென்னிந்திய திருச்சபை
8. சங்கானை ஒல்லாந்தர் கால தேவாலயம்
9. பறாளாய் விநாயகர் ஆலயம்
10. சம்புநாத ஈஸ்வர ஆலயம்
1 cm = 500 Meters

# வரலாற்றுப் புகழ்மிக்க வலிகாமம் மேற்கு

செ.சிவசுப்பிரமணியம்,
மூளாய்.

**மே**ற்கு என்பது புனிதமும் தெய்வீகமும் அதிசயங்களும் அற்புதங்களும் நிறைந்ததோர் திசையாகும். அதற்குக் கட்டியம் கூறுவது போல வலிகாமம் மேற்கு என்று சொல்லப்படுகின்ற எங்கள் பிரதேசமும் அதிலே அங்கம் வகிக்கின்ற ஒவ்வொரு ஊர்களும் ஏதோ ஒருவகையிலே புனிதமும் தெய்வீகமும் அதிசயங்களும் அற்புதங்களும் வரலாற்றுப் புகழ்மிக்கவையுமாகவே காணப்படுகின்றன. அத்தகைய எல்லாக் கிராமங்களினதும் வரலாற்றுப் புகழ்களை இக்கட்டுரையிலே எடுத்துக்கூறுவது கட்டுரையின் அளவிற்குப் பொருந்தாது என்பதால் முக்கியமான சிலவற்றை இங்கே எடுத்துக்கூற விளைகின்றேன்.

"வெள்ளத்துள் நாவற்றி இருப்பவர்கள் போல" நாங்களும் மிகப் புனிதமானதும் அதிசயங்களும் அற்புதங்களும் தெய்வீகமும் நிரம்பியதானதோர் பிரதேசத்தில் இருந்துகொண்டு எங்கே புனிதமும் அதிசயங்களும் அற்புதங்களும் தெய்வீகமும் இருக்கின்றது என்று தேடி ஓடிக்கொண்டிருக்கின்றோம். புராணங்களிலே கூறப்படுகின்ற 'அகலிகை' என்னும் பெண்ணானவள் முனிவர் இட்ட சாபத்தினால் கல்லாகிப் போனதும், பின்னர் இராமபிரானுடைய பாதம் பட்டதும் மீண்டும் பெண்ணாக மாறியதும் கதையாகும். அதே இராமபிரானுடைய பாதம் பட்ட நீரே 'திருவடிநிலை' என்று சொல்லப்படுகின்ற கடலிலே இருக்கின்ற நீராகும். இலங்கையின் வடகிழக்குக் கடற்கரை ஓரங்களெல்லாம் ஏதோ ஒருவகையிலே புனிதம் பெற்றிருந்தாலும் வலிகாமம் மேற்கிலே அமைந்திருக்கின்ற திருவடிநிலை என்று சொல்லப்படுகின்ற புனித தீர்த்தக்கரையிலே இருக்கின்ற மகிமையும், சிறப்பும், வரலாறும் வேறு எங்கேயும் இல்லையென்றே சொல்லலாம். எனவே அதிலே தீர்த்தமாடுவதும் பிதிர்க் கடன்கள் செய்வதும்

புண்ணிய கருமங்கள் செய்வதுவும் எங்களுடைய பாவவினைகளைப்போக்கி விமோசனம் பெறுவதற்கு ஏற்ற வழியாகும்.

அடுத்து மூளாய் என்கின்ற கிராமத்தை எடுத்துநோக்குவோமேயானால் அதுவும் புராணக்கதைகளோடு சம்பந்தப்பட்டே இருக்கின்றது. அனுமான் இலங்கைக்கு வந்த போது அவருடைய வாலிலே மூட்டப்பட்ட தீயானது எல்லா இடங்களையும் எரித்துக் கொண்டுவந்து மூளாய்ப் பகுதியை அண்மித்ததும் அது அணைந்து விட்டதாகவும் அதனால் அங்கே தீ மூழாமல் இருந்தபடியால் அது மூளாய் என்று பெயர் பெறுவதாகவும் இன்னுமொரு வகையிலே இலங்கையை ஒரு மனித வடிவமாக எடுத்துக்கொண்டால் அதற்கு மூளைவருகின்ற இடத்திலே அக்கிராமம் அமைந்திருப்பதால் அது மருவி மூளாய் என்று பெயர் பெறுவதாகவும் கூறப்படுகின்றது. எது எதுவாக இருந்தாலும் மூளாய்க் கிராமத்திற்கு உள்ள வரலாற்றுச் சிறப்பு என்னவென்றால் இங்கே அமைந்திருக்கும் கூட்டுறவு வைத்தியசாலையாகும். இப்போது சற்றுத் தொய்வு நிலையிலே இது காணப்பட்டாலும் தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரியதோர் ஸ்தாபனமான ஒரேயொரு கூட்டுறவு வைத்தியசாலையாக இது காணப்பட்டதும் எங்களுடைய வலிகாமம் மேற்குப் பிரதேசத்திற்கு இது சிறப்பினைத் தருகிறதாய் உள்ளது.

அதேபோலவே பொன்னாலை என்று சொல்லப்படுகின்ற கிராமத்தை எடுத்து நோக்குவோமேயானால் பொன்னாலை என்றவுடனேயே காத்தல் கடவுளாகிய கண்ண பெருமானுடைய தோற்றமே முன்னுக்குவரும். கண்ணன் ஆமைவடிவாக கடலுக்குள் இருந்துகொண்டு மீனவர்கள் வீசிய வலைக்குள்ளே அகப்பட்டு வெளியே வந்ததும் அது 'பொன் ஆமை' வடிவாகத் தோற்றமளித்ததும் பின்னர் மீனவர்கள் அதை நோக்கியபோது அது கல்லாக மாறியதும் விண்ணிலே இருந்து ஒரு உரை "நானே இவ்வாமை வடிவாகத் தோன்றினேன் என்னை நீங்கள் ஆலயம் ஒன்று அமைத்து அதனுள்ளே வைத்து பொன்னாலையம் என்று அதற்குப் பெயர்சூட்டி வணங்குங்கள்" என்று திருவாக்கு மலர்ந்தருளியதும் இக் கிராமத்திலே தான். இவ்வாறு கண்ண பரமாத்மா தோற்றமளித்து அருளாட்சி செய்தது வேறு எங்கேயும் நடந்திராததோர் அற்புதமாக இருப்பதால் இந்தக் கிராமமும் திருத்தலமும் வலிகாமம் மேற்கிற்கோர் வரப்பிரசாதமும் வரலாற்றுப் புகழுமேயாம்.

அதேபோலவே சோழியபுரம் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டு வந்த சுழிபுரம் கிராமமும் ஓர் சிறப்பு வாய்ந்த பண்டைய கிராமமாகும். இக்காலத்தில் பலகாரணங்களால் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து இந்திய தேசத்தில் போய்க் குடியேறும் தமிழர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். ஆனால் சேர, சோழ, பாண்டியர்களின் ஆதிக்கம் இந்திய தேசத்தில் வலுப்பெற்றிருந்த காலத்திலேயும் அதற்குப் பின்னரும் வேறு பிற காரணங்களாலும் இந்தியத் தமிழர்கள் பலரும் வந்து இலங்கையின் தமிழர் பிரதேசங்களில் குடியேறினார்கள். அவ்வாறு குடியேறியவர்களுள் சோழ வம்சத்தவர்கள் வந்து குடியேறிய இடமே சுழிபுரமாகக் கூறப்படுகின்றது. அத்தோடு மட்டுமல்லாமல் 'முதல் அரசினர் ஆங்கிலப் பாடசாலையாகத் திகழும் விக்ரோறியாக் கல்லூரியும்' இங்கே அமைந்திருப்பது வேறு எங்கேயும் காணப்படாத அம்சங்களாக இருப்பதால் இதுவும் வலிகாமம் மேற்கிற்கு வரலாற்றுப் புகழைச் சேர்ப்பதாக உள்ளது.

மேலும் வட்டுக்கோட்டை என்கின்ற கிராமத்தை நோக்கின் இலங்கையில் ஜனநாயக அரசியல் ஆரம்பித்த நாட்தொட்டு வலிகாமம் மேற்கின் பல கிராமங்களையும் இணைத்து அதற்கு 'வட்டுக்கோட்டைத் தொகுதி' என்று பெயர்சூட்டப் பட்டதும், அதற்கு மேலாக இங்கே மிசனரிமார்களுடைய செல்வாக்குக்குட்பட்ட மிகப் பெரிய பாடசாலை யாக யாழ்ப்பாணக் கல்லூரி விளங்குகிறது. இது மிகப்பெரிய நூல்நிலையத்தோடும் பல்கலைக்கழக அந்தஸ்தோடும் "யாழ்ப் பாணக்கல்லூரி" என்றபெயரிலே வட்டுக் கோட்டையில் அமைந்திருப்பதும் அதன் புகழ் உலகளாவிய ரீதியில் பரந்திருப்பதும் வட்டுக்கோட்டை வலிகாமம் மேற்குப் பிர தேசத்திற்குள் அடங்குவதால் இதுவும் வலிகாமம் மேற்கிற்கு வரலாற்றுப் புகழைச் சேர்க்கின்றது.

பண்ணாகம் என்கின்ற கிராமத்தை எடுத்து நோக்குவோமேயானால் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்ந்ததும் சைவத்தையும் தமிழையும் வளர்த்த இடமாகத் திகழ்ந்ததும் தமிழர்க்கு காலத்தால் அழியாததோர் பெருந் தலைவரை உருவாக்கிக் கொடுத்ததும் இந்தக் கிராமமாக இருப்பதோடு பல பண்டி தர்களும் புலவர்களும் இந்தக் கிராமத் திலே வாழ்ந்ததோடு மேலும் பலரை உரு வாக்கிக்கொடுத்ததும்'பண்ணாகம்' என்று சொல்லப்படுகின்ற இக்கிராமமேயாகும். இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தது போல அக்காலம்தொட்டு இயங்கிவரும் தமிழ்ச் சங்கமென்பது "வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கமென்ற" பெயரிலே இக்கிராமத்திலே இயங்கி வளர்ச்சி பெற்றமையாகும். இத்த கைய இக்கிராமம் சிறப்புக்கள் வேறு எங் கேயும் காணப்படாத சிறப்புக்களாக இருப்ப தனால் இதுவும் வலிகாமம் மேற்கிற்கோர் வரலாற்றுப் புகழேயாகும்.

அதேபோலவே தொல்புரம் என்கின்ற கிராமத்தின் சிறப்புக்களை பார்ப்போமானால் பழம்பெரும் கிராமம் என்பது அதன் பொருளா கும். பழம் பெரும் கலை கலாசாரங் களான கூத்து, நாடகம், சிற்பம், சித்திரம், வாத்தியங்கள், இசைகள், சங்கீதம் போன்றனவும் மேடையமைப்பாளர்கள், ஒப்பனையாளர்கள், அண்ணாவியார்கள், ஒலியமைப்பு சேவை வல்லுநர்கள் போன்றவர்கள் அதிகம் தோன்றியதும் பேணிப் பாதுகாக்கப்பட்டதும் இன்றும் இவ்வம்சங்கள் எல்லாம் புதுமெருகுடன் பேணிப் பாதுகாக்கப்படுவதும் இக்கிரா மத்திலே அதிகமாகவுள்ளது. மிகப்பெரும் நாதஸ்வரக்கலைஞர்களும் தவில் மேதை களும் கலாலயங்களும் சர்வோதய அமைப்பும் அமைந்து இக்கிராமத்திற்கு இப்போதும் பெரும் புகழைச் சேர்த்துக் கொண்டேயிருக்கின்றன. எனவே வேறு எங்கேயும் இல்லாத சிறப்புக்களான இவை இங்கே இருப்பதுவும் அதுவும் வலிகாமம் மேற்கிற்குள்ளே அமைந்திருப்பதுவும் வலி காமம் மேற்கிற்கோர் வரலாற்றுப் புகழும் சிறப்புமேயாகும்.

இன்னுமொரு கிராமமான சித்தன் கேணியை சற்று ஆராய்வோமானால் கலியுகம் மேலோங்கி சித்தர்களும், யோகி களும், ஞானிகளும் அருகிய இக்கால கட்டத்திலே முன்னர் வேறு எங்குமே இல்லாதவாறு சித்தர்களும் ஞானிகளும், யோகிகளும் பிறந்தும் வளர்ந்தும் வாழ்ந்தும் வந்த ஊர் சித்தன்கேணி என்று சொல்லப்படுகின்றது. அங்கே ஒரு கேணி. அக்கேணியைச்சுற்றி ஓங்கி உயர்ந்து வளர்ந்த மரங்கள். அதன் கீழே சித்தர்களும் யோகிகளும் ஞானிகளுமென்று கூடி ஆலயம் அமைத்து வழிபடுவதும் சம்பாசனைகள் புரிவதும் சித்துக்கள் புரிவதும் சமைத்து

உண்பதுவும் உறங்குவதுமாக இருந்தார்கள் என்றும் அதனாலேயே அவ்வூரிற்கு "சித்தன் கேணி" என்று பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவார்கள். இத்தகைய சிறப்புக்கள் வேறு எங்கேயும் இல்லாமல் சிறப்பு வாய்ந்த ஊரான சித்தங்கேணி வலிகாமம் மேற்கின் எல்லைக் குட்பட்டு இருப்பதும் இதுவும் வலிகாமம் மேற் கிற்கு வரலாற்றுப் புகழினை சேர்க்கின்றது.

'அராலி' என்று சொல்லப்படுகின்ற கிராமத்தின் சிறப்புக்களை எடுத்து நோக்கு வோமானால் பல கல்விமான்களும் அறிஞர் பெருமக்களும் எழுத்தாளர்களும் நாடக ஆசிரியர்களும் என்று மட்டுமல்லாமல் உலகத்திலேயே தலைசிறந்த சிற்பாசிரியர்கள், கலைஞர்கள் போன்றோர் பிறந்து வளர்வதும் இக்கிராமத்திலேயாகும். அதுமட்டுமல்லாமல் சிறந்த விவசாய மன்னர்கள் வாழ்வதுவும், வலிகாமம் மேற்கில் அமைந்துள்ள மூன்று மீன்பிடித்துறைகளான சுழிபுரம், பொன் னாலை, அராலி என்பவற்றிலே மிக முக்கிய துறையாக விளங்குவது "அராலித்துறை" யேயாகும். ஏனென்றால் அது மீன் பிடிக்கு மட்டுமல்லாமல் கண்ணுக்கு எட்டிய தூ ரத்திலே இருக்கின்ற தீவுப் பகுதிகளுக்குச் செல்வதற்கான மிகக் கிட்டிய கடல் வழியா கவும் அமைகிறது. எனவே இக்கிராம மானது வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலே அமைந்திருப்பது வலிகாமம் மேற்கிற்கோர் வரலாற்றுப் புகழேயாகும்.

இறுதியாக சங்கானைக் கிராமத்தின் சிறப்புக்களையும் நாம் நோக்குவது அவசிய மாகும். யாழ்ப்பாணத்தை பேரரசர்களும் அயற் பிரதேசங்களை சிற்றரசர்களும் ஆட்சி செய்த அக்காலத்திலே மக்களுக்கு ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு ஆணையைப் பிறப்பிப்பவர் குழு யானையிலே இங்கே வருவதுவும் இக்குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்ததும் யானையிலே இருந்தபடி சங்கினை எடுத்து ஊதியபோது அதை ஊர் மக்கள் செவிமடுத்து ஓடிவந்து கூடிய பின்னால் அரச ஆணைகளைப்பிறப்பிப்பதும் வழக்கமாகக் கொள்ளப்பட்டது. அவ்வாறு யானையிலே வந்து சங்கை ஊதி ஆணை பிறப்பித்த இடமே "சங்கானை" என்று பெயர் பெறுவதாகவும் கூறப்படுகின்றது. இன்றைய காலத்தில் அதன் தொடர்ச்சியாகவே பிரதேச மக்களுக்கு நல்ல நிர்வாகச் செயற்பாட்டை வழங்குவதாக எங்களுடைய வலிகாமம் மேற்குப்பிரதேச செயலகமும் சங்கானையிலே எங்களுடைய வலிகாமம் மேற்கில் அமைந் திருப்பது சிறப்புக்குரியதாகும். எனவே அத்தகையதோர் பழமையான சிறப்பு வாய்ந்த சங்கானைக் கிராமமும் வலிமேற்குப் பிரதே சத்தில் அமைந்திருப்பதும் வலி.மேற்கின் வரலாற்றுப் புகழுமேயாகும்.

மேற்கூறப்பட்ட கிராமங்கள் மட்டும் தான் வலி.மேற்கிற்குப்புகழ் சேர்ப்பன என்றல்ல ஏனைய கிராமங்களும் ஏதோ ஒருவகையிலே வரலாற்றுப் புகழ்கொண்டனவாகவே விளங்கி வலி.மேற்கிற்கு புகழினைச் சேர்ப்பனவாக இருக்கின்றன. ஆனாலும் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல கட்டுரையின் அளவினைக் கருத்திற்கொண்டு இங்கே தொட்டுக்கொள்ளாத கிராமங்கள் பற்றி மீண்டுமொரு பணுவிலிதழினூடாக பதிவு செய்யக் கூடியதாக இருக்கும் என வாசகர்கள் நம்பலாம்.

# வலி.மேற்கு அளித்த வீரமங்கையே நீடூழி வாழ்க

**தி.வேலுப்பிள்ளை, J.P**
முதியோர் சங்கம், தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

அன்பும் அறமும் இருகண்களெனக் கொண்ட
வீரமங்கையே வாழ்க,

ஆதவன் போன்று ஒளி வீசி ஆருயிர்களைக் காக்கின்ற
வீரமங்கையே வாழ்க,

இன்பமான வாழ்வினை ஆற்றலால் வியர்வை சிந்தி, ஏர் பிடித்தோன்
நலம் காக்கும் வீரமங்கையே வாழ்க,

ஈடில்லாச் செல்வங்களை எமக்கெனப்பாரில் பரப்பி வைத்த
சௌபாக்கிய நாயகி எனும் வீர மங்கையே வாழ்க,

உண்மைத் தத்துவமே! கலைவடிவு மாணிக்கம், என்ற
வீர மங்கையே வாழ்க,

ஊர்கள் பல சேர்ந்து வலி. மேற்கு என்ற நாமம் பூண்ட
வீர மங்கையே வாழ்க,

எண்ணும் எழுத்தும் அணிகலன்கள், என்ற சகலகலாநாயகி
என்ற கலைத்தாயின் வீர மங்கையே வாழ்க,

ஏற்றமிகு இவ்வுலகில் ஆற்றல்கள் பல படைத்த ஏகாந்த
நாயகி என்ற வீர மங்கையே வாழ்க,

ஐங்கரன் துணையுடன் சீர்கள் பல செய்து, சீரும் சிறப்புடனும் வாழ
வலி.மேற்கு வீரமங்கையே
நீடூழி வாழ்க! வாழ்க! வாழியவே!!!

# "நாட்டியத்தில் ஜதியின் முக்கியத்துவம் ஓர் கண்ணோட்டம்"

**ம.லோகேந்திரன், M.A**
(அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்)
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

**ப**ரதநாட்டியத்தில் பயிலப்படும் மிருதங்க இசையுடனான ஜதியின் முக்கியத்துவம் எனும் தலைப்பில் சில உருப்படிகள் இங்கு உதாரணத்துக்காக விளக்கப்படுகின்றன. அவை அறிமுறை செயன் முறை சார்ந்த குறியீட்டு வடிவத்தில் இங்கு குறிப்பிடப்படுகின்றது.

தஞ்சை நால்வர் வகுத்தனவற்றில் சில உருப்படிகள் அருகினாலும் அவர்கள் வகுத்துக் கொடுத்த ஏனைய உருப்படிகள் தற்போது ஆடல் அரங்க நிகழ்வுகளில் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இப்பகுதிக்கு தேவை எனக் கருதிய ஜதி சம்பந்தமான சில உருப்படிகள் விளக்கப்படுகின்றன.

### 1. மேளப் பிராப்தி

பரதநாட்டிய அரங்க நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இடம்பெறும் இவ் உருப்படி விறுவிறுப்பான அமைப்பில் இருப்பதால் அரங்கில் இசைச்சூழலை (Musical Atmosphere) உடனடியாக உருவாக்கு கின்றது. நாட்டியத்தில் முதிர்ந்த அனுபவம் பெற்ற சங்கீத கலாரத்னா 'மைசூர் வேங்கடவக்சம்மா' மேளப்பிராப்தியில் காணப்படும் இசை வழமையை ஜதிகள் என்பன உட்பட பின்வருமாறு கூறுகின்றார். "நாட்டிய நிகழ்வுகளின் தொடக்கச் சடங்குகள் "பூர்வாங்க விதி" என்று அழைக்கப்படும். இதன்படி முதலில் நட்டுவனார் சில ஜதிகளைக் கையில் உள்ள தாளத்தைத்தட்டியவாறு தொனிப்பார். அந்த ஜதிக்கோர்வைகள் தாம்-தீம்-தோம்-நம் போன்ற பீஜா அட்சரம் தொடர்பான சொற்களால்

அமைந்திருக்கும். இரண்டு மூன்று நிமிடங்களுக்கு இது இசைக்கப்படும். நட்டுவனாரின் ஜதிக்கோர்வைகளோடு மிருதங்க வித்துவானும் இணைந்து தொடர்ந்து மூன்று நிமிடங்கள் இசைத்தபின் முத்தாய்ப்பு வைத்து முடிப்பார்கள். இதுவே மேளப்பிராப்தி என்று அழைக்கப்படும் என க்குறிப்பிடுதல் காணலாம்.

இவ்வாறு ஆரம்ப உருப்படிகளிலேயே ஜதிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை அறிந்து கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது.

## 2. தோடய மங்களம்

ஆடல் நிகழ்வில் நாட்டியம் ஆடுபவரும் பக்க இசையாளரும் சேர்ந்து பாடும் மங்கலச் சொற்களைக் கொண்ட இப்பாடல் தெய்வ ங்களை வாழ்த்தப்பெற்று நிகழ்வு சீராக இடம் பெற தெய்வங்களின் துணை வேண்டப் படுகின்றது.

தோடய மங்களம் பிற்காலத்தில் ஆடல் வடிவம் பெற்று அரங்கில் நிகழ்த்தப் பெற்று வருக்கின்றது. இதனை "அத்தி மொஹரா" எனவும் தோடுடைய மங்களம் எனவும் அழைக்கப்பெறும் கண்ட கதியில் நாட்டை ராகத்தில் தாம்-தாதை-தை-ஜக-தத்தாம் எனும் மிருதங்க ஜதிகளை ஒலிக்கத் தாளக் கதியையும், லயத்தையும் சார்ந்து கண்கள், கழுத்து, தலை, கைகள், பாதங்கள் ஆகியவற்றை சீராக வைத்து அசைத்து ஆடுதல் வழமையாகும். இதனை "அத்தி" என அழைப்பர். அத்தி என்றால் தலையை குறுக்காக நிருத்தத்தில் அசைத்தல் எனப்படும்.

மிருதங்கத்தில் சில ஜதி தீர்மானங்கள் ஒலிக்க அவற்றிற்கு ஏற்ப அங்கங்களால் அபிநயம் செய்து முடித்தல் "மோஹரா" எனப்படும். இது முன் தீர்மானம் ஆகும். அதாவது ஜதி அல்லது கதி முடிவில் ஒரு அபி நயத்தை வலது கையால் செய்து அதனையே இடது கையாலும் செய்து மீண்டும் வலது கையால் செய்து முடித்தல் எனப்படும். ஒரே வின்யாசம் மூன்றுமுறை செய்யப்படும். இதனை சங்கராபரணம் என அழைப்பர்.


ஒரு தாளத்திலும் ஒரு ராகத்திலும் இடம்பெற்ற இவ் உருப்படி பல ராகங்களிலும் பல தாளத்திலும் இடம்பெற்று இயற்றி நாட்டிய அரங்க நிகழ்வு உருப்படியாக 1970-72 காலப் பகுதியில் அடையாறு லக்ஷ்மணன் அவர்களால் நிருத்தத்திற்கென சொறகட்டு (ஜதி) கோர்வைகளைச் சேர்த்தது ஆடல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. நாட்டியத்தில் கம்பீரமான உணர்வைத்தர வல்லது இவ் உருப்படியாகும். இப்பாடலின் அபிநயத்தில் நேரடிக்கைகளே இடம்பெறும்.

மேற்குறிப்பிட்டனவற்றில் உதாரணத் திற்காக ஒரு இராகத்திலும் ஒரு தாளத்திலும் அமைந்த தோடய மங்களப் பாடலும் ஜதிக் கோர்வைகளும் இவற்றிற்கான மிருதங் கத்தின் பங்களிப்பினையும் அறியலாம்.

நாட்டை ராகத்திலும் கண்டசாப்பு தாளத் திலும் அமைந்த முதலாவது பாடல் "ஜெயஜான கிரமண" எனத் தொடங்கி "ஜெய ஜெய" என முடிவுற்று இதற்கான அபிநயமும் முடிந்தபின் இதன் தீர்மானம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| த்ருகிடு தக | = | த்ருகுடுதகதக | // | த்ருகிடுதக | = | த்ருகிடுதகதக | // |
| த்ருகிடு தக | = | த்ருகிடு தகதக | // | த்ருகிடு தக | = | த்ருகிடு தகதக | // |
| த்ருகிடு தக | = | த்ருகிடு தகதக | // | தளாங்கு | = | ததிங்கிணதொம் | // |
| தாகுத | = | ணம், தரிதா | //; | தத | = | குதணம், தரி | // |
| தெய்;; | = | தாகுதணம், | // | தரிதத | = | குதணம், தரி | // |
| தாகுத | = | ணம், ததகுத | // | ணம், தணம் | = | கிணம், கிடதக | // |
| தரிகிட தொம், | = | ;கிடதகதரிகிட | // | தொம்;; | = | கிடதகதரிகிடதொம் | // |

என்றவாறு 4 - 6 எனும் கண்டசாப்பு தாள குறியீட்டுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்ட ஜதி கோர்வையின் அமைப்பு பின்வரும் வடிவில் அமைகின்றது.




மேற்குறிப்பிட்ட கோர்வையின்அமைப் பானது குறைப்பு நிலையில் கோபுச்சயதி வடிவிலும், தீர்மானம் சமயதி வடிவிலும் அமைந்துள்ளது. நாட்டிய நிகழ்வில் இச் சொற்கட்டுகளை அவ்வாறே நட்டுவாங்கத் துடன் இணைந்து மிருதங்கத்தில் வாசிக் கலாம். ஆனால் அபிநயத்தின் போது பாத நிலை, கைவீச்சு, முகபாவம் முதலியன பலவாறு இடம்பெறும். ஆகவே அவற்றிற்கு ஏற்றவாறே மிருதங்க ஜதிகளை இசைக்க வேண்டும். அவ்வாறெனில் நாட்டியத்தின் நுண்மைகள்வெளிப்பட்டுமேன்மேலும்மிளிர் வதனால் நாட்டியமாடுபவரும் பலவாறான மன உந்துதலினால் உற்சாகமடைந்து தமது திறன்களை வெளிப்படுத்த ஏதுவாகின்றது.

மேற்கூறிய அலகுகளில் இடம்பெற்ற சொற் கட்டுகளுக்கு நாட்டிய அமைப்பில் பாதத்தில் இவ்வாறு அமைகின்றது.

1. தத் . தெய் . தாஹா . தெய் ; தித் . தெய் , தாஹா.தெய்;
2. தெய்.யா.தெய்.யி. தெய். யா தெய். யி.
3. தி.தி.தெய். தி.தி. தெய்.
4. திதெய். திதெய்.
5. தெய். திதி தெய்.; தெய் திதிதெய். தெய். திதி. தெய். //

இவற்றிற்கு பின்வருமாறு மிருதங்கத்தில் பலவாறான ஜதி அமைப்பினை வாசிக்கலாம்.

1. தத் . தித் . தகஜெணு தாம் . தகதித் . தகஜெணு. தாம்,
2. தத். தித். தகஜெணு தகதித். தகஜெணு
3. தத். தித். தாம் தகதித். தாம்
4. ததாம் திதாம்
5. தாம் தரிகிட தோம். தாம் தரிகிட தோம். தாம் தரிகிட தோம். //

இவற்றை மேலும் விரிவுபடுத்தி ஆடல் சிறப்புற அமைவதற்கு பலவாறு விறுவிறுப்பான சொற்கட்டுகளை அதனதன் அலகுகள் சிதைவுறாது பாதத்தைக் குதித்துத் தட்டுதல், குதிக்காலைக் குத்தித் தட்டுதல் போன்ற வற்றிற்கு ஏற்றவகையில் வல்லினம் மெல்லி னமாக மிருதங்கத்தில் இசைக்கப்படும் ஜதி பங்களிப்பினை பின்வருமாறு அறியலாம்.

பாதத்தைத்தட்டுதல் மெல்லினமாகவும், குதிக்காலைத்தட்டுதல் வல்லினமாகவும் அமையும். அதற்கமையவே மேற்கூறிய சொற்கட்டுகளுக்குப் பின்வரும் சொற்கட்டுகள் அமைகின்றன.

1. தத். திக். கிடதகதரிகிடதாம். தகதிக். கிடதக தரிகிட தாம்,
2. தத். திக். கிடதக தரிகிட தகதிக். கிடதக தரிகிட
3. கிட தக தரி கிட தாம் கிடதகதரிகிட தாம்
4. தரிகிடதாம் தரிகிடதாம்
5. கிடதகதரிகிடதொம். கிடதகதரிகிடதொம்;. கிடதகதரிகிடதொம். //

இதில் ஐந்தாவதாக இடம்பெறும் "கிடதக தரிகிடதொம்" எனும் சொற்கட்டானது "ததிங்கிணதொம்" எனும் சொற்கட்டின் உருட்டுச் சொற்கட்டாகும். இது 5 ஜாதிகளின் அலகுகளிற்கேற்ப அமைந்து கோர்வைகளின் முடிவில் மகுடம் வைத்தாற்போல் அமையும். இச் சொற்கட்டு ஜதியானது நாட்டியத்தில் ஓர் பிரதான அம்சமாக விளங்குகின்றது.

"ததிங்கிணதொம்" சொற்கட்டிற்கு நாட்டி யத்தில் பாதநிலை "தெய். திதி தெய்" என அமைந்திருக்கும். இதற்கிணையான துரிதகாலச் சொற்கட்டு "கிடதக தரிகிடதொம்" கையிலே அபிநயிப்பது மரபாகும். இச்சொற் கட்டுகள் 3-4-5-7-9, 5-6-7-8-9 எனும் அலகுகளிற்கு நிருத்தப் பகுதியிலும் இடம் பெறும். சிலவேளைகளில் மட்டும் நிருத்தியப் பகுதியிலும் இடம்பெறும்.

இச்சொற்கட்டுகளை ஆடலாசிரியர் வாயி னால் கூறும்போது நாட்டியத்தில் இடம்பெறும் பாதநிலைகளுக்கு ஏற்றவகையிலே தாளம் அனுசரிக்கப்படும். ஆனால் மிருதங்கத்தில் இச் சொற்கட்டுகள் பாத்திரத்தின் உணர்வு அமைப்பிற்கு ஏற்றவாறு வல்லினம்

மெல்லினம் கலந்த நிலையில் இசைக்க வேண்டும். மெல்லினப் பாத்திரமாய் இருப்பின் வாயினால் கூறுவது போன்று அவ்வாறே வாசிக்கலாம். வன்மையான பாத்திரமாய் இருப்பின் பாத்திரத்தின் தன்மையை மேலும் சோபிக்கக் கூடிய வகையில் அவற்றிற்கு இணையான துரித சொற்கட்டுக்கள் மேற்கூறியவை போன்று துரித கதியில் இசைக்க வேண்டும்.

இதுபோன்று ஏனைய பாடல்களில் வரும் ஜதிக்கோர்வைகள் பலவிதமான ஜதி அமைப்பிலே இடம்பெற்று நாட்டியத்திற்கு வலுவூட்டலாம்.

2. பரதநாட்டிய உருப்படிகளிலே பிரதான உருப்படியாகிய "வர்ணம்" எனும் உருப்படி "ஆடல் வர்ணம்" என்றும் பதம் எனும் பாட்டாலும் சொற்கட்டு எனும் ஜதிகளாலும் அமைவதால் "பதஜதி" என்றும் விளம்ப காலத்தில் பாடப்படு வதால் "சௌக்ககால வர்ணம்" என்றும் பல பெயர்களைக் கொண்டு விளங்கு கின்றது.

நாட்டியப் பதவர்ணத்தில் பல்லவியை ஓரடி பாடியபின் சொற்கட்டுக் கோர்வைகளாகிய ஜதிகள் இடம்பெறும். இதுபோன்று பல்லவி மற்றும் அனுபல்லவியின் ஒவ்வோர் பாடல் வரி முடிவிலும் சொற்கட்டு ஜதிக் கோர்வைகள் ஆடல் ஆசிரியரின் தகைமையையும், நாட்டியம் ஆடுபவரின் ஆடற் திறனையும் வெளிக்காட்டும் வகையில் அமையும். இராகம், தாளம், மெய்ப்பாடு ஆகிய மூவகை சிறப்புக்களையும் பதவர்ணம் கொண்டு அமைவதால் இராக நுட்பங்களும் சொற்கட்டுக் கோர்வைகளும் நுட்பமிகு தாள விரிவாக்கம், நயமிகு மெய்ப்பாட்டுச் சுவைகளும் இவற்றில் அழகுற அமைகின்றன.

இவ்வர்ணத்தில் 'ஸ்வர ஜதிப் பதவர்ணம்' எனும் உருப்படி வகையையும் கே.என். தண்டபாணிபிள்ளை போன்றோர் இயற்றி ஜதிக்கு முதன்மை கொடுத்துள்ளார்கள்.

இரக்கம், அருள் போன்ற இளகிய உணர்ச்சிகளையும் வீரம், கோபம் முதலிய துள்ளல் உணர்ச்சிகளையும் தூண்டி எழச் செய்வது தாளத்தில் உள்ள கதியும், நடையுமாகும். இதற்கு உதாரணமாக கோப அபிநயத்தை முகத்திலோ கையிலோ அல்லது கால்களிலோ வெளிப்படுத்தும் போது அதற்கேற்ற வகையில் விறைப்பான உறைப்பான இறுக்கமான த்ருகிடு, திருதீம், தரிகிடதொம், கிடதகதரிகிடதொம், தளாம், தீம், ளளளளளளா திந்திந்திந்திந்தீம்; முதலான சொற்கள் இசைப்பது மரபாகும். சாந்தமான பாவங்கள் வெளிப்படுத்தும் போது மத்திம காலத்திலே "நாதின் தின்னா, தின் தின்னா, -தின், தின், தின், தின் - தின், தின் தத், தின் போன்ற சொற்கட்டுக்களுடன் இடது பக்கத் தொப்பியில் கமகம் நிறைந்த வாசிப்பு இடம்பெறல் வேண்டும். இவ்வாறு ஒவ்வோர் அபிநயங்களுக்கும் இவை சிறக்கும் வண்ணம் மிருதங்கத்திலும் பலவிதமான ஜதிகளை இசைத்து அதனை வேறுபடுத்திக் காண்பிக்கும் போது பதவர்ணமானது மெரு கூட்டப் பெற்று சிறந்த ரசனையை உருவாக் குவதற்கு ஏதுவாகின்றது.

பதவர்ணப் பாடலின் பல்லவியின் முதல் அடியைப் பாடிக்கொண்டிருக்கும் போது நடனமாடுபவர் காலில் "தகதிமி" என்னும் சொற்கட்டுக்கு ஏற்ற வகையில்

மூன்று காலங்களிலும் "த்ருகுடு" தட்டிக் கொண்டு இருக்கும் போது மூன்றாம் காலத் தாளமுடிவில் "தளாங்கு தகதிகு தகததிங் கிணதொம்" என நட்டுவனார் ஜதியினை சொல்லி லயத்தை நிர்ணயம் செய்தபின்னர் தீர்மான ஜதிக்கோர்வையின் முதலாம் காலம் தொடங்கும்.

நாட்டியத்தில் சிட்டாயிஸ்வரப் பகுதிக்கான கோர்வைகள் நிறைவானதும் அதற்குரிய சாகித்யம் இடம்பெறும். இதற்கு காலில் தட்டு மெட்டு அடவு (பஞ்சநடையில்) ஆடப்படும். இவ்வாறு சரணம் சரண ஸ்வரப் பகுதிகளுக்கும் தட்டுமெட்டு அடவு இடம்பெறும். வர்ணத்தின் இறுதிக்கோர்வை முடிவுற்றதும் சரணப்பாடலைப் பாடகர் பாடிக்கொண்டிருக்க நாட்டியமாடியவர் அத்தாளக்காலநடைக்கேற்ப நடந்து சென்று அரங்கில் மறைந்து விடுவார்.

மிருதங்கம் இசைப்பவர் அவ்வர்ணத்தில் இடம்பெற்ற (மேற்குறிப்பிட்ட) அனைத்தையும் மனதில் நிறுத்தி அதற்கு மகுடம் வைத்தாற் போல சில ஆவர்த்தனங்களைக் கொண்ட நீண்ட ஓர் தீர்மான ஜதியினை துரித காலத்தில் இசைத்து உருப்படியை முடிவுக்குக் கொண்டு வருவார்.

இவ்வாறு மேற்கூறிய தலைப்பில் உதாரணத்திற்காகக்கூறிய விளக்கம் போன்று ஏனைய சம்பிரதாய உருப்படிகளிலும் அதன் தன்கலைக்கூறுகளுக்கு ஏற்ப ஜதியின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. பாடல், ஸ்வரம், ஆடல், ஜதி, இவ் நான்கும் சேர்ந்த நாட்டியம் எனும் சொற் பதத்திற்கு "நாட்டு இயம்" அதாவது ஒன்றை நிலைநாட்டுவதற்காக இயம்புதல் (செயற்படல்) எனும் வரைவிலக்கணம் சுட்டி நிற்கின்றது.

நாட்டியமும் ஜதியின் பங்களிப்பும் பலவாறு நோக்கலாம்

1. தெய்வீகம் பொருந்திய நாட்டியம் என்ன என்பது.
2. இக்கலைக் கூறின் பிரதான வகிபாகம்
3. நாட்டியம் கூறும் உட்பொருள்
4. இதனால் மக்களின் வாழ்வியலின் நன்மைகள் மாற்றங்கள்
5. இதனை மேன்மேலும் ரசனைப்படுத்தும் வழிமுறைகள்
6. இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற் போல் விளங்குகின்ற அவசியம் எனக் கருதப்படும் ஜதியின் முக்கிய பங்களிப்பு

என்பனவற்றின் மூலம் ஓர் பாரிய பொறுப்பினை இவ் நாட்டியக்கலை கொண்டுள்ளது. இவற்றில் ஓர் அங்கமாகவும் பிரதான அம்சத்தைக் கொண்டுள்ளதாகவும் ஜதியின் பங்களிப்பு அமைந்திருக்கின்றது. இவ்விடயம் தெய்வீகத்தின் ஓர் அம்சமாகவும் விளங்குகின்றது. என்றால் அது மிகையாகாது. இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் எல்லா வகையான தோற்றமும் துடியதனின் (டமருகம், உடுக்கு) என்பது ஆன்றோர் வாக்கு. அதாவது டமருகத்தில் இருந்து ஒலிக்கும் ஜதி ஓசைகளில் இருந்தே உலக தோற்றம், இயக்கம் என்பன நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

# சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் சரித்திரம் படைக்கும் சான்றோர்கள்

**கலாபூஷணம் எஸ்.சிவானந்தராசா,**
பனிப்புலம்.

**நூ**ற்றுக்கணக்கான அறிஞர்களையும், கலைஞர்களையும், ஆன்மீக வாதிகளையும் பெற்றெடுத்தது நமது சங்கானைப் பிரதேச செயலர் பிரிவு. எண்ணிறைந்த தமிழறிஞர்கள், வேதாகம சிவாச் சாரியார்கள், இலக்கியவாதிகள், ஆன்மீகச் சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் எம்மத்தியில் வாழ்ந்து எமது மக்களின் நல் வாழ்வை ஆற்றுப்படுத்தினர். தமிழ்மொழியையே தமது உயிராகப் போற்றி, வளர்த்து, நல்ல மாணவர் பரம்பரையையும், நூல்களையும் தந்து சிறந்தவர்கள் தமிழறிஞர்கள் பலர்.

தமிழும் சமயமும் வாழ்க்கையின் கண்களாகப் போற்றி, ஆன்மீகச் செல்வத்தை விதைத்து, சொற்பொழிவாளர்களாக, திருத்தலங்கள் மீதான புராணங்கள், திருவூஞ்சல்கள், திருப்பதிகங்கள், திருப்பள்ளி எழுச்சிகள் பாடி திருப்புராணங்களின் உட்தத்துவத்தை வெளிப்படுத்தும் புராண படனங்களை நிகழ்த்தி சிவக்கோலம் பூண்டு தவக்கோலத்தை நிலைநாட்டிய ஆன்மீகவாதிகள் பலர்.

எம்மண் மீதுள்ள பந்தத்தால், எம்மண்ணின் சரித்திரங்களை ஆராய்ந்தவர்களாக, விடுதலைக்கீதங்கள் இசைப்பவர்களாக, புதுக் கவிதைகள் மூலம் சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் சிந்தனைச் சிற்பிகளாக கனவிலும் நனவிலும் சிந்திப்பவர்கள் பலர்.

எம்மண்ணின் பண்பாட்டம்சங்களை மரத்திலும், கல்லிலும் சிற்பங் களாக வடித்தும், சுவர்களில் ஓவியங்களாக வரைந்தும், அவற்றை நிஜங்களாக மனதில் பதிய வைக்கும் அற்புத சிற்பிகள், ஓவியர்கள் பலரைத் தந்து சிறந்தது எமது பிரதேசம்.

சரித்திர-இலக்கிய-புராணசமூக நாடகங்களை எழுதியும், கூத்துக்களை இயற்றியும் அவற்றை கதாபாத்திரங்களுக்கேற்பபழக்கி, அரங்கேற்றும் நாடக தயாரிப்பாளர்கள், அண்ணாவிமார்களையும் உயிரோட்டமாக மக்கள் மனதில் பதியவைக்கும் பல நடிகர்களையும் தந்து சிறந்தது எமது பகுதியாகும். திரைப்படத்துறையிலும் நடிகர்களையும், தயாரிப்பாளர்களையும் தந்து எம்மைப் பிரம்மிக்க வைத்தவர்கள் எமது மண்ணில் பிறந்து, சிறந்த மக்கள்தான் என்றால் மிகையாகாது.

இத்தனை சிறப்புமிக்க சான்றோர்கள் பலபேரில், ஒரு சிலரைப் பற்றிய சில பதிவுகளை அகரவரிசைப்படி இங்கு குறிப்பிட்டப்படுகின்றது.

### 1. அமரர் அமரசிங்கம் சின்னத்தம்பி (1945-2015), அராலி

இவர் மரச்சிற்பங்கள் செதுக்குவதிலும், நாதஸ்வர இசைக்கருவியைச் செய்வதிலும் வல்லுநர். 25 இற்கு மேற்பட்ட சித்திரத் தேர்களை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. சிற்பக்கலாநிதி, கலாபூஷணம் என பல கௌரவ விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

### 2. உமாபதிசிவம் வல்லிபுரம், வட்டுக்கோட்டை

1932இல் பிறந்த இவர் ஓர் கவிஞர். ஓவியர், நாடக ஆசிரியர் - வாத்தியக்கலைஞர். சிரேஷ்ட விரிவுரையாளர். இவருக்கு கலைமாமணி, நிருத்தியமூர்த்தி ஆகிய பட்டங்கள் கிடைத்துள்ளன.

### 3. அமரர் உருத்திரன் வைரமுத்து, தொல்புரம்

1939இல் பிறந்த இவர் ஓர் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். இசையாசிரியராகப் பணி செய்த இவருக்கு கலாபூஷணம், கலைஞானகேசரி பட்டங்கள் கிடைத்துள்ளன.

### 4. கந்தசாமி வேலுப்பிள்ளை, வட்டுக்கோட்டை

1929இல் பிறந்த இவர், சிற்பத்துறையில் வல்லுனர். இவருக்கு சிற்ப சிகாமணி, மகா சிற்பி ஆகிய பட்டங்களை வழங்கியுள்ளனர்.

### 5. திரு.கடம்பேஸ்வரன் நவரத்தினம், வட்டுக்கோட்டை

1947இல் பிறந்த இவர் ஓர் தமிழ்ப் பண்டிதர். பத்திரிகைகளில் கட்டுரை எழுதுதல், கவிதைகள் இயற்றுதல், இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றுதல், பட்டிமன்றம் கவியரங்குகளில் சிறப்புக்கவிதைகளை வாசித்தல் என்பன இவரது தமிழ்ப்பணிகளாகும். இவர் தமிழ் இலக்கண நூலொன்றை பட்டதாரி மாணவர்களுக்காக எழுதி உள்ளார்.

### 6. அமரர் கணபதி ஐயர்.வா (கி.பி 1709-1784), வட்டுக்கோட்டை

இயற்கையாகவே பாடும் திறமையுள்ள இவர், பல இலக்கிய வடிவங்களைத் தந்துள்ளார். வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளி திருவூஞ்சல் பதிகம், வீரபத்திரர் பதிகம் மற்றும் நாடகங்களான'வாளபிமன்', 'அலங்காரரூபன்','மலையக நந்தினி', 'அதிரூபவதி' என்பன அவற்றுள் சிலவாகும்.

### 7. திரு.கணபதிப்பிள்ளை சுப்பையா, சுழிபுரம், பொன்னாலை.

1939இல் பிறந்த இவர் 1963 இல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக "சங்கீத பூஷணம்" பட்டம் பெற்றவர். இவர் இசையாசிரியராக, சங்கீத கல்வி வட்டார அதிகாரியாக, பிரதி இசைக் கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். வட இலங்கை சங்கீத சபையின் உபதலை வர்களுள் ஒருவரான இவர் கலாபூஷணம், முதலமைச்சர் விருது, முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச ஊடான கௌரவ விருது யாழ் முத்து என பல விருதுகளைப் பெற்றவராவார்.

### 8. கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி சகோதரர்கள் - மூளாய்

மூளாய் மண்ணில் பிறந்து, நாதஸ்வரக் கலையைப் பயின்று, பல வருடங்கள் ஜோடி நாதஸ்வரக் கலைஞர்களாக மணம் பரப்பிய வர்கள். பிரபல நாதஸ்வர வித்துவான் V.கோதண்டபாணியின் பிள்ளைகளான இவர்கள் கலாபூஷணம் முதல் பல பட்டங் களைப் பெற்றனர். இலங்கையிலும் வெளி நாடுகளிலும் இசைப்பணிகள் செய்து வருகின்றனர்.

### 9. அமரர் கார்த்திகேசு கந்தையா (1908-1986), சுழிபுரம்

இவர் பிரம்மச்சரியத்தை மேற்கொண்டு, சுழிபுரம் வடக்கு ஜம்புநாதேஸ்வரர் கோயிலின் முன்பாக வாழ்ந்தவர். புராணங்களுக்கு பயன்சொல்வதையே இறை பணியாகக் கொண்டவர். கந்தபுராண யுத்த காண்ட உரை, கந்தபுராண உரை, கந்தரநுபூதி, தெய்வானையம்மன் திருமணப்பாடல் உரை என்பவற்றை எழுதினார். "யோகி" என்ற சிறப்புப் பட்டத்தை இவர் பெற்றுள்ளார்.

### 10. அமரர் குலசீலநாதன், M.A. (1940-2004), அராலி

"சங்கீதபூஷணம்" பட்டம் பெற்ற இவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசைக் கட்டுப்பாட்டாளராகக் கடமை ஆற்றினார். ஈழத்தில் வெளிவந்த "குத்து விளக்கு" படத்திலும் பின்னணிக் குரல் இசைத்து புகழ்படைத்த இவர் பல மெல்லிசைப் பாடல்களை வானொலியில் பாடியுள்ளார். சிங்கப்பூர் - மலேசிய வானொலியிலும் கலைஞராகப் பணியாற்றிய இவர், பாரிஸ் நகரத்தில் பல வருடம் இசைப்பணியாற்றினார்.

### 11. தம்பிராசா விசுவநாதர், அராலி

1920இல் பிறந்த இவர், சிற்ப சாஸ்திரங் களில் தேர்ச்சி பெற்றவர். சுமார் 50 இற்கு மேற்பட்ட கோவில் இராஜகோபுரங்களை நிர்மாணித்த பெருமை இவருக்குண்டு. கலாபூஷணம், சிற்பக் கலாநிதி, சிற்பக் கலாசிந்தாமணி ஆகிய கௌரவங்கள் இவருக்குக் கிடைத்துள்ளன.

### 12. தர்மலிங்கம் வயிரவப்பிள்ளை, சுழிபுரம்

1942இல் இளவாலையில் பிறந்த இவர், சோதிடம், புராணபடனம், சமயச் சொற்பொழிவு துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர். "கலைவாரிதி" பட்டம் இவருக்குக் கிடைத்துள்ளது.

**13. அமரர் துரைரத்தினம். ந. அராலி**

இவர் சிங்கள யுனானி, சித்த ஆயுள் வேதத்தையும் குரு-சிஷ்ய முறையில் பயின்றவர். இவர் சகலவிதமான நோய் களுக்கும் வைத்தியசேவை வழங்கியதுடன், மக்களுக்கேற்படும் மனக்கஷ்டங்களையும் நீக்கி பணிசெய்துள்ளார்.

**14. பாக்கியம் பொன்னுத்துரை, சுழிபுரம்**

1937இல் பிறந்த இவர் ஓர் பண்டிதை. ஆசிரியப் பணியினின்றும் ஓய்வுபெற்றவர். இலக்கிய-சமயச் சொற்பொழிவாற்றுவதிலும், இலக்கிய மரபுக்கவிதைகள் பாடுவதிலும் வல்லமை பெற்றவர். பல திருத்தலங்களுக்குத் திருவூஞ்சல்கள் பாடியுள்ளார்.

**15. திரு.பொன்னம்பலவாணர் தியாகராசா, பொன்னாலை**

1945இல் பிறந்த இவர், பத்திரிகையா ளராகவும் இலக்கிய சமயக் கட்டுரையாள ராகவும் பணி செய்தார். புராணபடன உரை சொல்வதிலும், சமயப் பிரசங்கங்கள் செய்வதிலும் திறமை படைத்தவர். தமிழ்-சமஸ்கிருத மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர் ஓர் ஆலயப்பூசகரும் கூட. சமய துறைசார் பல நூல்களை வெளியிட்டவராகவும் விளங்குகிறார்.

**16. அமரர் சிவபாலன் வைரமுத்து, சங்கானை**

1943இல் பிறந்த இவர், நடிப்புத்துறையில் சாதனைகள் படைத்தவர். 'தெய்வம்தந்த வீடு' திரைப்படத்தில் தவில் வித்துவா னாகவும், 'நெஞ்சுக்குத் தெரியும்' என்ற படத்தில் வில்லனாகவும், 'உயர்ந்த உறவு கள்' படத்தில் - கதாநாயகியின் தந்தை யாகவும், 'அன்றொருநாள்' படத்தில் வில்லனா கவும் நடித்துள்ளார்.

**17. அமரர் சிவானந்தம் முத்துச்சாமிப் பிள்ளை (1932-2006) - சங்கானை**

1932ல் பிறந்த இவர் ஓர் முதுகலைமாணிப் பட்டதாரி ஆசிரியராக, அதிபராக, வட்டாரக் கல்வி அதிகாரியாக, எழுத்தாளராக, சொற் பொழிவாளராக, பத்திராசிரியராக, நாடக நெறியாளராகப் பணியாற்றி புகழ்ப்பெற்றவர்.

**18. சிதம்பரநாதன் மாரிமுத்து, மூளாய்**

1946இல் பிறந்த இவர் 'மிருதங்க சங்கீதரத்தினம்' பட்டம் பெற்றார். மிருதங்க ஆசானாக, விரிவுரையாளராகப்பணிபுரிந்து, சுமார் 15 மாணவர்களின் அரங்கேற்றங்களை செய்த பெருமைக்குரியவர். கலாபூஷணம், ஆளுநர் விருதுகள் கிடைத்த இவர், பிரசித்தி பெற்ற வித்துவான்களுக்கு மிருதங்கம் வாசித்து சிறப்பித்து வருகின்றார்.

**19. அமரர் சிவசண்முகமூர்த்தி நடேசன் (1942-2012), சுழிபுரம்**

இவர் ஓர் கலைப்பட்டதாரி, இசைச் சொற்பொழிவு, கவிதை, வில்லுப்பாட்டு, துறைகளில் பிரசித்தி பெற்றவர். ஆசிரியராக, சமய ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி புகழடைந்தவர். கலாபூஷணம், பிரசங்க பூஷ ணம் என பல பட்டங்களைப் பெற்றவர்.

**20. அமரர் முருகவேள் அப்புக்குட்டி - வட்டுக்கோட்டை**

1925இல் பிறந்த இவர் ஓர் ஆசிரியராக, நாட்டுக்கூத்துக் கலைஞராக, அண்ணா வியாராகப் பணிபுரிந்து புகழடைந்தவர்.

இவருக்கு கலாபூஷணம், கலைவாரிதி கௌரவப் பட்டங்கள் கிடைத்துள்ளன.

**21. நடராசா செல்லப்பா, வட்டுக்கோட்டை**

1936இல் பிறந்த இவர், ஓர் சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞர். இவருக்கு கலைவாருதி, மத்தளபூபதி, அண்ணாவியார் பட்டங்கள் கிடைத்துள்ளன.

**22. நல்லதம்பி கதிரவேலு, வட்டுக்கோட்டை**

1942இல் பிறந்த இவர், நாட்டுப்பாடல், கவிதையாக்கம், நாடகம், கூத்து துறைகளில் பிரபல்யமடைந்துள்ளார். இவருக்கு கலை வாரிதி, கலாபூஷணம் பட்டங்கள் கிடைத் துள்ளன.

**23. அமரர் நல்லதம்பிப்புலவர்.மு (1894-1951), வட்டுக்கோட்டை**

இவர் ஓர் தமிழ்ப் பண்டிதர், ஆசிரியப் பணியில் இருந்தவர். இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர். 'கண்ணனெனும் சிறுதாம்பு', 'வெண்பா விடு தூது', 'மணித்தாய் நாடும் மரதனோட்டமும்', 'இயற்கை விளக்க காரணம்' ஆகிய நூல் களைத் தந்தவர்.

**24. அமரர் நாகப்பு கந்தையா (1939-2012), வட்டுக்கோட்டை**

இவர் நாட்டுக்கூத்து, கிராமியக் கலைக ளில் சிறந்து விளங்கினார். இவர் நாட்டுக் கூத்துக்கள் பற்றி தொகுத்து வைத்திருந்த எழுத்தாக்கங்களை, இவரது பெயரில் "வட்டுக் கோட்டை கூத்து – கிராமியக் கலைகள்" என்ற பெயரில் சங்கானை கலாசாரப் பேரவையினர் நூலாக வெளியிட்டனர். இவருக்கு அண்ணா வியார், கலைவாருதி, கலாபூஷணம் ஆகிய கௌரவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவரது பிள்ளைகள் இக்கலையை தொடர்ந்து கை விடாது பேணிவருகின்றமை அவதா னிப்புக் குரியது.

**25. அமரர் வயித்திலிங்கம்.தா (1900-1935), சுழிபுரம்**

1900இல் பிறந்த இவர் ஆசிரியராக, வக்கீலாக பணிபுரிந்தார். பறாளை முருகன் மேல் கீர்த்தனைகள், கும்மி, அகவல், விருத்தம், உலகநெறி விடயங்கள் அடங்கிய 'கந்தரணி மாலை' என்ற நூலை 1930இல் வெளியிட்டார்.

**26. அமரர் வரதராசன் தி.ச (1924-2006), பொன்னாலை**

இவர் ஓர் ஈழம் தந்த முன்னோடி எழுத்தாளர். வரதர் வெளியீடாக பல காத்தி ரமான நூல்களை அச்சிட்டு வெளியிட்டவர். ஆனந்தன், தேன்மொழி, வெள்ளி, புதினம், அறிவுக் களஞ்சியம் எனப் பல வெளியீடுகளைச் செய்தவர். அரசின் "சாகித்திய இரத்தினம்" விருதைப் பெற்றவர்.

**27. அமரர் நடராஜா செல்வநாயக முதலியார் (1908-1965), பண்டத்தரிப்பு**

இவர் ஓர் தமிழ்ப் பண்டிதர். ஆசிரியப் பணியை மேற்கொண்டவர். "பறாளை முருகன் அந்தாதி" என்ற நூலாக்கத்தை இவர் வெளியிட்டதாக தகவல்கள் உண்டு.

**28. C.S.S.மணிபாகவதர் (1918-1981), வட்டுக்கோட்டை**

இவர் ஓர் சிறந்த இசைச் சொற்பொழிவாளர். இலங்கை – இந்தியா – மலேசியா– சிங்கப்பூர் நாடுகளின் கோயில்களிலும் வானொலியிலும்

மகாபாரதம், இராமாயணம், சிறப்பு இசை விரிவுரைகளைத் தொடராகச் செய்தவர். நல்லைத் திருஞான சம்பந்த ஆதீன முதலாவது குருமகா சந்நிதானமாக விளங்கி சமாதியடைந்தவர்.

### 29. கலாநிதி வண.சுப்பிரமணியம் ஜெபநேசன் அடிகளார், வட்டுக்கோட்டை

இவர் சாவகச்சேரியில் 1940.03.23இல் பிறந்தவர். வட்டுக்கோட்டையில் தென்னிந்திய திருச்சபை பேராயராக 1993 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். 10இற்கு மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளதுடன், பல நூல்களிற்கு இதழாசிரியராகவும் மறுபதிப்பாசிரியராகவும் விளங்கி வருகிறார். 2016 ஆம் ஆண்டின் 'சாகித்திய ரத்னா' விருது இவருக்கு கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது

**உசாத்துணை நூல்கள்**

1. 'ஈழத்து கவிதைக் களஞ்சியம்'
2. யாழ்ப்பாண கலைஞர் விபரத்திரட்டு



# எண்ணிலா ஆண்டுகள் வந்திடு பணுவிலே!

க.பாலசுப்பிரமணியம்
அராலி-மேற்கு.

பனைவள மண்ணின் பெருமைகள் பனுவும்
'பணுவில்' மலரே வாழியவே!
அனைவரும் பயன்பெற அகிலத்தில் நீயும்
எண்ணிலா ஆண்டுகள் வாழியவே!

வலி.மேற்குப் பிரதேச செயலகத்தார்
வலி சுமந்துன்னை ஈன்றெடுப்பர்;
'பணுவில்' என்னும் பெயர் சூட்டிப்
பாங்காய் உன்னை உலவச்செய்வர்.

படித்தவரோடு பாமரரும்
பலதும் உன்னிடம் அறிவதற்காய்
துடிதுடித்துன்னைத் தேடிடுவர்,
என்றும் கண்ணாய்க் காத்திடுவர்.

வலிகாமம் மேற்கின் வரலாறும்
நலிவுறு கலைகளின் நயங்களொடு
பொலிவுறச் சுமந்து நீமலர்தல்
கலியுக காலத்தில் வேண்டியதே.

மொழியொடு கலையும் பண்பாடும்
அழிவுறா வண்ணம் பேணுதல்
விழிப்புடன் எம்முடன் இருப்பதற்கு
வழிகாட்டியாய் மலர்ந்து நீ வாழியவே!

முந்தையோர் காட்டிய வழிகளைக் களைந்து
அந்நிய மோகத்தில் ஆட்பட்ட எம்மவர்
சிந்தையை மாற்றிச் சீர்வழி காட்டும்
உந்தனின் பணியது வாழியவே!

விண்ணுல கடைந்த எம்மவரோடு
விண்ணவர் கூட வியந்திடும் வகையில்
ஆண்டாண்டு தோறும் தப்பாமல் மலர்ந்து
எண்ணிலா ஆண்டுகள் வாழ்ந்திடு
பணுவிலே!

# பனைவளமும், வளமான வாழ்வும்

**திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம்,**
அதிபர்,
யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலை,
சுழிபுரம்.

இந்து மகா சமுத்திரத்தின் முத்து இலங்கை. இதன் வடகோடியில் அமைந்துள்ளது யாழ்ப்பாணம். இவ்வளநகரின் வடமேற்கில் 5 கல் தொலைவில் சங்கானை. வலி.மேற்குப் பிரதேசம் தான் இவ்வூர்.

பனை வளத்தினால் சிறப்படைந்த திருவூர். கற்றவர்களும், மற்றவர்களும் பழங்கஞ்சியோடு பனாட்டையும் கரைத்துப் புசித்து வாழ்ந்தனர். சுப்பண்ணையும் தன்பசிக்கு பனாட்டை மறக்கவில்லை. சுவையாக உண்டு, சுதந்திரமாக உலா வந்தார்.

பனையோலைத் 'தடுக்கில்' பனாங்கழியைக் காயவிட்டு பனையோலைக் கூடையில் எடுத்து வைத்த பண்டமல்லவா! பனாட்டை நினைக்க இப்பவும் வாயூறுது. முன்னோர்களின் உன்னத ஆரோக்கியம். ஆன்மீக வலிமை, என்றும் இளமை.

கற்பகத்தரு உணவால் வயது நூறைத் தொட்டனர் எம்மவர். கடைசிக் காலத்திலும் நோயெனப் பாயில் படுக்கவில்லை. திருவிருட்சத்தால் 108 பயன்கள். பனம்பழம், நுங்கு, பிளாவில் பதநீர், பனங்கள் பத்திரமாய். உடற்சூடு தணிக்கும்.

பனங்கட்டி, கற்காரம் மகப்பேற்று மருந்து. நுங்கு, நுங்கின் மேல் பணுவில் நூலின் பெயரும் இதுதான்.

கூடியிருந்து பலாவிலை மடித்து மீனாட்சி பாட்டி காய்ச்சிய ஒடியற்கூழ் ஊதிக்குடிப்பதில் குதூகலம். உணவு உண்ண 'தட்டுவம்' பிட்டு அவிக்க நீற்றுப்பெட்டி மற்றும் பெட்டி, கடகம்.

பணம் வைக்க கொட்டப் பெட்டியுடன் 'வல்லுவம்',
படுக்கப்பாய், நெல்லடிக்க 'கதிர்ப்பாய்' நீர் இறைக்கப் பட்டையுடன் 'துலாக் கயிறு'
நெல் தூற்ற குல்லத்துடன், நெல் சேமிக்கக் கூடை,
பனங்கட்டிக் குட்டான், மூடுபெட்டி, விசிறி,
வெங்காயக் கூடையுடன் விளையாட்டுக் கிலுக்கி.

பனையோலை வீடு வேய, வேலியடைக்க
பலகைச் சட்டம் குடிசை அமைக்க,
கூரை போட எழுதிப்படிக்க 'பனையோலை ஏடு'
இன்னும் பல பயன்களைத் தந்திடும் பனைவளம்.

பனை என்னும் செல்வ விருட்சம் முளைத்து, நிலைத்து பட்டு சாய்ந்தும்
விறகு மனிதனுக்கு உதவுகின்றது.
பக்கத்து வீட்டு சுப்பண்ணை விரிவாக விளக்குகின்றார்.

போர் என்ற கொடிய பிசாசு வந்தது.
மறைந்தனர், எம் உறவுகள் பல இலட்சம்,
பறந்தனர், எம்மவர் வெளிநாடுகளுக்கு.
பனைகளும் தறிக்கப்பட்டு சாய்ந்தன.
பனையின் மாண்பும் மறைக்கப்பட்டது.
பனையின் பொருட்கள் இன்று விரும்பப்படாத நிலை
பனை விறகும் போச்சு, காஸ் [Gas] அடுப்பும் வந்தாச்சு.
பதைத்துக் கதறுகின்றார் சுப்பண்ணை நினைந்து.
பிளாஸ்றிக் பாத்திரங்கள் யாவும் இரசாயனங்கள்.

பீசா, கொக்கொக்கோலா, நூடில்ஸ் என பாஸ்றுட் [Fast Food]
உச்சரிக்க முடியாதவை, பற்பல புது நோய்கள் மரணத்துக்குத் தள்ளுகின்றது.
பார்த்துத், துடித்து, நோகின்றார் சுப்பண்ணை, புது உலகம் படைக்க அழைக்கின்றார்.

பனம் விதைகளை நாட்டுவோம்.
வடலிகளை எந்நாளும் பாதுகாப்போம்.
பனம் பண்டங்களை உண்டு மகிழ்வோம்.
பஞ்சம் பசி போக்கிடுவோம்.
நோய், நொடியற்ற சமூகத்தை உருவாக்குவோம்.

**"பனை வளமே வளமான வாழ்வளிக்கும்;**
**பனைகளை நம்பி பேணுவோம் வாரீர்!"**

# வித்தகா! நீதான் விடை பகர்வாய் அப்பா!

மு.ஜெயபாலசிங்கம்
அரசடி வைரவர் கோவிலடி, சங்கானை.

அவன் உதித்த அன்றே அவனது முகத்தைப்பார்த்தேன்
அது ஒரு விடிவெள்ளியாய் மின்னியது
மற்றொருநாள் அதே விடிவெள்ளி
முழுநிலவாய் ஒளிவீசியது.

அருகே சென்று அவன் மேனியைத் தொட்டால்!
அது ஒரு சொக்கத் தங்கம்தான்
தொட்ட விரலை முகர்ந்து பார்த்தேன்;
அதில் இருந்து வீசிய மணமோ மனதை மயக்கும் மல்லிகை வாசம்

சற்று நேரத்தில் அவனிடம் இருந்து
"பக்க்" என்று ஒரு சிரிப்பு வெடித்தது - பால் மணத்தோடு
அதன் கூடவே "சிர்ர்ர்" என்று சீறிவந்தது
அவன் சிந்திய தீர்த்தம்.

இப்போது புரிந்து விட்டது; அவன் முன்பு சிரித்ததன் அர்த்தம்
சரியான குறும்புக்காரன்தான் போங்கள்!
மெது மெதுவாய் சிவந்து வந்தது
அவனது"பொசு பொசு" கன்னம்.

சிவந்த முகம் சுருங்கி வந்தது
சிறுசிறு சிணுங்கலுடனே
பெற்ற மனசுக்கா அது புரியாது, உடன்
தன் உதிரப்பால் ஊட்டியது.

பொச்சடித்து பால் குடித்து வயிறு நிறைந்தது
ஏப்பம் விட்டபடியே அயர்ந்தது - குழந்தை தூங்கிவிட்டது
மேலும் அவன் அழுகை ரசிக்க என் மனசு துடித்தது
அடுத்த கணம் என் கண்கள் இரண்டும் மிக அருகே பறந்து சென்றன.

அவன் நெற்றியோ வளர்பிறைபோல் வளைந்து நின்றது
தலைமேலே அங்கும் இங்குமாக மயிர்கள் அலங்கரித்தன
வில் போன்ற புருவத்தின் கீழ் மயில் இறகால் - இருவிழியும் மூடியிருந்தன
கொவ்வைப்பழம் மஞ்சள் பூசி மூக்காய் நின்றது

மூக்கின் கீழ் அழகிய பட்டு ரோஜா இதழ்கள் - இரண்டு
அவற்றிலிருந்து முத்துக்கள் பாலாய் வடிந்தன
பளபளக்கும் நாடியின் கீழ் பழிங்கு கழுத்து
கழுத்து முதல் இடுப்புவரை துணிக்கவசம்.

துணிக்கவசத்தை நீர் உறிஞ்சிதுணி - கட்டிப்பிடித்தது
நீர் உறிஞ்சியின் கீழ் ஏதோ இரண்டு முன் பின் - ஆடியது
ஆம் அவைதான் சந்தன மரத்தில் கடைந்த அவனது கால்கள்
கால்விரல் பத்தின் நுனியிலும் முத்துக்கள் மின்னின.

இனி எதனைப் பார்த்து ரசிக்க
இதுதான் பால முருகனா - இல்லை
மாயக்கண்ணனா? புரியவில்லையே?
வித்தகா நீதான் விடை பகர்வாய் அப்பா.

*(உண்மையில் ஒரு பேரக்குழந்தையைப் பார்த்த பேரனாரின்
மனதில் தோன்றியவை, வரிவடிவில்.)*



# யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய சுற்றுலா மையங்களின் உள்ளார்ந்த வளங்கள் பற்றிய ஓர் மதிப்பீடு

**வி.டினேஸ்,**
அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், சங்கானை.

**1.0 முகவுரை**

**சு**ற்றுலா என்பது மக்கள் தமது சாதாரண வேலையிடங்களிலிருந்தும், இருப்பிடங்களிலிருந்தும் மன மகிழ்விற்கு ஏற்றதான பிறிதோர் இடங்களிற்கு தற்காலிகமாக நகர்ந்து செல்வதாகும் என Matheesan & Woll [1982] ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். அவ்வாறு தாம் செல்கின்ற இடங்களில் அவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும், தேவைகளையும் நிறைவேற்றி வைப்பதற்கென உருவாக்கப்படும் வசதிகளையும் அவர்கள் சுற்றுலாத் துறைக்குள் உள்ளடக்குகின்றனர்.

வளர்முக நாடுகளில் சுற்றுலாத்துறைக்கென பாரியளவான வாய்ப்புக்களைக் கொண்டதும், சிக்கலானதும் மிகக் குறைந்தளவில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருப்பதுமானதோர் கைத்தொழிலாக இருந்து வருவதாக Luvise Darnar [1976] விளக்கியுள்ளார். உலகின் மிகப்பெரிய கைத்தொழில் என பேசுபடுபொருளாகத் திகழ்கின்ற சுற்றுலாத் துறை பொருளாதார, சமூக முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் கணிசமான அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த பல தசாப்த காலமாக, பெரும்பாலான வளர்ந்த, வளர்முக நாடுகளில் மிக வேகமாக வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்துறையாக இது இருந்து வருகின்றது. எனவே சேவைப்பொருளாதாரத்தின் மிகப் பெரியதோர் கூறாக சுற்றுலாத்துறை உருவாகி வந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையங்கள் அதன் நிலைபேறான தன்மைக்குரிய உள்ளார்ந்த வளங்களினை எந்தளவிற்குக் கொண்டுள்ளன. அவ்வளங்கள் எவ்வளவு தூரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் நிலைபேறான தன்மை கொண்டதாக

இத்துறை வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புக்களை கண்டறிவதற்காகவும் சுற்றுலாப்பயணிகளைக் கவரக்கூடிய உள்ளார்ந்த வளங்களான சுற்றுச்சூழல் (இயற்கைத்தாவரப் போர்வை, கடற்கரை, குடிநீர் வசதி, தங்குமிடம், பிராந்திய கலாசாரம், பிராந்திய உணவு வகைகள், பிராந்திய விளையாட்டுக்கள்) போக்குவரத்து வலையமைப்பு மற்றும் சுற்றுலாத்துறையில் பயிற்சி பெற்ற ஆளணியினர் போன்றன எந்தளவிற்குத் தற்பொழுது ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பதனையும், எதிர்காலத்திலே இத்துறை விருத்தி நிலையினை அடைவதற்கு எந்தளவிற்கு சாத்தியமான சூழல் காணப்படுகின்றது. இது கலாசார பிறழ்வுகளினை ஏற்படுத்தி, மக்கள் மத்தியிலே எதிர்வினையான தாக்கங்களினை உருவாக்குமா, சுற்றுச்சூழல் ஆபத்தான நிலையினை நோக்கி நகர்வடையுமா போன்ற விடயங்களே குடாநாட்டில் பிரச்சினைகளாகவுள்ளன.

ஓர் நாட்டில் பிராந்திய அபிவிருத்தி நிலையானது ஏற்படுவதற்கு சுற்றுலாத்துறை கணிசமான பங்களிப்பினை ஆற்றுகின்றது. அதாவது இத்துறை விருத்தியுறும் பொழுது போக்குவரத்து வலைப்பின்னல் முறைகள், தகவல் தொடர்பாடலின் விரிவாக்கம், கடைத்தொகுதிகள் உள்ளிட்ட சேவை மையங்கள் விரிவாக்கம் அடைந்து பிராந்திய அபிவிருத்திக்கு வழிவகுக்கின்றது. [USAID 2009.Nov]

இலங்கை ஓர் விவசாயப் பொருளாதார நாடாகவுள்ளதனால், அவ் விவசாயத் துறையினை அடிப்படையாகக் கொண்டும் உல்லாசப் பயணத்துறையினை மேம்பாடு அடையச்செய்யலாம். [Malkanthi.S.H.P.,& Routry.J.K; 2011]. அந்தவகையிலே குறித்த விவசாயச் சூழலிலுள்ள பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல் போன்ற நிலைமைகள் இனங்கண்டறியப்பட்டு, விவசாயத்துறையோடு இணைத்து சுற்றுலாவியலினையும் தேசிய வருமானத்திற்கு சமாந்தரமான போக்கில் முன்னெடுத்துச் செல்ல முடிகின்றது. [Malkanthi.S.H.P.,& J.K.Routry; 2009].

எனவே சுற்றுலாவியல் உள்ளார்ந்த வளங்களினை அடிப்படையாகக் கொண்டு முறையான பகுப்பாய்வுகள் முன்னெடுக்கப்பட்டு, சுற்றுலாத்துறை நடவடிக்கைகளினை ஆரம்பிக்கும்பொழுது சாதகமானதோர் போக்குக் காணப்பட்டாலும், காலவோட்டத்தில் சில பகுதிகளில் இம் மையங்களது விருத்தி நிலை குறைவாகவே உள்ளதுடன், மக்கள் மத்தியில் அந்நியப்படுத்தப்படுகின்ற நிலையும் அறியப்பட்டுள்ளன.

இன்று குடாநாட்டிலுள்ள உல்லாசப் பயண மையங்கள் இலங்கை வாழ் மக்களையும், மற்றும் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களையும் கவரக்கூடியதாகக் காணப்படுகின்றதே தவிர, ஏனைய வெளிநாட்டுப் பயணிகளை, தென்னிலங்கை உல்லாச மையங்கள் கவர்ந்து ஈர்ப்பதனைப் போன்று இப்பகுதிகள் இன்னமும் விருத்தியுறாத நிலையே காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது.

### 2.0 யாழ். மாவட்ட சுற்றுலாத்துறையின் அவசிய நிலைமை:


யாழ்.மாவட்டத்தின் சுற்றுலாத்துறைக்கான உள்ளார்ந்த வளங்களின் தற்போதைய நிலையினை அறிதல், எதிர்கால அபிவிருத்திக்கு இவ்வளங்கள் எந்தளவிற்கு இயலளவினைக் கொண்டுள்ளன என மதிப்பிடல், சுற்றுலாத்துறையானது இப்பிராந்திய சுற்றுச் சூழலுக்கு ஏற்படுத்தும் தாக்கநிலை போன்றனவே ஆகும்.

## 3.0 யாழ். மாவட்டத்தின் இட அமைவு:

வடமாகாணத்தின் வடபகுதியில் சராசரியாக 929சதுர.km நிலப்பரப்பினைக் கொண்ட யாழ்.குடாநாட்டினை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. இக் குடாநாட்டின் இட அமைவு விளக்கப்படம் 3.1 இனூடாக இனங்காட்டப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் : 3:1**

யாழ்.மாவட்டத்தின் இட அமைவு.




மூலம் :http://en.wikipedia.org/wiki/Northern_province,_srilanka, 2015.

## 4.0 யாழ். மாவட்ட சுற்றுலா மையங்களது பகுப்பாய்வு முறை:

குடாநாட்டிலுள்ள சுற்றுலா வகைப்பாட்டின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மையங்களின் உள்ளார்ந்த வளங்கள் அடையாளப்படுத்தப் பட்டு, பெறப்பட்ட பண்புசார் தகவல்களிற்கு பெறுமானங்கள் வழங்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை எதிர்கால சுற்றுலா அபிவிருத்திக்கு இவ்வளங்கள் எந்தளவிற்கு இயலளவினைக் கொண்டுள்ளன என அறிவதற்கு ஒட்டுமொத்த மையங்களிலுமுள்ளபலம் [Strength], பலவீனம் [Weakness], வாய்ப்புக்கள் [Opportunities], அச்சுறுத்தல் [Threats]போன்றன பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

## 5.0 யாழ். மாவட்டத்தின் சுற்றுலா மையங்கள் தொடர்பான தற்போதைய நிலைமை:

யாழ்.மாவட்டத்தில் அடையாளப் படுத்தப்பட்ட 25 சுற்றுலா மையங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை கரையோர, கலாசார, வரலாற்று ரீதியானவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் கரையோரச் சுற்றுலாவில் 05 பிரதான தளங்களும், கலாசாரச் சுற்றுலாவினுள் 11 மையங்களும், வரலாற்று ரீதியான 9 மையங்களும் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இம் மையங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள தங்குமிடம், போக்குவரத்து வலையமைப்பு, இட அமைவு, சுற்றுச்சூழலியற்தன்மைகள், அனர்த்த முகாமைத்துவத்திட்டம் போன்ற

உள்ளார்ந்த வளங்களினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கரையோரச் சுற்றுலாவில் 05 மையங்கள் குடாநாட்டில் இருந்தாலும், காங்கேசன்துறைக் கடற்கரையே அதிக மான உள்ளார்ந்த வளங்களினை (52%) தன்வசம் கொண்டுள்ளது எனவும், சாட்டிக் கடற்கரைப்பகுதியில் ஒப்பீட்டளவில் உள் ளார்ந்த வளப்பரம்பல் குறைவாகவுள்ளதும் (29%) அறியப்பட்டுள்ளது.

கலாசாரச் சுற்றுலாத்துறையினைப் பொறுத்தவரையில், இங்குள்ள 11 தளங்க ளினையும் ஒப்பிடும் பொழுது, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் மிகையான உள் ளார்ந்த வளங்களினை (31%) ஒருங் கிணைத்துள்ளது. ஆனால் சுற்றுச்சூழல் ரீதியாக பசும் போர்வைகளின் பரம்பல் குறைவாகக் காணப்படுவதும் உள்ளார்ந்த வளங்களிலுள்ளதோர் குறைபாடாகவே யுள்ளது. இக் கலாசார மையங்களில் குறைந்தளவான வளங்களினை 4 மைய ங்கள் (செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், நயினை நாகபூசணி ஆலயம், நயினை நாக விகாரை) ஒரேயளவான சதவீதத்தினைக் (18%) கொண்டு பரம்பியுள்ளன.

அதேபோன்று வரலாற்று ரீதியான மையங்களில் யாழ்ப்பாண நூலகமே அதிக உள்ளார்ந்த வளங்களினைத் (45%) தன்னகத்தே கொண்டு, மக்களினை ஈர்த்து குடாநாட்டின் சுற்றுலாத்துறை விருத்திக்கு பங்களிப்புச் செய்கின்றது. மாறாக கந்தரோடை விகாரைப்பகுதியில் இவ்வளங்களது ஒருங்கு குவிவுத்தன்மைகள் குறைவாகவுள்ளமையும் (12%) கண்டறியப்பட்டுள்ளது. இதுவே குடாநாட்டின் ஒட்டுமொத்த சுற்றுலா மையங்களிலும், மிகக் குறைந்தளவிலான உள்ளார்ந்த வளச் சதவீதத்தினைப் பதிவு செய்த மையமாகவும் திகழ்கின்றது.

இதனடிப்படையில் குடாநாட்டிலுள்ள சுற்றுலா மையங்களின் உள்ளார்ந்த வளங் களினை மதிப்பீடு செய்யும் பொழுது குறிப்பாக காங்கேசன்துறைக் கரையோரத்தினை மையமாகக் கொண்ட கரையோரச் சுற்றுலாவே அதிக உள்ளார்ந்த வளங்களைத் தன்வசம் கொண்டு (52%) மிகையான உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளை ஈர்த்துக்கொள்ள, அதனை அடுத்து வரலாற்றுச் சிறப்புப்பெற்று விளங்குகின்ற யாழ். நூ லகம் (45%) பதிவு செய்து இரண்டாவது பாரிய உள்ளார்ந்த வளங்கள் நிறைந்த மையமாகவும், மூன்றாவதாக யாழ். கோட்டையும் (38%) அதனையடுத்து கலாசார மையமான மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயமும் (31%) விளங்குகின்றது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்திலுள்ள 25 பிரதான மையங்களிலும் உள்ள உள்ளார்ந்த வளங்களினை அடிப்படையாகக் கொண்டு மிகத்தரமானவை (75% மேற்பட்டவை), தரமானவை (50 தொடக்கம் 75% வரை), சாதாரணம் (50% இலும் குறைந்தவை) என வகைப்படுத்தும் பொழுது, காங்கேசன்துறைக் கடற்கரை சுற்றுலா மையம் மட்டுமே 52% இனை பதிவுசெய்து தரமானவை எனும் நிலையில் உள்வாங்கப்பட்டுள்ளது. மாறாக ஏனைய அனைத்து மையங்களும் உள்ளார்ந்த வளங்களின் அடிப்படையில் சாதாரண தரத்திலேயே உள்ளமை இனங் கண்டறியப்பட்டுள்ளது. மிகத்தரமானவை எனும் அளவில் எந்தவோர் மையங்களும் உள்ளார்ந்த வளங்களினைக் கொண் டிருக்கவும் இல்லை, மாறாக அங்குள்ள வளங்கள் வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்படவுமில்லை.

இத்தகைய சுற்றுலா மையங்களது உள்ளார்ந்த வள மதிப்பீடுகள் அட்டவணை இலக்கம் : 01 இனூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையங்களின் உள்ளார்ந்த வளங்களது மதிப்பீடு

| | மையங்கள் | தங்குமிடம் | | | போக்குவரத்து வலையமைப்பு | | | இட அமைவு | | | | சுற்றுச் சூழலியற் தன்மைகள் | | | | | | | | | | அனர்த்த முகாமைத்துவத் திட்டம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | திண்மக் கழிவு- வெளியேற்றம் | | தூய்மையான மண் | | | தரைக்கீழ் நீரின் தன்மை | | பசும் போர்வைகளின் பரம்பல் | | | | | | | |
| | | மூன்று நட்சத்திர விடுதி (10) | இரண்டு நட்சத்திர விடுதி (4) | சாதாரண உணவகம் (1) | தொடருந்து (10) | பிரதான வீதி (4) | சிறு வீதி (1) | கரையோரம் (1) | கரையோரத்தினை அண்மித்து (5) | நகரம் (3) | கிராமம் (1) | உள்ளது (10) | அற்றது (5) | உள்ளது (3) | ஓரளவு (2) | அற்றது (0) | தூய்மை (5) | அற்றது (0) | உள்ளது (3) | ஓரளவு (2) | அற்றது (0) | இடிமின்னல் (10) | சூறாவளி (10) | ஆழிப்பேரலை (10) | கடலலை ஏழுகுதல் (10) | மொத்தம் (100) |
| | **கரையோரச் சுற்றுலா** | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 1 | கசூரினா கடற்கரை | | | ✓ | | ✓ | ✓ | ✓ | | | | ✓ | | | ✓ | | | ✓ | | ✓ | | | | | ✓ | 30 |
| 2 | காங்கேசன்துறை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | | ✓ | | ✓ | | | | ✓ | | | | | 52 |
| 3 | சாட்டி | ✓ | | | | ✓ | ✓ | ✓ | | | | ✓ | | | ✓ | | | ✓ | | ✓ | | | | | | 29 |
| 4 | மணற்காடு | | | | | ✓ | ✓ | ✓ | | | | ✓ | | ✓ | | | | ✓ | | ✓ | | | | ✓ | | 30 |
| 5 | கடற்கோட்டை | | | | | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | | ✓ | | | ✓ | | | ✓ | | | ✓ | | 32 |
| | **கலாசார சுற்றுலா** | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 6 | நல்லூர் கந்தசுவாமி கோவில் | | | ✓ | | ✓ | ✓ | | | ✓ | | | ✓ | | | ✓ | ✓ | | | | ✓ | | | | | 19 |
| 7 | மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் | | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | | | ✓ | ✓ | | | | ✓ | | | | | 31 |

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | ஈழத்துச் சிதம்பரம் | | | | | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | ✓ | | | | ✓ | | ✓ | | | | | 20 |
| 9 | செல்வச் சந்நிதி ஆலயம் | | | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | | ✓ | | | ✓ | | | ✓ | | | | 18 |
| 10 | பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் | | | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | | | ✓ | | ✓ | | ✓ | | | | | 18 |
| 11 | கீரிமலை தீர்த்தம் | | | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | | | ✓ | | ✓ | | | ✓ | | | ✓ | 26 |
| 12 | கீரிமலை நகுலேஸ்வரம் | | | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | | | ✓ | | ✓ | | | ✓ | | | | 21 |
| 13 | வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம் | | | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | ✓ | | | | ✓ | | ✓ | | | | | 21 |
| 14 | நயினை நாகபூசனி ஆலயம் | | | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | | | | | ✓ | | ✓ | | | | | 18 |
| 15 | நாக விகாரை | | | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | | | | | ✓ | | ✓ | | | | | 18 |
| 16 | ஆரியகுள விகாரை | | ✓ | | | ✓ | ✓ | | | ✓ | | | ✓ | | | | ✓ | | | | ✓ | | | | 22 |
| | வரலாற்றுச் சுற்றுலா | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 17 | யாழ்.நூலகம் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | | ✓ | | | ✓ | ✓ | | | ✓ | | | | | | 45 |
| 18 | யாழ்.கோட்டை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | | | | ✓ | ✓ | | | | ✓ | | | | | 38 |
| 19 | சங்கிலியன் தோப்பு | | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | ✓ | | | ✓ | ✓ | | | | ✓ | | | | | 23 |
| 20 | மந்திரிமனை | | | ✓ | | | ✓ | | ✓ | | | ✓ | | | ✓ | ✓ | | | | ✓ | | | | | 15 |
| 21 | யாழ்.நூதனசாலை | | | ✓ | | | ✓ | | ✓ | | | ✓ | | | ✓ | ✓ | | | | ✓ | | | | | 15 |
| 22 | கந்தரோடை | | | | | | ✓ | | | ✓ | | ✓ | | | ✓ | ✓ | | | | ✓ | | | | | 12 |
| 23 | ஜம்புகோளப் பட்டினம் | | | | | ✓ | ✓ | ✓ | | | | ✓ | | | ✓ | ✓ | | | | ✓ | | | | | 20 |
| 24 | நெடுந்தீவு பெருக்குமரம் | | | ✓ | | ✓ | ✓ | ✓ | | | | ✓ | | | ✓ | ✓ | ✓ | | ✓ | | | | | | 18 |
| 25 | வட்டுக்கோட்டை போர்த்துக்கேயர் கால கிறிஸ்தவ தேவாலயம் | | | | | | ✓ | | | ✓ | | ✓ | | | ✓ | ✓ | | | ✓ | | | | | | 14 |

மூலம் - கள ஆய்வு 2015

எண்களின் பெறுமானம் :- சுற்றுலா மையங்களின் உள்ளார்ந்த வளங்களின் அடிப்படையில் கொண்டுள்ளது.

இவ்வாறு உள்ளார்ந்த வளங்களின் தன்மைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பின்னர், எதிர்கால அபிவிருத்திக்கு இவ்வளங்கள் எந்தளவிற்கு இயலளவினைக் கொண்டுள்ளன என்பதனை இனங் கண்டறிவதற்காக SWOT பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டு, குடாநாட்டிலுள்ள சுற்றுலா மையங்களது பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல் நிலைமை போன்றன கண்டறியப்பட்டுள்ளன. இவை அட்டவணை இலக்கம் - 02 இனூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**குடாநாட்டில் உள்ள சுற்றுலா மையங்களின் பொதுமைப்படுத்தப்பட்ட SWOT பகுப்பாய்வு**

அட்டவணை இல: 02

| பலம் [Strength] | பலவீனம் [Weakness] | வாய்ப்புக்கள் [Opportunities] | சவால்கள் [Threats] |
|---|---|---|---|
| புவியியல் ரீதியான வளங்களின் ஒருங்கிணைவு. Eg: கடலகவளம், தரைக்கீழ் நீர்வளம் | கடந்த 30 வருட யுத்தநிலைமையால் மக்களது இடப்பெயர்வு. | வடமாகாணத்திற்கு என தனித்துவமான அரசினது உதயம். | மத்திய, மாகாண அரசுகளிற்கு இடையிலுள்ள உறவுகளின் பலவீனத்தன்மை. |
| வரலாற்று ரீதியான தளங்களின் ஒருங்கிணைவு. Eg: யாழ் நூலகம் | பொதுமக்களது பங்களிப்பு இத்துறையில் குறைவாக உள்ளமை. | அதிகமானோருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளமை. | உயர்பாதுகாப்பு வலயங்கள். Eg:வலிகாமம் வடக்குப் பகுதி |
| கலாசார மையங்களது செல்வாக்கு. Eg: மாவைக்கந்தன் ஆலயம் | வெளிநாட்டு, உள் நாட்டு நிறுவனங்கள் முதலீடுகளை மேற் கொள்ள ஆர்வமின்மை | அன்னியச் செலாவணி வருமானம் அதிகரிப்பு. | பெரும்பான்மை இனவாத, மதவாத சக்திகளிடையே, யாழ்.மாவட்டம் தொடர்பான சந்தேக நிலைமை. |
| புலம்பெயர் வாழ்மக்களது ஆதரவு. | மேலிருந்து கீழான அபிவிருத்தித் திட்ட அமுலாக்கம். | உள்நாட்டு உற்பத்திகளினை ஏற்றுமதி செய்யலாம். | உல்லாசத்துறைக்கென அரச நிதி ஒதுக்கீடுகள் ஏனைய மாகாணங்களைப் போன்று கிடைக்கப்பெறாமை. |
| பிராந்திய கலாசாரத்தின் செல்வாக்கு. | சுற்றுலா மையங்கள் தொடர்பான திட்டமோ / வழிகாட்டல்களோ இதுவரை சிறப்பாக இன்மை. | சமூக, கலாசார விழுமியங்களினை பரஸ்பரம் அறிந்து கொள்ளக் கூடியதாயிருத்தல். | மறைமுகமான பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலைமைகள், இதனால் வெளிநாட்டு, தனியார் கம்பனிகள் முதலீடுகளினை இத்துறை மீது இடுதலிலுள்ள அச்சநிலைமை. |
| யாழ்ப்பாண பாரம்பரிய உணவுவகைகள். | மக்கள் மத்தியில் இத்துறை தொடர்பில் போதியளவு விழிப்புணர்வு இல்லாமை. | சர்வதேச ரீதியான மொழிகளினை அறிந்து கொள்ளலாம். | ஒரு இனக்குழுமம்(தமிழர்) மட்டுமே செறிவாக உள்ளமை. |
| பாரம்பரிய விளையாட்டுக்களின் பரம்பல். | - | பிரதேச ரீதியான அபிவிருத்தி ஏற்படல். | துறை ரீதியான பயிற்சி பெற்றவர்களின் கிடைப்பனவுகள் குறைவாக உள்ளமை. |
| - | - | யாழ்.மாவட்டத்தில் சுற்றுலாத் துறைக்கென தனித்துவமான அலகு களை உருவாக்கலாம். | சுற்றுலாத்துறை தொடர்பான வளங்களின் திரட்டு தொடர்பான விடயங்கள் பரிபூரணமாக இன்மை. |
| - | - | உல்லாசத் தளமுள்ளபகுதி/ நகரினை அண்மித்து குறைந்தது மூன்று நட்சத்திர விடுதிகளையாவது நிர்மாணித்தல். | சுற்றுலாத்துறைக்கென பயிற்சிக் கல்லூரிகள் இன்மை. |

மூலம் : கள ஆய்வு, 2015.

யாழ்ப்பாணத்தில் கரையோரச் சூழலினை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா மையயங்களினைப் பொறுத்தவரையில், கடலக உள்ளார்ந்த வளங்கள் ஏனைய நாடுகளில் பிரயோகிக்கப்படுவதனைப் போன்று முற்று முழுதாகப் பயன்படுத்தப்படாமல், வரையறுக்கப்பட்ட நிலையிலேயே பயன்படுத்தப்படுகின்றது. அதேவேளை இங்குள்ள உள்ளார்ந்த வளங்கள் வீண்விரயம் செய்யப்படுகின்ற நிலையும் காணப்படுகின்றது.

இங்குள்ள வரலாற்று மையயங்களினை சிறந்தமுறையில் பயன்படுத்துவதற்கான சூழல் முன்பு அமைந்திருக்கவில்லை. இவற்றினை சுற்றுலாவியலிற்கு ஏற்புடையதாகப் பயன்படுத்துவதற்கு மத்தியமாகாண அரசுகள் இன்று வரை உள்ளார்ந்த வளப் பயன்பாட்டிற்கு கூடிய கவனம் செலுத்தாமை பலவீன நிலையாக இனங்கண்டறியப் பட்டுள்ளது.

கலாசார விழுமியங்கள், அவற்றினை செழுமையாகப் பயன்படுத்தும் வளங்கள் போன்றன குடாநாட்டில் காணப்படுகின்றன. குறிப்பாக பாரம்பரிய விழாக்கள் இக்கலாசார மையயங்களில் நடந்தேறினாலும், பயணிகளை ஈர்க்கும் வகையில் உள்ளார்ந்த வளங்களைப்பயன்படுத்தாமை பலவீனமாக வேயுள்ளது. அத்துடன் இம்மையயங்களது பழமை போற்றும் தன்மை குறைவடைந்து வருகின்றமையும், மக்களிடையே இது தொடர்பான விழிப்புணர்வுகள் இன்மையும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாணத்தின் சுற்றுலாத் துறையின் வளங்கள் வரையறுக்கப்பட்ட நிலையில் பயன்படுத்தப்படுவதற்கு, பெரும்பான்மை இனவாத, மதவாத சக்திகளிடையே யாழ்.மாவட்டம் தொடர்பான சந்தேக நிலைமை, மறைமுகமான பாதுகாப்பு அச்சுறுத்தல், வெளிநாட்டு, தனியார் துறையினர் முதலீடுகளை இத்துறை மீது இடுவதிலுள்ள அச்சநிலை, அரச நிதி ஒதுக்கீடுகள் பிற மாவட்டங்களினைப் போன்று கிடைக்கப்பெறாமை போன்ற அச்சுறுத்தல் நிலைகளே காரணமாகவுள்ளது.

**6.0 முடிவுரை:**

யுத்தத்தின் பின்னர் தென் இலங்கையிலிருந்தும், புலம்பெயர் பகுதிகளிலிருந்தும் அதிகளவான பயணிகள் யாழ்ப்பாணத்தின் நிலைமைகளை நேரில் பார்வையிட வருகை தந்ததனால், அம்மக்களது வருகையினை அடிப்படையாகக்கொண்டு அரச, அரசசார்பற்ற ரீதியான தங்குமிடங்கள், உணவகங்கள் போன்றன நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இவை விருத்தியுறும் பொழுது, இங்கு சுற்றுலாத்துறை விருத்தி பெற்றுவிட்டது எனக் குறிப்பிட்டுக் கொள்ள முடியாது. எனவே அதிகளவான உள்ளார்ந்த வளங்கள் சமகாலத்தில் ஒருங்கிணைந்த நிலையில் காங்கேசன்துறை கரையோரப்பகுதி காணப்பட்டாலும், அது இலங்கைப்பாதுகாப்புப் பிரிவினரின் கட்டுப்பாட்டில் உள்ளமையும், உயர்பாதுகாப்பு வலயம் எனும் போர்வையில் முடக்கப்பட்டுள்ளமையும் பாரிய அச்சுறுத்தல் நிலையாகவே அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. அத்துடன் குடாநாட்டில் உள்ள அதிகளவான மையயங்களிலும், அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான திட்டங்கள் சிறப்பாக இன்மையும், வினைத்திறனான வகையில் திண்மக்கழிவு வெளியேற்றம், தரைக்கீழ் நீரின் தரநிர்ணயம் பேணல், பசும்போர்வைகளினை சூழலிற்கு இயைபான முறையில் வளர்த்தெடுத்து அதன் பிரகாரம் சூழலியல்சார் சுற்றுலாத்துறைக்கு

வழிவகுத்தல் உள்ளிட்ட செயற்றிட்டங்கள் கணிசமான அளவு குறைவாக உள்ளமையும் அறியப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தொகுத்து நோக்கும் பொழுது, யாழ்ப்பாணத்தில் கரையோரச் சுற்றுலா, வரலாற்றுச் சுற்றுலா, கலாசார சுற்றுலா போன்றன சிறப்புற பயணிகளினை ஈர்த்துக் கொண்டாலும், அங்குள்ள உள்ளார்ந்த வளங்கள் வினைத்திறனாகப் பயன் படுத்தப்படாமை கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் நிலைபேறான சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு இப்பிரதேசம் நகர்வதற்கு பல கட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களினை மேற்கொண்டாலே தவிர, மாறாக சுற்றுலாத் துறை விருத்தி அடைவதற்கான சாத்தியக் கூறுகள் இம்மாவட்டத்தில் இல்லை என்பது இனங் கண்டறியப்பட்டுள்ளது.

**உசாத்துணை நூல்கள் :**


- குகபாலன்.க, இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிற்றுறையின் அண்மைக் காலப்போக்குகள், புவியியலாளன், இதழ் 16-17, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, பக்.74-81.
- Abeysinghe.U.M, [2011]. Towards Sustainable Eco Tourism, Maduganga: University of Jeyawarthanapura, pp1-4.
- Aslam,M.S.M [2004], An Empirical Study on Reasoing for and Determinants of Sustainable tourism Development : A Case Study of Kandy, M.Sc Dissertation, Colombo: Sri Jayawardenapura University.
- Pavvin Dashti, Iraj Hassanzad Navroodi, Samane namdari, Mahdiesh Shamseh, Mehrdad khamoham madi [2013]., "Combining Multi – Criteria Decision – Making & Geographical Information Systems for Identifying Appropriate Types of Recreation Sites", Reef Resources Assessment & Management Technical Paper, Vol.38, PP: 312-324.
- United Nations World Tourism Organisation [UNWTO], International Tourism 2010: Muliti Speed Recovery; http//www.unwto.org [assessed. March.2011]




# பணுவிலாய் நம்மைக் காக்கும் செயலகமே வாழி! வாழி!

ஆசுகவி,
மூளாய்.

வலிகாமம் மேற்கு என்றோர் வளர்பிர தேசம்தன்னில்
நலிவுற்று மெலிவுற்றோற்காய் நாளுமே சேவை செய்து
கலியிதில் கிலியும் போக்கி பணுவிலாய் நம்மைக் காக்கும்
பொலிவுறு பிரதேச செயலகம் வாழி! வாழி!

வீடின்றி வாழ்வோர் ஏங்கும் ஏக்கத்தின் முன்னே தோன்றி
தேடியோர் வீடுகட்டத் திரவியம் அனைத்துமீந்து
நாடியே நாளும்வந்து பணுவிலாய் நம்மைக்காக்கும்
ஈடிலாப் பிரதேச செயலகம் வாழி வாழி!

விதவையாய்ப் போனோர் வாழ்வில் விடிவெள்ளி போலத்தோன்றி
உதவிடும் கரங்கள் நீட்டி உயர்ந்தோங்கு பணிகள் செய்து
பதவியின் பலத்தால் வந்தே பணுவிலாய் நம்மைக் காக்கும்
இதந்தரு பிரதேச செயலகம் வாழி வாழி!

முதுமைக்குள் வீழ்ந்தோமென்று முடங்கியே போனோற்கெல்லாம்
பொதுநிதி அள்ளியீந்து பொலிவுடன் வாழச் செய்து
புதுவாழ்வு தந்தேநாளும் பணுவிலாய் நம்மைக் காக்கும்
மெதுமைசேர் பிரதேச செயலகம் வாழி வாழி!

பிறப்போடு இறப்பும் விவாகப் பதிவும் முறையாய்ச் செய்து
மறக்கவே முடியாக் காலம் முழுவதும் பாதுகாக்கும்
திறத்தினால் இறக்கைக்குள்ளே பணுவிலாய் நம்மைக்காத்த
சிறப்புறு பிரதேச செயலகம் வாழி வாழி!

உணவின்றி வாடுவோற்கு நிவாரணம் பலவுமீந்து
கணமெலாம் அவரைக்காக்க காரியம் பலதுமாற்றி
பணபலம் பார்த்திடாமல் பணுவிலாய் நம்மைக்காக்கும்
குணத்துயர் பிரதேச செயலகம் வாழி வாழி!

வெள்ளமும் மழையும் கண்டு வேட்டியை மடித்துக்கட்டி
துள்ளியே அதனுள் சென்று துவள்வோரைத் தூக்கிவந்து
அள்ளியே அணைத்தெடுத்துப் பணுவிலாய் நம்மைக் காக்கும்
தெள்ளிய பிரதேச செயலகம் வாழி வாழி!

சிறுவரைக் காக்கவென்றோர் சிறப்புறு பிரிவுமாக்கி
மறுவழி பிறழ்வோர் தம்மை நேர்வழி நடக்க வைத்து
பெறுமதி அவர்க்குமீந்தே பணுவிலாய் நம்மைக் காக்கும்
உறுதி சேர் பிரதேச செயலகம் வாழி வாழி!

ஓய்வதன் பின்னாலந்த ஊதியம் பெறுவோற் கெல்லாம்
தேய்விலாச் சேவை செய்ய தேடியோர் சங்கம் வைத்து
தாய்மைசேர் கரங்கள் நீட்டி பணுவிலாய் நம்மைக் காக்கும்
தூய்மைசேர் பிரதேச செயலகம் வாழி வாழி!

போர் ஒன்று தொடங்கியெங்கள் வேர்களை அழித்த வேளை
சீர்மிகு பணியாரோடு சிறப்புறு சேவை செய்தே
பார்மிசை தமிழர்வாழ பணுவிலாய் நம்மைக் காக்கும்
நேர்மையுயர் பிரதேச செயலகம் வாழி வாழி!

வரலாற்றுச் சிறப்பினோடு வளர்ந்திடும் வளத்தையெல்லாம்
சிரமது கொடுத்தே காத்து அரங்கது தானுமேற்றி
நிரந்தரம் நமக்கே தந்து பணுவிலாய் நம்மைக் காக்கும்
கரத்தினாள் பிரதேச செயலகம் வாழி வாழி!

கிராமத்துச் சேவையாற்றும் உத்தியோக நிலையாரோடு
தராதரத்தோடு நல்ல சமுர்த்திசேர் பணியார் கூட்டி
வராவரம் நாளும் நல்கி பணுவிலாய் நம்மைக்காக்கும்
திராணிசேர் பிரதேச செயலகம் வாழி வாழி!

கலைஞர்க்குக் கவசமாகி கௌரவம் பலதுமீந்து
விலையது மதிக்கவொண்ணா விருதுகள் தானும் தந்து
தலையதன் மேலே நின்றோர் பணுவிலாய் நம்மைக்காக்கும்
நிலையில் உயர் பிரதேச செயலகம் வாழி வாழி!

கலாசாரம் சமயத்தோடு விளையாட்டுக் கழகமாக்கி
நிலாவெளி விழாக்கள் காட்டி நிகரிலா நூலும்யாத்து
உலாவந்தே அர்த்தத்தோடு பணுவிலாய் நம்மைக்காக்கும்
முலாமிலாப் பிரதேச செயலகம் வாழி! வாழி!!

**"நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்.**
**நீ உன்னை வலிமையுடயவன் என்று நினைத்தால்**
**வலிமை படைத்தவன் ஆவாய்.**
**உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும்**
**இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே"**

**சுவாமி விவேகானந்தர்**


வலி.மேற்கு பிரதேச செயலக முகப்பு

# பெண் உரிமையும் யாழ்ப்பாணச் சமூகமும்

**சி.சர்வேஸ்வரன்**
வல்லை வீதி,
சங்கானை.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்" என்னும் பாரதியாரின் சிந்தனை வரிகளுடன் குறித்த விடயம் தொடர்பில் பார்வையைச் செலுத்துவது பொருத்தமானதாகும். நவீன காலாதிக்க சுரண்டல் முனைப்புகளுடன் இயங்கிக் கொண்டிருக்கும் கோளமயமாக்கல் உலகில் பெண் அடிமை, பெண் விடுதலை, பெண்ணியம், பெண்ணுரிமை முதலான கருத்தாடல்கள் பல்வகை சார்ந்த ஊடகங்கள் இலக்கிய வடிவங்கள் வாயிலாகக்கையாளப்பட்டு விடை காணப்படாத வினாக்களாக வாதப் பிரதிவாதங்களாகத்தொடர்ந்த வண்ணமுள்ளன.

ஆனால் உண்மையில் யதார்த்த நிலை எவ்வாறு உள்ளது என்பது துயரம் தரும் விடயமாக உள்ளது. "அன்பின் வழியது உயிர்நிலை" என்னும் உன்னத நெறியினின்றும் வழுவி "அஃ திலாத என்பு தோல் போர்த்த உடலமாக" மனுக்குலம் இயந்திர கதியில் விரைந்தோடிக் கொண்டிருக்கின்றது. ஆக "உரிமை" என்பது உயிர்களுக்கு இறைவனால் இயற்கையாக அளிக்கப்பட்டதோர் கொடையாக இருப்பதால் அதனை ஒருவர் கொள்வதுமில்லை, கொடுப்பதுமில்லை ஆகையால் அது எல்லா உயிர்களிடத்தும் இயல்பாக அமைந்திருப்பதென்பது தெளிவாகின்றது.

இயங்குலகில் உயர்திணை உயிர்கள் தமது உரிமைகளை உணர்ந்து அதன்படி ஒழுகத் தலைப்படும் போது அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு சுதந்திரமான வாழ்வை வாழ்தல் பெண்ணுரிமை என்றும், பெண்ணியம் என்பது சமூகத்தில் உள்ள பெண்களின் இருப்பைக் குறிப்பதென்றும் வாழ்வின் நோக்கமே பெண் விடுதலை என்னும் கருத்தியல்களைக் கொண்டிருப்பதுடன்,

இக்குறித்த கருத்தியல்கள் அனைத்தையும் ஒரே கருத்துரையின் பின்புலத்துடன் ஓர் கோட்பாடாகக் கொண்டிருப்பது "பெண்ணியம்" என்பதே என பெண் நலன் விளையும் நிபுணர்களால் முன்வைக்கப்படுகின்றன. இவ்வண்ணமாக சொல்லாடல்களும் கருத்துரைகளும் எவ்வாறு கொள்ளப்படினும் பொதுவாக அவை யாவும் சங்கிலித் தொடராக 'பெண்நலன்' தொடர்பான கருத்துரைகள் என்பதற்கு இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்கப்போவதில்லை. உலக இயக்கம் என்பது தனித்து இயங்குவதில்லை. அது ஆண் பெண் என்னும் உயிர் நிலைகளால் விளக்கம் பெறுகின்றது. இதனாலேயே சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவன் தனது உடலின் ஒரு பாதியை இறைவிக்கு தந்து 'அர்த்தநாரி' எனப் பெயர்பெற்று விளங்குவதாக சைவ நூல்கள் எடுத்தோதுவதிலிருந்து ஆண், பெண் சமநிலை பேணப்பட்டு வந்ததோடமையாது அவ்விரு உயிர்நிலைகளின் அவசியமும் உணர்த்தப்பட்டிருத்தலையும் காணலாம்.

அங்ஙனமாயின் 'நெருடல்' எங்கே தோன்றுகிறது? வாழ்வின் பொருளறிந்து வாழ்தலில், வாழ்வைப் பேணலில், வாழ்க்கையைக் கைக்கொண்டு ஒழுகுதலில் ஏற்பட்ட வழுக்கள் தனிமனித நடத்தையில் ஆரம்பமாகி குடும்பம் அல்லது இல்லறம் என்னும் நிறுவனத்தை ஊடறுத்து சமூக நடத்தையாக மேலாதிக்கம் பெறும் நிலையில் தமது வன்மையால் மற்றவர் உரிமையைப் பறித்தும் மறித்தும் தன் நலன் போல் பிறர் நலம்பேணாமை காரணமாக முரண்பாடுகள் தோற்றம் பெற 'உரிமைக்குரல்கள்' ஓங்கி ஒலிக்க ஆரம்பிக்கின்றன. எனவே தான் ஒருவர் நிலையை மற்றவர் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் 8ம் திகதியை 'சர்வதேச பெண்கள் தினமாக' ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகையதோர் 'உலக மனிதவள மேம்பாடு' பற்றிய சிந்தனையோட்ட ஆடுகளத்தில் யாழ்ப்பாண சமூகத்தில் பெண்நிலைமை குறித்து ஆராயும் முன்னர் அதன் சமூக பின்புலத்தை நோக்குவது அவசியமாகும்.

யாழ்.சமூகம் ஒரு காலகட்டத்தில் ஒழுக்க பண்பாட்டு விழுமியங்களுடன் திகழ்ந்ததோர் சமூகமாகும் வள்ளுவன் கண்ட வாழ் நெறியான "ஒருவனுக்கு ஒருத்தி" "ஒருத்திக்கு ஒருவன்" என்ற உன்னத கோட்பாட்டின் அடிப்படையில்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்னும் வள்ளுவன் வாக்குக்கு அமைவாக 'குடும்பம்' என்னும் உன்னத நிறுவனத்தை அமைத்து வாழையடி வாழையாக அடிகொடி பிசகாது வாழ்வியல் கோலங்களை வரைந்து கண்ணியமாக வாழ்ந்த சமூகமாக இது விளங்கியது. ஆனால் 1972 காலப்பகுதிகளையடுத்து ஏற்பட்ட "மூளைசாலிகளின் வெளியேற்றம்" அதனைத் தொடர்ந்து 1977 காலங்களில் ஆரம்பமாகி தொடர்ந்த "உள்நாட்டு யுத்தமும்" அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள். அரசியல் பொருளாதார தாக்கங்களுடன் உயிர், உடமை இழப்புக்களையும் யாழ்.மண் சந்தித்தது. குடாநாட்டில் நிலைகொண்டு வாழ்ந்த சமூகம் யுத்த அழுத்தங்களால் இடம் பெயர்ந்தும் புலம் பெயர்ந்தும் வேலைவாய்ப்புக்கள் தேடியும் வேலைவாய்ப்புப் பெறுவதற்காக யுத்தத்தைக் காரணம் காட்டிய துர்ப்பாக்கியங்களுடன் தம் மேல் 'அகதி' முத்திரையைக் குத்திக் கொண்டு புலம் பெயர ஆரம்பித்தமையும், தமது பொருளாதார வளங்களையும் அதன் பெறுகைகளையும் இழந்ததுடன் பன்முக

சமூக நடத்தைப் பழக்க வழக்கங்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய அவலநிலைகள் தோற்றம் பெற்றமை குடாநாட்டைப் பெரிதும் பாதித்த தகவல்களாகும்.

பொதுவாக எந்தவொரு சமூகமும் நிலையான ஓர் இடத்தில் வாழ்ந்து தமது சமூக அரசியல், பொருளாதார, கலை, கலாசார, பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களுடன் வாழும் போது தான் தமது மொழி முதலான அம்சங்கள்யாவற்றையும்பேணிநாகரிகமான சமூகமாக திகழமுடியும். மாறாக சிதறுண்டு வாழும் சமூகம் தமது மூலாதாரங்களையும் வளங்களையும் அழிவுக்குட்படுத்தியதோடு தமது தனித்துவத்தையும், இருப்பையும் தொலைத்துவிட்ட பின்னணியில் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்னும் தோரணையில் தான்தோன்றித்தனமான செயல்பாடுகளில் ஈடுபடுகின்றது. இதனால் பல்வகையான சமூகச் சீரழிவுகளுக்கும், பொருளாதார, வாழ்விட, வாழ்வியல் குழப்பங்களுக்கும் உள்ளாகியுள்ளமை இச்சமூகத்தின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ள பகைப்புலத்தில் தான் யாழ் சமூகத்தின் பெண்ணுரிமை தொடர்பாக ஆராய்தல் பொருத்தமாகும்.

யாழ்ப்பாண சமூகத்தில் பெண்களின் பங்களிப்பானது கல்வி, தொழில்சார் நிலைகளுடன் வளர்ச்சியடைந்திருப்பதுடன், உயர் பதவிகளையும் வகித்து சமூகத்தை நெறிப்படுத்தும் வாய்ப்பினையும் பெற்று இருத்தல் கண்கூடு. அவர்களுக்குரிய வாழும் வழிமுறைகளும், கடமை தொடர்பான பணிகளை முன்னெடுத்துச் செல்வதிலும் அவர்களுக்கு வழங்கவேண்டிய கண்ணியத் தன்மையை வழங்குவதிலும் இடர் பாடுகளைச் சந்திக்கும் களமாக யாழ் சமூகம் மாற்றமடைந்திருப்பது தொலை நோக்கிலும் நடப்பு நிலைமையிலும் கவலையளிக்கும் விஷயமாகும். அர்த்தமுள்ள வாழும் நெறி முறைகளைப் பின்பற்றி ஒழுகவேண்டிய அவசியங்கள் பற்றிய விழிப்புணர்வுகளுக்கு அப்பால் சுயநல தேவைகளுடன் 'பெறுகைகளை நாடியோடும் சமூகக் கட்டமைப்பாக' மாற்றம் பெற்றுள்ளமை அதன் ஆக்கபூர்வமான ஆன்மார்த்தமான பணிகளைத் தொடர முடியாத வகையில் தெளிவற்ற போக்கினை கொண்டுள்ளது. பொருள் முதன்மை வாதம் தலையெடுத்த பின்னர் 'சீதனம்' என்னும் அசுரப்பிடி பெண் வாழ்வின் எதிர்பார்ப்புகளைத் தகர்த்து 'பொருளா? தாரம்' என்ற வினாவுக்குள் சீதனப் பொருளின்மையால் மூப்படைந்த பெண்களையும் யாழ்ப்பாணச் சமூகம் கொண்டுள்ளது.

ஒத்த நலனும், ஒத்த குணமும், ஒத்த கல்வியுமுடைய ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்தலும், காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுடன் வாழ்தலெனும் அன்புடன் கூடிய அறவாழ்வு நெறிகளுக்கு அப்பால் பணம், பதவி, ஆடம்பரம், புகழ், அழகு, பட்டம், அந்தஸ்து எனும் புறநடைகள் (குணம், ஆரோக்கியம் கவனிக்கப்படுவதில்லை) 'மணவாழ்வை' நிர்ணயிக்கும் சக்திகளாக மாற்றம் பெற்றுள்ளன. இதன் பயனாக கரணம் தப்பினால் மரணம் என்பது போல ஒருவன் - ஒருத்தி என்போருக்கு இடையில் விட்டுக்கொடுத்தல் கருத்துப் பரிமாறல் ஒருவர் பற்றி ஒருவர் புரிந்துணர்வு அற்ற நிலை, வேலைப்பளுக்கள், தற்பெருமை, குடும்ப உறவுகளுக்கிடையேயான உறவுகளின் தன்மை போன்ற இன்னோரன்ன காரணங்களின் தாக்கங்களினால் மன உளைச்சல்களுக்கு உள்ளாவதால் மண

முறிவுகளும் விரைவாகவே ஏற்படுகின்றன. இன்று காணப்படும் நீதிமன்ற வழக்குகளில் கூடுதலாக விவாகரத்து வழக்குகள் பதிவாகி உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இன்னொரு வகையில் குறுங்கால மணவாழ்வின் பின்னர் பிரிந்தும், தனித்தும் வாழ்கின்ற ரகத்தினரும் உள்ளனர். இத்தகைய நிகழ்வுகளானது 'குடும்பம்' என்னும் நிறுவனங்களைத் தகர்த்து வருவதோடு, உறவுகள், உறவு முறைகள் என்பவற்றையும் வக்கிரமடையச் செய்து வருகின்றன. இத்தன்மையானது வாழையடி வாழையாக விருத்தியடைய வேண்டிய சமூகக் கட்டொழுங்கை உருக் குலைத்து வருகின்றது.

ஆண், பெண் சமத்துவமின்மையால் அதாவது யுத்த நடவடிக்கைகள் காரணமாக இறந்த, காணாமற்போன ஆண்களின் எண்ணிக்கை, பெண்களின் எண்ணிக்கையை விட அதிகமானதால் இளம் விதவைகள் பலர் காணப்படுகின்றனர். இவர்களுக்கான வாழ்வாதாரத்தினை அரசும், அரசு சார்பற்ற நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. இருப்பினும் இவ்வாறான பாதிப்புக்குட்பட்ட பெண்கள் பல்வேறு உளவியல் தாக்கங்களுக்கு முகம் கொடுப்பதுடன், அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பின்மையைத் தோற்றுவித்துள்ளதுடன் சமூக சீரழிவுகள் ஏற்படவும் வாய்ப்பினை உருவாக்கியுள்ளன. யுத்தத்தினாலும், புலம்பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்களாலும் இயல்பாகவே யாழ்ப்பாண சமூகத்தில் காலம் காலமாக புரையோடிப் போயிருந்த அக வாழ்க்கைக் குறைபாடுகள், சுகாதாரப் பழக்கவழக்கங்கள் வாழ்வியல் முறைகள் உணவுப்பழக்கவழக்கங்கள் போன்ற இன்னோரென்ன காரணிகளும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சமூக சீர்கேடுகளை முன்னிலைப்படுத்துவதில் வகிபாகம் செய்கின்றன.

மேலும் கோளமயமாக்கலின் வருகையுடன் அறிமுகமான கைபேசி, இணைத்தளம், முகப்புத்தகம், தன்னியக்கப்புகைப் படக்கருவிகள் போன்றவற்றை உபயோகிக்கும் நற்தேவை நடைமுறைகளுக்கும் மேலாக குறுகிய மனோபாவங்களுடன் தனிமனித சமூக பண்பாட்டுச் சீரழிவுகளைத் தோற்றுவிக்கும் வகையில் கருமங்கள் ஆற்றப்படுகின்றன. இவற்றில் பதிவேற்றப் படும் ஒலி ஒளிப்பதிவுகள் நாகரிகமாக கையாளப்படுவதற்குப் பதிலாக அநாகரிகமான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றது. இதனால் தற்காப்பு, குடும்பப் பாதுகாப்புக்களுக்குமான அந்தரங்கமான விஷயங்கள் கசியும் பட்சத்தில் அது குடும்ப வட்டத்துக்குள் மட்டுமன்றி, சமூக மட்டத்திலும் விமர்சனங்களையும் வசைகளையும் தோற்றுவித்து இறுதியில் சட்ட அணுகுமுறைகளுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கியங்களும் நடைபெறுகின்றன. இத்தகு தாக்கங்களுடன் போதைவஸ்து, மதுப்பாவனைகள் போன்ற காரணிகள் பலவும் சேர்ந்து ஆண், பெண் வேறுபாடின்றி சிறுவர்கள் கடத்தப்படுதல், பாலியல் வன்புணர்வுகள் போன்ற துயர சம்பவங்களும் யாழ். மண்ணைப் பாதித்து வருகின்றன.

இத்தகைய குற்றம் புரிவோருக்கு மரண தண்டனை வழங்க வேண்டுமென்ற கருத்துக்கள், பெண் நலன் பேணும் மகளிர் அமைப்புக்களால் முன்வைக்கப் படுவதிலிருந்து ஒழுக்கப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணுதலின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு தேய்வடைந்துள்ளது அல்லது

அலட்சியப்படுத்தப்படுகின்றமை தெளிவாகின்றது. "பெண் போகப் பொருள். ஆண் ஆளப்பிறந்தவன். அவன் இஷ்டத்திற்கு ஆடிப் பிழைக்க வேண்டியவள் பெண்மகள் எனப் பேசிடும் பண்பு இருக்கும் வரை சமூகமோ நாடோ உருப்பட முடியுமா?" என வினா எழுப்பும் அறிஞர் அண்ணாவின் சிந்தனை வினாவிலிருந்து பெண் உரிமை பற்றிப் பேசுவதையும் எழுதுவதையும் விடுத்து நடைமுறையில் பெண் நலன் சார்ந்தனவற்றைக் கைக் கொண்டொழுகும் நெறிமுறைகளைப் பின்பற்றுவது முக்கியமானதென்ற கருத்துப் புலனாகின்றதல்லவா? ஆகையால் பொதுமையில் பெண் உரிமை, பெண் நலன் என்பது ஒவ்வொருவராலும் மதிக்கப்பட வேண்டியதும் அன்பு அற ஒழுக்க நெறிகளைக் கைக்கொண்டு ஒழுகுவதன் மூலம் வாழ்வியல் கோலங்களை வரைந்து செல்வது அவசியமாகும். இவற்றை நடை முறைப் படுத்த பாடசாலைகளில் ஒழுக்கக் கல்வியைப் புகட்டுதல் சமூகத்திற்கு ஆரோக்கியமானதாகும்.

குடாநாட்டில் பாலியல் வக்கிரங்களுக்கும் காழ்புணர்ச்சிகளுக்கும் வன்புணர்வுகளுக்கும் விஷம சேட்டைகளுக்கும் வக்கிர புத்திகளினால் இடமளிக்கப்படுமாயின் குறித்த சமூகமும் நாடும் நலிவடைவது திண்ணம்.

"எந்தவோர் சமுதாயத்தில் பெண்களது உரிமைகள் மதிக்கப்பட்டு அவர்கள் கௌரவப் படுத்தப்படுகின்றார்களோ அந்தச் சமுதாயம் வளர்ந்து உச்ச நிலையை அடையும்"

என்னும் சுவாமி விவேகானந்தரின் கூற்றிலிருந்து பெண் உரிமைகளும் நலன்களும் பேணப்படுவதன் அவசியம் உணர்த்தப்படவும். உணரப்படவும் வேண்டிய ஒன்றாகும்.

எனவே வரலாற்றுக் காலம் தொடக்கம் அணுகுண்டுக் காலத்தையும் ஊடறுத்து வருகை தந்துள்ள கோளமயமாக்கல் காலம் வரை அளவற்ற மாறுதல்களை மக்கள் கண்டுள்ளார்கள். ஒவ்வொரு அசைவுக்கும் ஒவ்வொரு மாறுதலுக்கும் ஆற்றலே காரணமென விஞ்ஞானிகளும் சுட்டிக் காட்டுகின்றனர். விஞ்ஞான உலகில் மட்டுமன்றி அன்றாட வாழ்க்கையிலும் கூட ஆற்றலே உதவுகின்றது. நாம் அகவாழ்வில் உள்ள ஆற்றலை 'சக்தி' என குறிப்பிட்டு அச்சக்தியே 'பெண்' என அழைக்கிறோம். பெண் தெய்வங்களையும் வணங்குகின்றோம். ஆகையால் அகவாழ்விலும், புற வாழ்விலும் மக்களுக்கு ஆற்றலை அளிப்பது தாய்மையாகும்.

"வலிமை சேர்ப்பது தாய் முலைப் பாலடா"

என வீறு கொண்டு கூறும் பாரதியார் கூற்றை ஆழ்ந்து உணருங்கள். ஆகையால் ஆணினமும், பெண்ணினமும் ஒன்றோடு ஒன்று போரிட்டு வாழமுடியாது. ஆண், பெண் கூட்டுறவுடன் ஒன்றிணைந்து ஒருவரை ஒருவர் புரிந்துணர்வுடன் இயற்கைத் துவத்தைப் பேணி, ஒன்றுபட்டு, தத்தமக்குரிய கடமைகளைப் பொறுப்புடன் உணர்ந்து கடமையாற்றலே மனித சமூகத்துக்கு நன்மையளிப்பதுடன் தேசத்துக்கும் ஆரோக்கியமானதாகும். உலகை ஈன்று வளர்க்கும் தாய் பெண்ணாகையினாலே பெண் உரிமைகளும், அவர்கள் நலன்களும் கண்ணியத்துடனும் கருத்துடனும் பேணப் படுதல் அவசியத்திலும் அவசியமாகும்.

# "வல்லூறுகள்"

**செல்வி பூ.ஜெயமலர்,**
பண்ணாகம் மெய்கண்டான்,
மகா வித்தியாலயம்.

"**தா**ய்க்கோழி குஞ்சுகளைக் காப்பாற்றுவது போல உங்களைக் காப்பாற்றினேன்" அம்மா இப்படி அடிக்கடி கூறும் சுலோகம் இது. அதன் பின்னால் நிறைய அர்த்தங்கள்.

ஏழு பிள்ளைகளைக் கொண்ட எங்கள் குடும்பத்தின் பொருளாதார நிலை பெரிதாகச் சொல்லுமளவுக்கு இல்லையென்றாலும் அடிப்படைத் தேவைகளுக்கும் அத்தியாவசிய சேவைகளுக்கும் அவ்வளவாகத் திண்டாடியதாக ஞாபகமில்லை. காரணம் என் தாயாரின் நிர்வாகத் திறமை. அதைப் பாராட்டாதவர் இல்லை. அதனால் தான் ஏழு பேரும் படித்துப்பட்டம் பெற்று நல்ல நிலையில் இருக்கிறோம்.

எங்கள் தந்தை சிறிய கடை வைத்திருந்தார். அத்தோடு சிறுதோட்டம், உப உணவுப் பொருள் உற்பத்தியிலும் ஈடுபட்டார். தாயார் கோழி, ஆடு, மாடு வளர்த்து முட்டை, பால் என எமது போசாக்கைப் பூர்த்தி செய்து மீதியைக் கடையில் வைத்து விற்பனை செய்வார். இப்பணிகளில் நாமும் பங்கேற்க வேண்டும். மறுப்பதாயின் போதிய காரணம் காட்ட வேண்டும். "பிள்ளை வளர்த்தால் பூரணி மாதிரி வளர்க்க வேணும்" என்று நாலுசனம் சொல்லுமாறு இருந்தார்.

நாங்கள் பிறந்த காலம் 1958-1971 இதனால் 1983 இலிருந்து 2009 வரையிலான யுத்த களங்களையும் அதைச் சுற்றி நிகழ்ந்த பிரசாரங்கள், கைதுகள், காணாமற் போதல், முற்றுகை என அனைத்தையும் எதிர்கொண்டவர்களே. ஆனாலும் அவற்றில் நேரடியாக ஈடுபடவோ,

பாதிக்கப்படவோ இல்லையென்றே கூற வேண்டும். எத்தனையோ முற்றுகைகளில் எங்களைக் காப்பாற்றியது அம்மா தான். பிரசாரக் குழு வந்திறங்கினால் அரைமணி நேரத்தில் அம்மா பாடசாலை வாசலில் நிற்பார்.

"ஏன் அம்மா, அவர்களும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் தானே! நீங்கள் மட்டும் தான் புதுசாகப் பெற்று வளர்த்தீர்கள்? எங்களுக்கு எமது நாட்டைக் காக்கிற கடமை இல்லையா?" இப்படிக் கடைசித் தம்பி கேட்டு வாங்கிக் கட்டியது இன்றும் ஞாபகமிருக்கிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிற்றான் "தாய்க் கோழிக்குஞ்சைக் காப்பாற்றுவது போல உங் களைக் காப்பாற்றினேன்" என்று கூறுவார்.

"நீ தாயாகிப்பார். அந்தவலி என்ன என்பது புரியும்" என்பார்.

இதற்கான அர்த்தம் எங்களுக்கு இயல் பாகவே விளங்கும். மாதம் மாதம் ஒவ்வொரு கோழியை அடைக்கு கட்டி வைத்து அந்தக் குஞ்சுகளைக் காப்பாற்றி வளர்த்து வருமானம் தேடுவதில் அம்மா கெட்டிக்காரி. அடிக்கடி எங்களுக்கும் கட்டளை பிறக்கும்

"பருந்தென்றால் உயர நின்று வட்டம் போடும். தாய்க்கோழி கண்டுவிடும். குஞ்சுகளைக் காப்பாற்றும். இந்த வல்லூறு சனியன் அடர்த்தியான மரக்கிளைகளுக்கை பதுங்கியிருந்துவிட்டு சிமிக்கிடாமல் தூக்கிப் போடும். கவனமாகப் பாருங்கோ" தப்பித் தவறித் தூக்கிப் போட்டால் காவல் பார்த்த எங்களுக்கும் குட்டு விழும். ஒரு கோழிக் குஞ்சுக்காகவல்ல "அந்த வல்லூறு இந்தக் குஞ்சை எப்பிடிக் கொத்திக் கிளிச்சு சிதைக்கப் போகுது, இந்தப் பாவம் உங்களைத் தான் சேரும்" அந்த வாயில்லாத் தாயின் வேதனையின் பிரதிபலிப்பாக அது இருக்கும். அந்தப் பாவத்துக்குப் பயந்தே நாம் கவனமாக இருப்போம்.

எங்களது குடும்பத்தின் உயர்வுக்காகவும் காலத்தின் கட்டாயத்தாலும் புலம் பெயர்ந்து வாழும் நிலை ஏற்பட்டது. ஒவ்வொருவராகச் சென்று இப்போது எல்லோருமே புலத்தில் தான். அம்மா அப்பாவும் அங்குதான் இயற்கை எய்தினார். அம்மாவின் படத்தில் "தாய்க்கோழி குஞ்சுகளைக் காப்பாற்றுவது போல உங்களைக் காப்பாற்றினேன்" என்ற வாசகத்தையும் அச்சிட்டு வைத்திருக்கிறோம். எமக்கெல்லாம் அது மகாவாக்கியம்.

ஒருநாள் எனது பத்து வயது மகன் அதுபற்றி என்னிடம் வினவினான். "ஆமாப்பா, எங்கள் அம்மா எம்மையெல்லாம் அப்படித்தான் வளர்த்தார்" என்றேன்.

"எப்படியப்பா?" மின்னொளியில் குஞ்சு பொரித்து மாஸ் போட்டுப் பண்ணையில் வளர்க்கும் முறைமையை மட்டுமே தெரிந்த எனது மகனுக்கு இதை எப்படி விளக்குவது? இணையத்தளத்திலிருந்து சில படங்களை இறக்கிக் காட்டினேன். இருந்தாலும் அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இப்படி தாயகம் சார்ந்த எத்தனையோ பாரம் பரியங்கள், விழுமியங்கள், சம்பிரதாயங்கள் எங்கள் பிள்ளைகளுக்குத் தெரியாது. இவற்றைத் தெரிந்து என்ன செய்துவிடப் போகின்றார்கள்? என்று கேட்கும் மடமை என்னிடம் இல்லை. அதனால் தாயகத்திற்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம்

உதயமானது. அதற்கேற்றாற்போல் எங்கள் மாமனார் இயற்கை எய்தினார். அந்தச் சாட்டில் புறப்பட்டோம். எங்களுக்கு தாய்மடி சேர்வதில் சந்தோசம். பிள்ளைகளுக்கு சுற்றுலா என்ற மகிழ்ச்சி வந்து ஒரு வாரம் மரண வீட்டோடு ஓடியது. மிகுதி நாட்களில் முக்கியமான இடங்களைச் சென்று காட்டினோம்.

மாமா வீட்டில் எங்கள் தாயாரின் படம் இருந்தது? அதைக் கண்டதும் என் மகன்,"அப்பா, இதோ அப்பம்மா! இதற்குள் அந்த வாசகம் இல்லையே" என்றான். "ஆமாப்பா, அப்பம்மாவுக்கு இவர் தம்பி தானே" என்றேன். "அது சரி அப்பா ஊரிலே என்றால் தாய்க் கோழியையும் குஞ்சையும் காட்டலாம் என்றீர்களே!" என்றான் அவனது தேடல் ஆர்வம் என்னைத் தூண்டியது.

ஆனால் யாழ்ப்பாணப் பட்டினத்தில் யார் கோழி வளர்க்கிறார்? ஒரு வீட்டிலேயும் கோழியையும் குஞ்சையும் காணமுடிய வில்லை. எல்லாம் பண்ணைகள் தான். பண்ணையில் பருந்தோ வல்லூறோவரா. ஆனால் பட்டினத்தில் பல பருந்துகள் வட்டமிட்டன. ஆங்காங்கே வல்லூறுகள் இருந்தன. ஏன்? யாருடைய குஞ்சுகளுக்குக் காத்திருக்கின்றன? என்னுள்ளே பெரிய வினா. இவை மனிதப் பருந்துகள். மானிட வல்லூறுகள். பாடசாலைகள், பொது இடங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றைக் குறிவைத்து வட்டமிட்டன. இனங்காண முடியாத முகத்திரைகளுடன் கிளையோடு கிளையாகவும் இலையோடு இலையாகவும் உரு மறைப்புச் செய்து கொண்டு.....!

"இத்தனை தூரத்திலிருந்து வந்தனான்; கோழிக்குஞ்சைக் காப்பாற்றுவதைக் காட்டியே ஆகவேண்டும்" என்று கருதிக்கொண்டு கிராமத்தில் எமது தூரத்து உறவுக்காரர் வீட்டை நாடிச் சென்றோம். எதிர்பார்த்துப் போனது வீண் போகவில்லை. அந்த வீட்டில் ஊர்க்கோழி வளர்த்தார்கள்.

மகனுக்கு நல்ல சந்தோசம். அவதானி த்தான். திடீரென்று ஓடி வந்தவன், அப்பா!, அப்பா! "பெண்ணடிமைத்தனம் கோழியிடம் தான் ஆரம்பமாகியது போலும்" என்றான். "ஏன்?" என்று கேட்டுக் கொண்டே நிமிர்ந்த என் கண் முன்னே ஒரு சேவல் பேட்டுக் கோழியை துரத்திக்கொண்டு ஓடியது. பின்னே என்ன ஆகும் என்பது சொல்ல வேண்டியது இல்லை. அடங்கிப் போனது பேடு.

அதேவேளை குஞ்சுகளோடு ஒரு கோழி, குப்பையைக் கிளறிக் கிளறி குஞ்சுகளை அழைத்து உணவு காட்டிக்கொண்டிருந்தது. கோழி திடீரென்று அபயக்குரல் எழுப்பியது. குஞ்சுகள் எல்லாம் தாயண்டை ஓடி வந்தன. அம்மரத்தின் கீழே இரு இறக்கைகளையும் விரித்து அக்குஞ்சுகள் ஒன்றும் வெளியே தெரியாதவாறு மறைத்துக் கொண்டது. மகன் இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். சற்று வேளையில் இதைவிடப் பெரிய அதிசயம் ஒன்று நிகழ்ந்தது. தாயின் அணைப்பிலிருந்து விலகிய ஒரு குஞ்சை திடீரென்று வந்த வல்லூறு தூக்கிச் செல்ல முயன்று தாழ்ந்து எழும்பியது. அபயக் குரல் எழுப்பியவாறு உந்திப்பறந்த தாய்க் கோழி அருகே நின்ற புளியமரத்தின் உயரக்கிளை வரை பறந்து வல்லூறிடமிருந்து தன் குஞ்சை மீட்டு வந்தது. ஆனால் குஞ்சு செயலற்றுக் கிடந்தது. "மகனே! அப்பம்மாவின் வார்த்தை இப்போது விளங்கியதா?" என்றேன்.

"ஓம் அப்பா. தூர இருந்து குறிபார்த்து வந்தாலும் சரி, ஒழித்திருந்து குறிவைத்தாலும் சரி தாய்மை பாதுகாக்கும். அப்படித்தானே" அதற்கான அர்த்தம் விளங்கிய மகன் திருப்தி கொண்டான்.

ஆனால் மானிடக் குஞ்சுகளைக் குறி வைத்துக் காத்திருக்கும் புதிய பல வல்லூறுகள் மலிந்துவிட்டதைப் புரிந்துகொண்ட எனக்கு திருப்தி அதிருப்தியானது.

எங்கள் அம்மா போல் இருக்க எத்தனை தாய்மாரால் முடியும். பிள்ளைகளும் எம்போல் இல்லைதான் இப்போ.

அம்மாவிடம் சுயநலம் தான் மேலோங்கியிருந்தது என்று அப்போது எல்லோரும் கூறும் போது எங்களுக்குக் கூட ஒரு மாதிரித் தான் இருக்கும். ஆனால் அந்தச் சுயநலம் எம்மை நல்லவர்களாக வளர்ப் பதிலும் இருந்தது.

நான் வந்த சில நாட்களில் அவதானித் தவற்றை மீட்டுப் பார்க்கிறேன். அளவுக்கதிக சுதந்திரம் அத்துமீறிப் போகும் நிலையை ஏற்படுத்தி விட்டது. சமூக அக்கறையற்றுச் சுயலாபம் சம்பாதிக்கும் முயற்சிகள் பழக்கடை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை நாளிதழ்களில் நாற்றமெடுக்கும் சாக்கடைகள்.

இவற்றுக்கெல்லாம் பின்புலம் ......?

வல்லூறுகளின் வக்கிரம் தான்!

தாய் மட்டும் தான் குஞ்சுகளைக் காப்பாற்றுவதா?

குஞ்சுகள் வளர்ந்து தாயைக் காப்பது!

கோழிகளுக்குப் பொருந்தாது தான்!

நான் கோழி இல்லையே

எனக்கும் ஒரு கடமை இருக்கிறது. இதற்காகத்தான் என்னைத் தாய் காப்பாற்றியிருக்க வேண்டும்? இந்த வல்லூறுகளிடமிருந்து தாயையும் குஞ்சுகளையும் காப்பதாகச் சங்கற்பம் செய்து கொண்டேன். இன்று தான் தாய்மை அடைந்தேன்.



# அறிவறிதலும் ஆசிரியமும் ஆள்வினையுடைமையும்

**பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன்,**
வட்டுக்கோட்டை.

கல்வியறிவு இல்லாதவன் - உலகியல் அறிவு இல்லாதவன் என்ற பேச்சுக்கள் சாதாரண வழக்கில் உள்ளதைப் பலரும் அறிவர். ஏன் இக்கேள்வி எழுகின்றதென ஆராய்ந்து பார்க்கையில், அறிவை இருவகையில் வைத்து விளக்குதல் எளியதாகும். பிறவகையில், கணித அறிவு, விஞ்ஞான அறிவு, தமிழ் அறிவு என்றெல்லாம் பல வகையாகப் பேசப்படினும் இவை யாவும் கல்விக்குள் அடங்குகின்றன. இதுபோலவே உலகியல் அறிவுக்குள் வாழ்வியலின் கூறுகள் யாவும் அடங்குதலைக் காணலாம்.

ஆக கல்வியறிவு உலகியலறிவு ஆகிய இரண்டும் முறையே நூல்களாலும் உலகியல் அனுபவங்களினாலும் வருவன. ஆதலால், நூல்களும் உலகமும் பாடப்புத்தகங்களாகி அவற்றின் மூலம் அறிவு நம்மிடம் வந்து சேரவேண்டும். அவை எமக்கு நல்விருந்தாக வேண்டும். விருந்தான போது மட்டும் கல்வி அறிவாகாது. உலகமும் அறிவாகாது. அவை அறிவுக் களங்களாக மட்டுமே இருக்கும் என்பதால் கல்வியும் அநுபவமும் ஒன்றாகி இணைந்து சிந்திக்கவும் செயற்படுத்தவும் தூண்ட வேண்டும். அவ்வாறேதான் நமது தூண்டலும் துலங்கலும் நிகழவேண்டும்.

கல்வி + அநுபவம் = அறிவு எனவே, கற்பவனுக்கும் கற்பிப்பவனுக்கும் அறிவுத் தேட்டமென்பது பொதுவான தொழிற்பாடாகின்றது. கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளும் அறிவை விருத்தி செய்வதற்காகவே நடை பெறுகின்றன. அறிவைத் தராத கல்வி ஆள்வினை உடைமையைத் தராது. தராதுவிடின், அது வெறுஞ் சுமையாகவுஞ் சுவையற்றதாகவும் ஆகிவிடும்.

சுமையற்றதாகவும் சுவையாகவும் ஆகவேண்டுமென்றால் கற்பவனாகிய மாணவன் ஆசிரியனிடத்து அன்பு கொள்ள வேண்டும். ஆசிரியன் அருள் செய்ய வேண்டும். அன்பும் அருளும் கலந்துவிட்டால் ஆசிரியனிடத்து அர்ப்பணிப்பு வந்தமையும். அதற்கெல்லாம் ஈடுபாடான உழைப்பு இருவரிடத்தும் இருக்கவேண்டும். பரீட்சை நோக்கில் மாணவன் செயற்படக்கூடாது. தேர்வுக்கு வழிகாட்டியாக மட்டுமே ஆசிரியன் இருக்கக்கூடாது. இருவரிடத்தும் "கரவு" இருத்தல் கூடாது. ஈடுபாடுடைய உண்மை யான உழைப்பு ஈற்றிலே சுமையாகத் தோன்றாது. ஆரம்பத்திலே சிறிது கடினமாகத் தோன்றினாலும் பின்னர் சுமையற்ற சுகந்தம் தெரியும்.

திருவள்ளுவர் ஆகிய ஆசிரியர் தமது நூலின் ஊடாகக் கற்பிக்கின்றார். நாமும் கற்கின்றோம். கற்றலும் கற்பித்தலும் இன்பந் தருகின்றது. அவ்வாறு நூல்களிடத்து ஈடுபாடு உண்டாகி மனம் செம்மைப்பட்டால் சுவை தோன்றி நயக்கக் கற்றுக்கொள்வோம். நயத்தல் இன்பச்சுவையாகுமன்றோ! ஆதலால் கற்று- அறிவைத் தேடி அதனைக் கொடுப்பது ஆசிரியனுக்கும் பெறுவது மாண வனுக்கும் வேண்டியதே. கற்றல் அறிவுத் தேட்டத்திற்காக. கற்பித்தல் அறிவைக் கொடுப் பதற்காக. இன்னும் சொல்லப்போனால் கற்பித்தலில் கற்றலில் சுவையின்பம் தோன்ற வேண்டும் ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் கற்பித்தலில் கற்றலில் சுவையும் இன்பமும் ஏற்படவில்லையானால் எல்லாமே சுமைதான்

அறிவுப்பிரயோகம் கொடுப்பவர் எடுப்பவர் ஆகிய இருவரையும் காக்கும். அறிவறிதல் என்பதும் இவ்வாறான செயற்பாடேயாகும். அறிவு சிந்தனையாலே புடமிடப்பட்டதாயின் தெளிவு பெற்றதாயின் அதுவே வாழ்வை வளமாக்கும். அந்த அறிவுப்பிரயோகம் வாழ்வுக்குரியதாகி விடும். ஆதலால் அநுபவமும் கல்வியும் அறிவின் கூறுகள் ஆகும். கற்றலும் அறிதலும் என்பது அநுபவத்தால் ஆகும் பயன் அறிவு தந்த பயன். மிகநுண்ணியதாக நுழையும் வண்ணம் சொல்லப்பட வேண்டியது. ஆக அறிவெனும் சொல் திருக்குறளில் வெவ்வேறு கருத்துடையதாக அமைதலையும் உணர முடியும்.

"எண்பொருள வாகச் செலச்சொல்லி தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு"

இவ்விடத்தில் அறிவென்பது எண் பொருள வாகச் சொல்லுதல் எவ்வாறு கிட்டுமெனின் சிந்தனைத் தெளிவால் உலகியல் அறிவால் -கல்வியும் அனுபவமும் சேர்ந்த வாழ்வி யலால் நுண்பொருள் காணும் அறிவு கிட்டும்.

அதனாற் செலச்சொல்லும் ஆற்றல் வரும். ஆகவே தொழில், அறிவின் மேலதாயிற்று. ஆதலின் அறிவுடையார் எல்லாம் உடையவர் என்றும் அறிவாகிய அது இல்லாதவர் எதுவும் இல்லாதவர் என்றும் பேசப்பட்டது.

"அறிவுடையார் எல்லாம் உடையார் - அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

இங்கு அறிவென்பது 'உடைமை' என்னும் பொருள் குறித்தது காண்க.

"அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளளிக்க லாகா வரன்"

இவ்விடத்தில் அறிவென்பது குற்றம் மறைத்தல் என்னும் பொருளதாயிற்று. இவ்வாறு அறிவுடைமை என்னும் அதிகாரத் தில் மட்டுமல்லாது ஏனைய இடங்களிலும்

உதாரணமாக கல்வி என்னும் அதிகாரத்தில் அறிவு என்பது அளவற்றதாக நீர் ஊற்றுப்போல் ஊறுவது என்னும் பொருளில்

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறு மறிவு"

என வந்தது.

நிலத்தைத் தோண்டுவதற்குக்கடப் பாரை (அலவாங்கு), மண்வெட்டி, கொந்தாலி (கல்லை ஒழுங்காக்கும் கருவி) போன்ற பல கருவிகள் தேவை. அறிவைப் பெருக்கு வதற்கும் கருவிகளாகின்ற நூல்கள் தேவை. அவை மட்டுமல்லாமல் அவற்றுள் நுழையும் அடிப்படை ஆற்றலும் உடன் தேவை. விளங்கிச் சிந்திக்கும் திறனும் தேவை. இவை மட்டுமா- நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகும் ஆதலால், களர்நிலமல்லாத நல்ல நிலமுந் தேவை. ஆக நல்ல நூல்களை, ஒழுக்க நெறியில் வாழும், கற்றோரது-சான்றோரது நூல்களைத் தேடி நுழைதல் மிக மிகத்தேவை. இவ்வாறெல்லாம் அறிவென்னும் சொல் அமையும் இடங்களிலெல்லாம் பல்வேறு தொனிப்பொருளில் கருத்துக்கள் விரிந்து வந்துள்ளமையை உணரலாம்.

எனவே வள்ளுவம் வாழ்க்கையின் பாதையை வழியைத் திறந்து வைத்திருக் கின்றது. ஒருவரது வாழ்வு அவரது செயற்றி றமையிலிருந்தே ஆரம்பிக்கின்றது. செயற்றி றமைக்கு அறிவு காரணமாகின்றது. செயல் காரியமாகின்றது. இவ்வாறெல்லாம் வாழ்வியல் தெரிவிக்கும் வள்ளுவம்.

**வாழ்வியல் பேசுமிடம்**

குறளின் தொடக்கம் கடவுள் வாழ்த்தில் வரும் "அகர முதல ..." என்பது தொடக்கமல்ல. அதனுள் திருக்குறள் கருத்துக்கள், பாடு பொருள்கள் ஆரம்பிக்கப்படவில்லை.

கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் இவை நான்கும் பாயிரமே. வள்ளுவர் தன்கருத்தைக் கூறக் களமமைத்த பகுதிகள் பாயிரப் பகுதிகளாகும்.

இல்வாழ்க்கையிலிருந்தே வள்ளுவரது கருத்துக்கள் தொடங்குகின்றது. விருந்து அறம் முதலாய பாடுபொருள்கள் தலைமைத் துவம் பெறுகின்றன. குறள் முழுவதிலுமே இல்வாழ்வான் வாழ்வியல் பரந்து பேசப் படுகின்றமையைக் காணலாம். காமத் துப்பாலும் வாழ்வியல் பேசும் பகுதியே தான். வாழ்வியலுள் ஆள்வினைத்திறன் - ஆள் வினையுடைமை என்ற அதிகாரமும் வரு கின்றதைக் காணலாம். எமது ஆள் வினை யுடைமை தனித்த ஒரு அதிகாரத்தில் மட்டும் வரவில்லை. குறள் முழுவதுமே நமது ஆள் வினைத்திறன்களை அதிகரிக்கச் செய்ய வல்லவை ஆகும். குடிசெயல்வகை (குடிமை) என்னும் அதிகாரத்தில்.

"ஆள்வினையும் ஆன்ற அறிவு மெனவிரண்டின்
நீள்வினையான் நீளுங் குடி"

ஆள்வினை- முயற்சி,

ஆன்ற அறிவு- நிறைந்த அறிவு. எனக் குறிப்பிடுகிறார்

நீள்வினையென்பது கருமச்செயலின் நீட்சி அதாவது தொடர்ந்த இடையறாத முயற்சி இதனால் குடியுயரும்.

அறிவு நிறைதலென்பது இயற்கையறிவு செயற்கையறிவோடு கூடி நிரம்புதல்.

ஆள்வினை வினையை ஆளுதலுக்குச் சோம்பல் வேண்டாவாம்.

ஆன்ற அறிவு- உயர்தற்கு ஏற்ற செயல் களையும் அவற்றை முடிக்கும் விதத்தையும்

செயல் - செயலை முடித்தல்

ஆக ஒருவரது குடியானது அவனது முயற்சியாலாகும்.

**இரண்டு வகை அறிவு**

இயற்கை அறிவு பரம்பரைக் கூறுகளால் விதிவழியால் வருவது. செயற்கையறிவு கல்வி கேள்விகளாலான நல்லறிவு "கற்றல் கேட்லுரையார் பெரியர்" என்று உரைப்பார் இயற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்.

இவ்வாறெல்லாம் மேலே கூறிய பெரியாராகிய வள்ளுவரினது குறள்களின் பொருளை விரித்துரைக்க முடியும். ஆள் வினையும் ஆன்ற- என்ற இக்குறளை வள்ளுவர் தமது ஆள்வினையுடைமை அதிகாரத்தில் கூறவில்லை. குடிசெயல் வகை என்னும் அதிகாரத்திலேயே கூறியுள்ளார். இவ்வாறெல்லாம் அறிவும் ஆள்வினை யுடைமையும் குறளில் பரந்து கிடக்கக் காணலாம். ஆக இயற்கையறிவை ஊழ் எனும் அதிகாரத்தில் அறியத் தருகின்றார்.

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்"

எனக் காட்டுவார்.

இவ்வாறெல்லாம் அறிவு எனும் சொல் ஒவ்வொரு இடத்திலும் காலத்தாலும் இடத்தாலும் பக்கச்சொல் அதிகாரம் என்பவற்றால் பொருள் சிறந்து ஒவ்வொரு பொருளைத் தருவதைக் கண்டோம். தனித்த சொல் பக்கச்சொல் இடம் காலம் என்பவற்றால் வேறுபடும். பக்கச்சொல் இடம், காலம், சந்தர்ப்பம் உணர முடியாத இடத்து அதற்கும் பொருளில்லை. அறிவு என்பதைச் சுருங்கச் சொன்னால் விரைந்து விளங்கிக் கொள்ளலும் நினைவில் நிறுத்தலுமே அறிவு. அது அறிந்து கொண்டிருத்தலாகும். ஆக என்றும் படிப்பவனே அறிவுக்கு உரியவன். படித்துக்கொண்டிருக்காதவன் ஆசிரியன் என்று சொல்லுதலுக்கு அருகதையற்றவன். கற்றலாவது- நுண்ணறிவு காண்பது. கற்பித்தலாவது சிந்தனையைத் தூண்டித் துலங்கச் செய்வது. அதாவது அறிவைத் தேடுவதற் குரியனவாக மாணவரைச் செய்தல் நற் சமூகத்திற்கான மாற்றமாகும்.

"மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே
வந்து அறிவு ஆம்"

சிவபுராணம் தந்த மணிவாசகர் கூற்று இது. வையகம் முழுவதும் மாற்றங்கள் நிகழ்வதால் வெவ்வேறு வகையான அறிவை ஆக்கும். மாற்றமாய் வையகம் என்பதை வையகத்தின் மாற்றமாம் எனக்கொண்டு கூட்டினால்,

வையகம்- வைகும் அகம் :வாழ்வு- வாழும் இடம். வையகம் மாற்றமாம். மாறிக் கொண்டே இருத்தல் பிரபஞ்சத்தின் மாற்றம்.

**வெவ்வேறே வந்து அறிவு ஆகும்**

ஒவ்வொரு பொருளிலும் மாற்றங்கள் வந்து வெவ்வேறு ஆகும்.

மீன்களில் செதில்களின் மாற்றம் அதன் வயதைக் கூறும். மரங்களில் பட்டைகளின் மாற்றம் அதன் வயதைக் கூறும். தென்னை, பனை ஆகியவற்றில் அதன் வட்ட வரிகள் (ஓலை விழுந்த பின்வரும் அடையாள வரிகள்) அதன் வயதைக் கூறும். இவ்வாறு மாறுபட்டவைகள் வெவ்வேறாம். அறிந்து கொண்டேயிருக்க, மாறுவதெல்லா வற்றையும்.

**உணரும் மனம்**

சூரியனுக்கு அப்பாலுள்ள அண்டங்களைப் பார்க்க விஞ்ஞானிகள் துடிக்கின்றனர்.

சூரியனை ஆய்வு செய்ய விளைகின்றார்கள். இதனை அறியும் அறிவு வந்தால் கோடிக் கணக்கான பொருள்களின் மாற்றங்களை அறிந்துணர முடியும் என்று கூறும் திரு வாசகம். எல்லா மாற்றங்களையும் செய்ய வல்லவனே சூரியன்.

அறிவில் ஆதவர்களோ! அல்லது அறிவில் லாதவர்களோ எவரும் ஆசிரியர்களாக வரலாம் என்றநிலையே இன்று உள்ளது. இது வருந்தத்தக்கது. அறிவறிந்த ஆதவர்களே வேண்டும். எவருக்கும் எடுத்துக்காட்டாக இருத்தல் வேண்டும் எவரும் வணங்கக் கூடியவனாக ஆசிரியன் இருக்கவேண்டும். ஆதலால், உலகியல் அறிவும் உயர் குணமும் உடையவனே ஆசிரியன் என்பது தேற்றம்.

உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்
தனக்கோட்டம் தீர்க்குநூ லஃதேபோன்
மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்குநூன் மாண்பு.

குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோ டுயர்குண மினையவும்
மலைபவன் நூலுரை ஆசிரியனே!

தெரிவரும் பெருமையும் திண்மையும்
பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலு
மருவிய நன்னில மாண்பா கும்மே

அளக்க லாகா வளவும் பெருமையும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு
மலைக்கே

ஐயந் தீரப் பொருளை யுணர்தலும்
மெய்நடு நிலையு மிகுநிறை கோற்கே

மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே!

என்றவாறு ஆசிரிய, மாணவ மரபுபெலாம் கூறும் செய்திகளை விரிக்கிற் பெருகும்.

**தற்காலக் கல்விமுறை**

மரபு முறையில் அடங்குதலும் மரபு முறையில் அடங்காமையும் என இரு திறத் தினதாகக் கொண்டால்,

மாணவன் கற்பதற்கு தூண்டப்பட வேண்டும். தூண்டுதலை ஆசிரியன் செய்ய வேண்டும் என்பது தற்காலத்தில் மிகவும் வலியுறுத்தப்பெறுகின்றது. மரபு முறையில் இயற்கையான தூண்டுதலை மாணவர் பெற்றுவிடுகின்றனர்.

எல்லோருக்கும் கல்வி என்பதற்கமைய கற்பதற்கான வாய்ப்புக்களை ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மரபு முறையில் இன்னி ன்னார் தாம் கற்பதற்கு தகுதியுடையோர் எனவும் ஆசிரியர் எவருக்குக் கற்பிக்கலாம் எனவும் இருந்தது. மாணவர் சுயமாகக் கல்வித் தேடலைச் செய்யவேண்டும் என்பது இக்கால முறை. "குருவில்லா வித்தை பாழ்" என்பது பண்டைய செய்தி.

எளிமை ஆனவற்றில் இருந்து சிக்கலான விடயப் பரப்புக்குச்செல்லல். அன்றிலிருந்து இன்றும் தொடரப்படுகின்றது.

அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றுக்கு செல்லல். (உவமை விளக்கம்) தொடர்ந்திருக் கின்றது.

அடுத்து, பருப்பொருளை அறிந்து நுண் பொருளை நாடி நுனித்துச் செல்லுதலாகும். அதாவது, தூண்டக்கூடிய முறையில் செயற் படுதல் அறிய, நூலின் நுண்பொருள், குறிப்புப் பொருள் யாவும் தெற்றெனத் தெரியும்.

**அறிவும் காதலர் இன்பமும்**

தலைவன் தலைவியோடு அனுபவிக்கும் இன்பம் பின்னும் பின்னும் புதிது புதிதாகும். செயல் ஒரே மாதிரி இருப்பினும், மனம் புதிது புதிதாகக் காணும் என்பதைக் கொண்டு விளக்க வந்த வள்ளுவர் கண்ட உவமை நூலுடன் பழகப் பழக அறியாமையை உணரமுடியும் என்பதே அவர் சொல்ல எடுத்துக் கொண்டது. "செறிதொறும் சேயிழை மாட்டு" என்றிவ்வாறு காட்டிய உவமை இரட்டைப் பயன் தருகின்றது - அறிதோறி யாமை கண்டற்றால் என்ற உவமை நின்று வாழுகின்றது. எடுத்துக்கொண்ட பொருளைக் காட்டிலும் சிறந்து பயிலுகின்றது.

செந்நிற அணிகலன்களை அணிந்த தலைவியிடம் பொருந்துந் தோறும் ஏற்படும் காதல் உணர்வானது நூற்பொருளை அறிய அறிய அறியாமை கண்டாற் போன்றது என்கின்றார்.

இது பற்றி
"அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதொறும் சேயிழை மாட்டு"

என்னும் குறளில் குறிப்பிடுகிறார்.

இங்கே, அறிவு அறிந்துகொண்டே இருத்தல் என்பதாகும். இதற்கு பரிமேலழகர் உரை விரிக்கையில், (புணர்ந்துடன் போகின் றான் தன்னுள்ளே சொல்லியது)

"களவொழுக்கத்தில் பல இடையீடுகளாள் எய்தப்பெறாது அவாவுற்றான். இதுபொழுது நிரந்தரமாக எய்தப்பெற்றமையினால் 'செறி தோறு' மென்றான். அறிவிற்கெல்லையின் மையின் மேன்மேல் அறிய அறிய முன்னைய றிவு அறியாமையாய் முடியுமாறு போலச் செறிவிற்கெல்லையின்றி மேன்மேற் செறியச் செறிய முன்னைச் செறிவு செறி யாமையாய் முடியா நின்றதெனத் தன்னா ற்றாமை கூறியவாறு. இப்புணர்ச்சி மகிழ்தல், தலைமகட்கும் உண்டேனும் அவள் மாட்டுக் குறிப்பால் நிகழ்வதல்லது கூற்றால் நிகழாமையறிக" என்பார்.

நூலின்கண்ணும் பருப்பொருளை முதலிலும், உள்ளே நுழைய நுழைய நுண் பொருளும் காணலாம்.

**அறிவறிதல் பற்றி 'ஜோன்டுயி' கூறுவது,**

"சுயாதீனமாக சிந்தனைக்கு இடம் கொடுத்தலும் அனுபவங்களை வழங் குவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தலும் முக்கியம்" என்பர். ஆக, கற்றல் வாழ்நாள் பூராகவும் நிகழ வேண்டியது என்றும் அன்றும் இன்றும் சொல்லப்படுவதேயாகும்.

தற்காலத்தில் முக்கியத்துவம் தரப்படுவது "ரியூட்ஸ்" முறையே. அதாவது 'ஒப்படைகள் எனவும் பேசப்படுகின்றது.

**பண்டும், இன்றும்**

- நினைவாற்றலுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் 'மனனக்கல்வி' முறை - பண்டைய முறைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது.
- விரிவுரை முறை முழு வகுப்புக்கும் பயன் படுத்தக்கூடியது. அதனை இக்காலத்தில் மேற்கொள்கின்றனர். கேள்வி கேட்கச் சந்தர்ப்பம் வழங்குமிடத்து மாணவன் தூண்டப்படுகின்றான். வகுப்புச் சூடு

பிடிக்கும். மாணவர் உற்சாகம் பெறுவர். குழுமுறைக் கற்பித்தல், அணிமுறைக் கற்பித்தல் என்பன இக்காலத்தன எனச் சொல்கின்றார்கள். பண்டு இவை வேறு முறைகளில் இருந்தன.

- ஒரு குறி கேட்போன் இருகாற் கேட்பின் பெருக நூலிற் பிழைபாடிலனே.

- முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்
  ஆசா னுரைத்த தமைவரக் கொழினும்
  காற்கூ றல்லது பற்றல னாகும்

- அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
  செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
  மையறு புலமை மாணவருடைத் தாகும்.

- அழலி னீங்கா னணுகா னஞ்சி
  நிழலி னீங்கா நிறைந்த நெஞ்சமோ
  டெத்திறத் தாசா னுவக்கு மத்திற
  மறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே.

**திட்டமிடல்**

இலக்கு - நோக்கம். இதனை அடைவதற்கு முன்கூட்டியே ஆயத்தப்படுத்தும் செயல் முறையே திட்டமிடல் ஆகும்.

அறிவு - மனப்பாங்கு --- திறன் --- விருத்தி எனவெல்லாம் அடங்கும்.

**'நீல் போட்ஸ்மன்' கருத்தாவது,**

'கற்பித்தல் என்பது இராசதுரோகச் செயல், அது ஆசிரியனது பணி அல்ல'. எனவும் குறிப்பார். தற்காலத்தில் கற்பித்தல் புறத்தே விட்டு 'வழிகாட்டல்' என்னும் எண்ணக்கரு முன்வைக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறிருப்பினும் - கல்வி முறையில் சொல்லும் பொருளும் சுவைபடச் சேர்ந்து அமைந்தால் அதுவே உண்மையில் கல்வி ஆகும்.

தற்காலத்தில் கற்பித்தல் புறத்தே விட்டு வழிகாட்டல் என்னும் எண்ணக்கரு முன் வைக்கப்படுகிறது என முன்பு கூறப்பட்ட தாயினும், ஆசிரியர் தேவையில்லை என்பதைச் சிந்திக்குமிடத்து வழிகாட்டலில் நயத்தல் அமைய வேண்டுமாயின் ஆசிரியர் தேவை உள்ளமையை மறுப்பதற்கில்லை.

நிறைவாக ஒருவன் ஆனை (யானை) போன்ற வலிமையும் எதிர்க்கும் திறனும் உள்ளவனாயினும் அவனது நலிவைப் பார்த் திருந்து தாக்குவோர் உண்டு. எனக்கு எல்லா நலனும் உண்டு. அதனால் ஒரு செருக்கும் வந்துள்ளதென வைத்துக்கொள்ளுங்கள். என்னை யாரும் எதுவுஞ் செய்யமுடியாது என்ற எண்ணத்தை அந்தச் செருக்குத் தந்துள்ளது எனக் கருதுங்கள். அற்றம் பார்த்து தாக்கும் நரி போன்றவர்கள் சமூகத்தில் இருந்து தாக்குவார்கள். அந்தக் குள்ளநரிக் கூட்டமாகிச் செய்யும் செயலும் இடனறிதல் என்று போர்வியூகம் செய்வோர் பேசலாம். ஆயினும், இதனை அறிந்து வைத்திருத்தலும் தன்னைக் காத்தலும் கூட ஆழ்வினை உடைமையே. வள்ளுவர்,

"காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாழ் முகத்து களிறு"

வேல் ஏந்திய வீரரைக் கோத்தெடுத்த கொம்பையுடைய அஞ்சாத யானையையும்

காலாழும் சேற்று நிலத்தில் அகப்படும்போது நரிகள் கொன்றுவிடும் அன்றோ.

இவ்வாறெல்லாம் குறளில் குறிப்புப் பொருளையும் நுண்பொருளையும் கண்டு அவற்றால் ஆள்வினைத்திறன் பெற்று நலங்காணலாம். நலமானது, நாணமுடையார்க்கே சாலும்.


"நலம்வேண்டின் நாணுடைமை வேண்டுங்
- குலம்வேண்டின்

வேண்டுக யார்க்கும் பணிவு"

ஒருவனுக்கு நன்மை வேண்டுமானால் நாணமுடையவனாக இருக்கவேண்டும். குடியின் உயர்வு வேண்டுமானால் எல்லோரிடத்தும் பணிவு வேண்டும் என்பது குறளின் கருத்து.

நாணமாகிய வெட்க உணர்வுக்கு உள்ளாகி கலங்கும் ஒருவன் முயற்சி செய்து அதனைத் தவிர்க்க முயல்வானாயின் உயர்ச்சி பெறுவான். முயற்சியும் ஆள்வினையன்றோ.

ஆக, முயற்சி - பயிற்சியாகி உயர்ச்சி தரும். கற்றலும் கேட்டலும் சுவையாகினால் சொல்லுதல் வன்மை பெற்று ஆர்வம் தரும். அதுவே, மேற்கூறப்பட்ட எல்லா ஆளுமைக்கும் அறிவுக்கும் வேண்டத்தக்கதாகும்.



# "சமூக நலன் பேணுதலின் அவசியம்"

**க.அபிஷேக் (தரம் - 9)**
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

"எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகரினதும் முத்துக்குமார சுவாமியினதும் பாதாரக் கமலங்களைத் தொட்டு, என் கண்ணில் ஒத்தி" என் குறிகாட்டி பாரதியைப் பணிந்து கொண்டு, "தமிழிற்கு அமிழ்தென்று பெயராம் சங்கத் தமிழின்பத் தமிழெந்தன் உயிரிற்கு நிகராம், தமிழோடு நின் உயிர் வாழ வேண்டும், நான் சாகும் போது என் சாம்பலிலும் தமிழ் மணம் கமழ வேண்டும் எனக் கூறிக்கொண்டு நான் உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக்கொண்ட விடயம் சமூக நலன் பேணுதலின் அவசியமாகும்.

மக்கள் தமக்கிடையே ஆளிடைத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு கூட்டாக வாழும் ஓர் ஆட்தொகுதியே சமூகம் எனப்படும். பல குடும்பங்கள் ஒன்றிணைந்து உருவாகும் தொகுதியையும் சமூகம் எனலாம், சமூகமானது பொருளாதார, கலாசார, சமய ரீதியாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. இன்றைய காலகட்டத்தில் சமூக நலன் பேணுதல் மிக இன்றியமையாததாகும். பற்பல சீரழிவுகள் உருவாகி வருகின்றன. அவையாவன சமூக, பொருளாதார, கலாசார சீரழிவுகளாகும்.

சமூக சீரழிவுகளை எடுத்து நோக்கினால் இன்றைய மாணவர்கள் மத்தியிலே இரத்தத்தைக் கொதிப்படையச் செய்யும் சம்பவங்களாக 'வித்தியா', 'மாயா' என்ற இரு பெண்களின் மீது ஏற்பட்ட பாலியல் துஷ்பிரயோகம் நோக்கப்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் போதைப்பொருட் பாவனை தான். சமூகச் சீரழிவிற்குப் பெரும்பாலான காரணம் போதைப் பொருட்களின் காவுகை தான். 'போதை மேதையையும் வீழ்த்திவிடும்'. இவற்றை நிவர்த்தி செய்வதற்காக மது ஒழிப்பு இயக்கங்களை உருவாக்க வேண்டும், ஆதர்.வீ.தியெஸ் என்ற மது ஒழிப்பின் மாமேதையின் கருத்துக்களைப் பின்பற்ற வேண்டும், போதைப் பொருட்களை விதைக்கும் நிலங்களில்

விவசாயப் பொருட்களை விதைத்தால் சமூகம் போதைமயமாகாது. சமூகத்தில் உயர்ந்த பெரியார்களின் கருத்துக்களைப் பின்பற்றுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டால் சமூகம் சீரழியாது.

கலாசார சீரழிவுகளானவற்றை நோக்கின் முன்னைய காலங்களிலே ஆண்கள் வேட்டியும், பெண்கள் சேலையும் அணிந்து ஆலயத்திற்குச் சென்றனர். இன்றோ ஆண்கள் மேலைத்தேய ஆடைகளையும், பெண்கள் அரைகுறை ஆடைகளையும் அணிந்து செல்கின்றனர். பெண்கள் பாலியல் துஷ்பிரயோகம் ஆகுவதற்கு அவர்களே ஒருவகையில் காரணமாகின்றனர். கலாசார சீரழிவுகளை நிவர்த்தி செய்யும் முகமாகவும் நல்ல கலாசாரத்தைப் பேணும் நோக்குடனும் இன்று சில நலன்பேணு நிறுவனங்கள் வீதி நாடகங்களை நிகழ்த்துதல், விழிப்புணர்வு கருத்தரங்குகளை மேற்கொள்ளல் போன்ற வற்றைக் முன்மாதிரியாகக்குறிப்பிடலாம்.

பொருளாதார சீரழிவுகளை நோக்கினால் இன்றைய சமூகமானது நீர்மாசு, நிலமாசு, வாயுமாசு போன்றவற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றது. நீர் நிலைகளில் இறந்த விலங்குகளை வீசுதல், தொழிற்சாலைக் கழிவு நீருடன் நன்னீர் கலத்தல் போன்றன நீர்மாசுகளாகும். நீர்மாசைத் தடுப்பதற்காக இறந்த விலங்குகளைப் புதைத்தல் அல்லது பசளையாக்கல், தொழிற்சாலைக் கழிவு நீரை உரிய முறை யில் அகற்றுதல் போன்றனவற்றை முன் னெடுப்பது சிறந்தனவாகும். விவசாய நிலங்களில் இரசாயனப் பசளைகளை வீசல், இரசாயனப் பீடை நாசினிகளைத் தெளித்தல் போன்றனவற்றால் நிலம் மாசடைகிறது. நில மாசைத் தடுக்க விவசாய நிலங்களில் இரசாயனப் பசளைகளைத் தெளிக்காது இயற்கைப் பசளைகளான வேப்பங்கரைசல், சாம்பற்கரைசல் போன்றனவற்றை பாவிப்பதைக்குறிப்பிட லாம். வாயு மாசானது வாகனப் புகைகள் வெளியேறல், தொழிற்சாலை நச்சு வாயு வெளியேறல் போன்றனவாகும். முன்னர் மோட்டார் வாகனங்களிலிருந்து தான் புகை வரும். இன்று மனிதர்களின் வாயாலும் புகை வருகின்றது. இப்புகை பிடிப்பவரை விட அருகிலுள்ளவரையே அதிகம் இது பாதிக்கும். இவற்றை நிவர்த்தி செய்ய புகைப் பரிசோதனைகளை மேற்கொள்ளல் தொழிற்சாலைப் புகைகளை வளியுடன் கலக்காது வேறு விதத்தில் அகற்றல் முறையை மேற்கொள்ளல் புகைப்பிடித்தலை இழிவளவாக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எமது நாடான இலங்கை மேலைத்தேய நாட்டவர்களிடம் கடனாளியாக உள்ளது. எமது நாட்டின் தன்னிறைவைக் குறிக்கும் அரச இலச்சினையில் உள்ள முற்றிய நெற்கதிர்கள் நிரம்பிய தன்நிறைவுக்கலசம் இன்று குறைவடைந்து நெல்லிற்கே ஏனைய நாடுகளிடம் கையேந்தும் நிலையில் உள்ளது. இவ்வாறான சமூக, பொருளாதார, கலாசார சீரழிவுகளைத் தடுப்பதற்காக மாணவர்களாகிய நாம் முன்வந்து வீதி நாடகங்கள், விழிப்புணர்வு நாடகங்கள் மேடை நாடகங்களை நிகழ்த்த வேண்டும், கருத்தரங்குகளை நிகழ்த்தல் வேண்டும், எமது எதிர்கால சமூகத்தை மேம்பாடடையச் செய்ய உழைத்தல் வேண்டும்.

"சமூகத்தை நேசிப்போம்,
சமூகத்தை முன்னேற்ற யோசிப்போம்.
சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்"

# "சித்த மருத்துவ நாடி அறிவியலும் மரணத்தை அறியும் வழிமுறைகளும்"

**டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்**
உபதலைவர்.
ஆயுர்வேத பாதுகாப்புச்சபை.

சித்த மருத்துவமானது தமிழர் பண்பாட்டு மருத்துவ அடிப்படைகளை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. மூலிகை மருத்துவம் மூலம் குணப்படுத்துதல் (Herbal Healing or Healing Through Medicinal Plants). யோக தியானம் மூலம் குணப்படுத்துதல் (Healing Through Yoga and Meditation), ஆத்மீக ரீதியாகக் குணப்படுத்துதல் (Spiritual Healing), இசைவழி மருத்துவம் (Healing Through Music), மூச்சு சீராக்கல் பயிற்சி மூலம் குணப்படுத்தல் (Healing Through breathing), பிரார்த்தனை மூலம் சிகிச்சை (The Power of Pprayer), மந்திரவழி சிகிச்சை (Spiritual Rhythmic words), இயற்கை வழி சிகிச்சை (Healing Through Nature), புலனறிவிற்கு அப்பாலான தொடர்பு வழிச்சிகிச்சை (Intuitive Healing), உணவு மற்றும் பத்திய சிகிச்சை (Healing Through Better Eating and prescribed Diet), போன்ற பல்வேறு சிறப்பான உன்னதமான சிகிச்சை முறைகளைத் தன்னகத்தே கொண்டு சித்த மருத்துவமானது மிளிர்வதைக் காணலாம். இவ்வகையான சிகிச்சை முறைகளுக்கு அடிப்படையாக சித்தமருத்துவ நாடி அறிவியல் நோய் அறிதல் முறை காணப்படுகின்றது.

சித்தர்கள் ஞானிகள் என்போர் உணவினை உட்கொள்ளாத நிலைகளில் கூட ஐந்து பூதங்கள் (Five Cosmic Elements) மூலம் ஊட்டத்தைப் பெற்று உயிர் வாழ்கின்றனர். மேலும் தியானம் மூலம் அண்டவெளியிலுள்ள சக்தி உடலினுள் பாய்வதன் மூலமும் குண்டலினிச் சக்தி எழுச்சி பெறுவதன் மூலமும் உயர்சக்தி நிலையைப் பெறுகின்றனர். சாதாரண மனிதர்களில் கூட வளிமண்டலத்திலுள்ள வளியும் நீரும் நுரையீரல்களைச் சென்றடைகின்றன. மேலும் சூரிய

ஒளி மூலம் (தீப்பூதம்) கோலி கல்சிபெரோல் (Cholecalcierol) விற்றமின் டி (Vitamin D)ஒளித்தாக்கம் (Photoreaction) மூலம் தொகுக்கப்படுவதை நவீன விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்கின்றது. சித்தர்களில் நவீன விஞ்ஞானத்திலும் மேம்பட்ட நிலைகளில் நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்கள் (Five Cosmic Elements) மூலம் சக்தி மாற்றங்கள் நிகழ்வதைக் காணலாம்.

தமிழர்களின் புராதன விஞ்ஞானம் (Ancient Science of Tamils)ஐந்து பூத சம நிலையை இயற்கைச் சூழல் சமநிலையாக (Ecological Balance) கருதுவதைக் காணலாம். நவீன விஞ்ஞானமும் நிலம், நீர், வளி மாசுபடுதலையும், பூகோள வெப்ப மடைதல் (தீப் பூதம்) பற்றியும் ஆராய்வதைக் காணலாம்.

தமிழில் காணப்படுகின்ற மருத்துவ நூல்கள் பதினெண் சித்தர்கள் என்று கூறப்படுகின்ற சித்தர்கள் பெயர்களால் அழைக்கப்பட்டு இவை 'சித்தர் இலக்கியம்' அல்லது சித்தர்களது மருத்துவ இலக்கியங் களாகக்காணப்படுவதோடு சித்த மருத்து வத்தைச் சிறப்பாக எடுத்தியம்பும் நூல்களாகக் காணப்படுகின்றன. சித்த மருத்துவம் நோய்க்கான மருந்து நோயைத் தடுக்கும் மருந்து, உடலைக் காக்கும் மருந்து, ஆரம்பத்தடுப்பு (Primodial Prevention) முதல்நிலைத்தடுப்பு (Primary Prevention), இரண்டாம் நிலைத் தடுப்பு (Secondary Prevention)மூன்றாம் நிலைத்தடுப்பு (Tertiary Prevention) ஆகிய தடுப்பு முறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் இவற்றை சிறப்பாக மேற்கொள்வதற்கு சித்தமருத்துவ நாடி அறிவியல் சிறப்பான முறையாக அமைவதோடு உடற்றொழிலியல் நிலையை (Physiological Condition) மரணத்தை எதிர்கொள்ளும் நிலையை அறிந்து அதற்கேற்ப தடுப்பு முறைகளையும் சிகிச்சை முறைகளையும் மேற்கொள்ள சித்தமருத்துவ நாடி அறிவியல் சிறந்த வழிகாட்டியாக அமை கின்றது.

"உறுதியாம் பித்த உடம்பு இளைப்பதாம்
பொறுதியாய் தூலிக்கில் போவான்
மதியொன்றில்
அறுதியாம் ஐயம் அஸ்தி உலர்ந்துமே
உறுதியோர் மதியில் ஒடுங்கிடுஞ் சீவனே"
(திருமூலர்)

பித்தம் அதிகரிப்பதோடு உடலானது இளைத்து துரும்பு போலக் காணப்படும் போது ஒரு மாதத்தில் மரணத்தைத் தழுவுவதோடு கப மிகுதியினால் என்பு உலர்த்தும் வகையில் இருந்தாலும் ஒரு மாதத்தில் மரணம் ஏற்படும் என்று கூறப்படுவதைக் காணலாம்.

"சீவ களையாய் சேர்ந்திடும் நாடியில்
ஆவக் கரம் வைத்து அழுத்திடின் தமலேறும்;
தாவொத்து மேல்நோக்கில் சாகான் ஒரு
நாளும்
பாவொத்து கீழ் நோக்கில் பதையாமல்
சாவனே"
(திருமூலர்)

ஒருவருடைய கையில் நாடியை அழுத்திப் பரிசோதிக்கும் போது நாடியானது மேல் நோக்கி எழும்பிக் குதிப்பதாக இருந்தால் இறப்பு ஏற்படாது கீழ்நோக்கி அழுத்திக் காணப்பட்டால் இறப்பு ஏற்படும் என்று திரு மூலர் குறிப்பிடுவதைக் காணலாம்.

"பதைக்கின்ற மூவரில் பக்குவம் தப்பியே
நிதைக்கின்ற வாதமும் பித்தமும் நீங்கிடில்
கதைக்கொண்டு இருந்தாலும் தோற்றியே
வுயிர்விடும்
பிதைக் கொண்ட வாத பித்தமும் பெலனாமே"
(திருமூலர்)

மரணநாடி பற்றிக் கூறவந்த திருமூலர் மூன்று வகையான நாடிகளான வளி, அழல், ஐயம் ஆகிய நாடிகள் பதைப்புற்று ஓடுகின்ற போது வாதம், பித்தம் என்கின்ற இரு நாடிகள் அடங்கிப்போனால் சாவா மருந்தாகிய அமிர் தத்தை உட்கொண்டாலும் உயிர் நின்று நிலைக்க முடியாது என்று கூறுவதைக் காணலாம்.

"அறிந்திடும் இம்மூன்றும் அடங்கியே முட்டிலும்
எறிந்து மிக ஒடிலும் எய்தாது சாவுதான்
பறிந்து நல் தாது பற்றற்றுக் கீழ் நோக்கில்
மறிந்தே வுயிர் சென்று மறலி கைப்புக்குமே"

(திருமூலர்)

வளி, அழல் ஐயம் ஆகிய நாடிகள் மெதுவாகவும் சமமாகவும் மிக வேகமாகவும் ஓடுவதாக இருந்தாலும் மிக வீச்சுடன் எழும்பி மேல்நோக்கி முட்டினாலும் மரணம் ஏற்படாது. மூன்று வகையான நாடிகளும் தளர்ச்சி அடைந்து கீழ் நோக்கி அமுத்தி ஓடும் போது மரணம் ஏற்படும்.

"பித்தம் அடங்கினால் பேசாதே போய்விடு;
எத்திய ஐயம் எழும்பிடில் கிட்டாதே;
எத்திய வாதம் எழும்பில் மருந்து செய்
எத்தியிம் மூன்றின் இயல்பை அறிந்திடே"

(திருமூலர்)

வளி, அழல், ஐயம் ஆகிய மூன்று நாடிகளில் ஓட்டங்களை அறிந்துதான் மருத்துவம் செய்வதோடு, அழல் நாடி வீழ்ந்து விட்டால் உடலில் வெப்பம் இல்லாது உடல் குளிர்ந்து விடும். இதனால் மரணம் ஏற்படும் என்பதால் மருத்துவம் செய்வதில் பயனில்லை என்பதைக் குறிப்பிடுவதோடு ஐயம் எனப்படும் கபம் எழும்பினாலும் மருத்துவம் செய்வதில் பயனில்லை. வாத நாடி எழும்பி ஓடும்போது மருத்துவம் செய்யலாம் என்று வளி, அழல், ஐய நாடிகளை அடிப்படையாக வைத்தே மருத்துவத்தை சித்தமருத்துவர் செய்வர் என்பதைப் புலப்படுத்துவதோடு ஒருவரது மரணத்திற்கு முன்பாக வளிநாடியானது அதிகரிக்காது ஐய நாடியானது அதிகரித்துப் பின் குறைந்து கொண்டு வரும் பின்னர் வாத நாடியும் வீழ்ந்து விடுவதைக் காணலாம்.

"சென்று தான் பிடித்த கைக்குட் சிதறியே பித்தம் நிற்கில்
அன்று போயடுத்த நாளிலகன்றிடுஞ் சுரங்க ளெல்லாம்
கன்றவே கண்ணில் வெக்கை கதித்திடிற் பித்த நாடி
கொன்றிடும் பதறில் கொல்ல நாட் செல்லும் தானே"

(செகராசசேகரம் 87)

நாடி பார்க்கும் போது பித்த நாடி சிதறி யோடாவிடின் அன்றைய தினம் கழித்து அடுத்தநாள் சுரம் எல்லாம் அகன்றுவிடும். சுரமானது கண்களில் அதிகரிக்குமாக இருந்தால் பித்த நாடியானது மரணத்தை ஏற்ப டுத்தும். பித்த நாடி பதறி ஓடுவதாக இருந்தால் மரணம் ஏற்பட நாட்செல்லும்.

"மின்னிகர் மருங்கிலாய் விளங்கு காற்றுடன்
பின்னிய சேடமும் பெலத்து நின்றிடில்
உன்னு சஞ்சீவினி உதவி செய்யினும்
அன்னமே மரணமென் றறிந்தமர்ந்தீரே"

(செகராசசேகரம் 93)

மின்னல்போல இடையுடைய பெண்ணே, வளியும் அதனுடன் சேர்ந்து ஐயம் மிகுதிப்பட்டு மூச்சுக்காற்று நீண்டும் சேடமும் சேர்ந்து காணப்படும் பொழுது உயிரைப் பாதுகாக்கும் சஞ்சீவி மருந்தை உட்கொண்டு பெருமுயற்சி எடுத்தாலும் நிச்சயமாக மரணமானது ஏற்படும்

என்பதை அறிந்து கொள்ளவேண்டும் என்று செகராசசேகரம் எனும் நூலில் குறிப்பிட்டு ள்ளதைக் காணலாம்.

"மேலே சேற்ப நாடியுறின் மார்பின் முகத்தில்
வேர்வாகில்
சாலக் குளிர்ந்து நடுங்கியெழுந் திருக்கினாப்பற்
றான்கறுக்கில்
சீலவுதர மிகவுளைந்தே யுதிரங் காணிற்
சிரங்குளியில்
காலு முகமும் வீங்கிமுகஞ் சிவக்கின் மரணாங்
கண்டுகொள்ளே"

(பரராசசேகரம், சுரரோக நிதானம் 91)

ஐயநாடியானது மேல்நோக்கி நடந் தாலும் மார்பிலும் முகத்திலும் பிசு பிசுத்த வியர்வையானது ஏற்படினும், உடலானது குளிர்ந்து நடுக்கமுற்றுக்காணப்பட்டாலும் நோயாளி படுக்கையிற் கிடை கொள்ளா திருப்பினும் நாவும் பல்லும் கருநிற மடைந்தாலும், வயிற்றில் வலி கடுப்புடன் கூடிய இரத்த கழிச்சல் காணப்பட்டாலும் கைகால் முகம் போன்றவற்றில் வீக்கம் காணப்பட்டாலும் வயிறானது மினு மினுத்து சிவக்கினும், சன்னி பாத சுரங்களில் மரணம் ஏற்படும் என்பதை நாடி பார்க்கும் சித்த மருத்துவர் அறிந்து கொள்வதைக்காணலாம்.

மக்கள் மரணமில்லாப் பெருவாழ்வை வாழ விரும்புகின்றனர். மரணபயம் எல்லோரையும் பயப்பீதிக்கு உள்ளாக்கு கின்றது. நவீன அறிவியலில் இதய மின் இயக்க வரைபு (Elector Cardio Gram) (E.C.G) மூலம் பரிசோதனை செய்யும் போது அவ்வேளையில் மாரடைப்பு இருந்தால் மட்டுமே அறியக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் 'சித்தர்' எனும் பேரறிவாளர்கள் மரணம் ஏற்படப்போவதை முற்கூட்டியே அறியும் வழிமுறைகளை தமிழ் மருத்துவ ஏடுகளில் எழுதிவிட்டுச் சென்றுள்ளனர்.

மரணத்தைப் பற்றிக்கூறவந்த திருமூலர் தனித்துக் குருதிக் கலங்களில் ஓடும் நாடியை மட்டும் குறிப்பிடாது, நாடியில் சரவோட்டம் பற்றியும் குறிப்பிடுவதைக் காணலாம். இந்தவகையில் நாடி என்பதைப் பார்க்கும் போது சரவோட்ட நிலைகளில் ஏற்படும் மாறுபாடுகளைக் கொண்டும் உயர் ஆத்மிக நிலையில் (Super Spiritual State) நோயாளியின் நோய் நிலை, உளநிலை ஆகியவற்றை அறியக் கூடியதாகவும் இருக்கின்றது. உயர் ஆத்மிக நிலையில் (Super Spiritual State) நோயாளியின் சரவோட்டத்தை மட்டும் அறிவதோடல்லாமல் நோயாளி வருகின்ற போது அவரது சரவோட்ட நிலைகளைக் கொண்டும் நோயாளியின் உளநிலை நோய்நிலை ஆகியவற்றை அறியும் உள ஆத்மிக சுவாச இதய நிபுணத்துவ துறையாக (Psycho Spiritual Respiratory Cardiology) (P.S.R.C) சித்த மருத்துவ நாடி அறிவியல் திகழ்கின்றது. சித்தமருத்துவ நாடி அறிவியல் துறையானது சிறப்பார்ந்த நிபுணத்துவத் துறையாக (Super speciality) காணப்படுகின்றது. இழந்துபோன சித்தமருத்துவ நாடி அறிவியலை மீண்டும் புத்துயிர் ஊட்டி புதுப்பொலிவு பெறச் செய்ய வேண்டும். மறைந்திருக்கும் சித்தமருத்துவம் சார்ந்த அறிவுக் கருவூலங்களை ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்துவதுடன், தமிழ் மரபைப் பேணி புதுமை சேர்க்க முனைப்போடு செயற்பட வேண்டும். சித்தமருத்துவமானது அடிப்படையில் விஞ்ஞான மருத்துவமாகக் காணப்படுகின்றது.

# அருகி வரும் மிருகபலி, ஒருபோதும் இனி வேண்டாம்

**கலாபூஷணம்: க. நல்லதம்பி**
துணவி, சங்கரத்தை.

மண்ணுலகில் மழலை எனும் சொல்
மனிதத்திற்கு மட்டும் சொந்தமல்ல எவ்வுயிர்ப்
பெண்ணினமும் ஈன்று புறந்தந்த
மன்னுயிர் அனைத்திற்கும் மாற்றிலா தொன்றே!

சின்னக் கருவேந்தி, அடிவயிற்றில் சிறையிருத்தி,
முந்நூறு நாட் சுமந்த அன்னையவள்
எண்ணக் கருவில் என்றும் நினைவாக
மண்ணில் மலரும் வரை வழிபாடு நிதம் செய்வாள்.

பகுத்தறிவு படைத்த மனித வர்க்கத்துக்கே
கதைப்பதற்கும் சிரிப்பதற்கும் கடவுள் வழி காட்டியுள்ளார்
அடுத்தறிவு உள்ள ஜீவன்களும் தம் அகத்தில் நிதம் நினைத்து
அதன் குட்டி, குருளை, குஞ்சு, கன்றுக்கும் நெஞ்சம் ஏங்குமே!

பகுத்தறிவு மனிதன் வகுத்துக் கொள்ளும் கபட நாடகமிதை
எழுத்தறிவு அற்ற ஜீவன்கள் அறியாதே - அவன்
தொகுத்து தன் உறவுகள் தொடராக இன்பம் காண என
கழுத்தறுத்துப் பிற உயிர்களை கருணையின்றிப் பலியிடலாமோ?

ஆறறிவிற் தேறிய மானிடன் போல் அன்பு, பாசம்
அடுத்தறிவு உயிர்களுக்கும் உண்டு காண்!
பாரதனில் அவைகளும் தம் உறவுகள் மேல், என்றும்
பாசமுடன் வாழும் நேசமதை நேரில் காண்கின்றோமே!

ஆண்டவன் சந்நிதி! அழகும் புனிதமும் காணும் இடம்
அர்ச்சனையும் ஆராரத்தியும் அமுதும் படைக்கும் தலம்
தூண்டா விளக்கொளியும் காண்டா மணி யொலியும் என
தீண்டாமை அற்றதே தெய்வ தலங்களாம்.

காவடியும். கரகமும் கையேந்தி அடியளிப்பும்
சேவடி பின் தொடரும் அங்கப் பிரதட்டைகளும்
பாவோதும் பக்தர் கூட்டமும் என பண்பொழுகும் இன்ப இடமிது;
தீதேனும் அற்ற தெய்வ தரிசனம் தேடும் இடம் ஐயா!

புனிதத்தை மனிதம் அழிக்கும் போது அவன்
புகழும் மண்ணினில் அழிந்து விடும் அறிந்து கொள்வீர்!
இனிதத்துடன் நீண்ட காலம் வாழ வேண்டு மெனில் - பலி எனும்
செயல் இனியும் வேண்டாம்;

பஞ்சமா பாதகச் செயல்களில் ஒன்றே
கொஞ்சமும் யோசிக்காது செய்யும் கொலை.
நெஞ்சம் நெகிழாத இரும்பு மனிதனாலே தான்
வஞ்சமான கொலை போன்ற பலியதைப் பண்ண முடியும்;

மிஞ்சிய இப் பாதகச் செயலை பக்தி எனக் கூறலாமா?
துஞ்சி மடியும் கடாக்களின் உதிர வெள்ளம் - தெய்வ
மஞ்சம் உருமும் மண்ணினை அசுத்த மாக்கலாமா?
வஞ்சகப் பேய்களின் வரலாற்றுத் தடமன்றோ? மிருக பலி.

பிள்ளை போல் ஊட்டி வளர்த்த பெருங்கடாவை
தள்ளி நடுவீதியில் தவில் முழங்க. வழி நடத்தி.
கொல்லக் களங்கொண்டு செல்லும் வேளை குட்டி நிலை கண்டு - தாய்
வெள்ளாடு தவிக்கும் தவிப்பினை யார் அறிவார்?

துள்ளியோடி தன் காலடியில் தூங்கு மடிசூப்பி
பால் குடித்த செல்லக் குட்டிதனை நினைந்து - தாய்
உள்ளம் குமுறி உதிர்க்கும் விழி அருவி நீர் -அந்தோ!
கள்ளம் அறியாத அந்தக் கடாவின் நிலை கொலையேயாம்.

மெல்லச் சித்தெறும்பு தன்குழந்தை மேனியில் ஊர்ந்தாலும்
துள்ளிப் பதைத்து துடித்தழு வாளாம் அதன் அன்னை;
வெள்ளாட்டுக் குட்டி கழுத்தறுக்கவென கொண்டு செல்வதை
வேலியால் பார்க்கும் தாயாட்டிற்கும் இத்தவிப்பு உண்டல்லோ?

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழுமென வள்ளுவர் சொல்லி வைத்தார்
நல்லாய் இதனை நாள்தோறும் நம்மவர் கற்ற பின்பு - அவ்வழி
நில்லாது நெடிய குற்றம் செய்கின்றாரே.

அன்பு, அறம், பண்பு, பரிவு, பாச உணர்வு
அனைத்தும் தெரிந்தவன் தான் ஆறறிவு படைத்த மானிடன்
வம்பு, தும்பு, வாய்த்தர்க்கம் என வாய்மை யின்மை
துன்பச் செயலால் ஏன் ஐயா துயரம் பல கொள்கின்றீர்!

இம்மையில் நீங்கள் செய்யும் நன்மை தீமை,
மறுமையில் உங்கள் மடிதவழும் அறிந்து கொள்வீர்!
இருமைக்கும் பெருமை வரம் தரும் இறைவன் சந்நிதானம்
திருவுற்று சிறந்த சூழல் மலர சிரமேந்திச் சேவை செய்வீர்.

வலி.மேற்கு தேசம் மட்டுமல்ல மிருக பலி - இனி
ஒரு போதும் எங்கும் வேண்டாம்; இறையருள் சந்நிதியில்
பலி எனும் பாவம் பண்ணி நிதம்
கலி பிடிக்க உறவுகளை காரணம் ஆக்கலாமா?

திருவோடு கையிலேந்தி தெருவோரம் பிச்சை கேட்டு வாழலாம்;
கருவாகி உருவான கடா, பலிக்காய் கழுத்தறுப்பு;
வருவாய்க்கா? வாய்க்கரிசிக்கா? வரம் பெறவா?
ஒருபோதும் மிருகபலி இனி வேண்டாம் எங்கும்

அருகிவரும் மிருகபலி பெருகிட இனியும் வேண்டாம்
அருள்வழங்கும் ஆலய சூழல்கள் அசுத்தப்பட வேண்டாம்
பெருநோய்கள் பிரச்சினைகள் தீர பலி, பிழையான முடிவாகும்;
வருமிடர் வழிவிட வாயாறக் கேட்டால் வரமளிப்பான் இறைவன்.

# மறைஞான அநுபவ வெளிப்பாட்டில் மாணிக்கவாசகரும் குணங்குடி மஸ்தான் சாகிபுவும்

**திருமதி பங்கையற்செல்வி யோகநாதன்**
ஆசிரியர், யாழ்/வட்டு.இந்துக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

"உலக மொழிகளில் வேறுபட்ட இலக்கியங்களில் மன்னும் உறவை இணைத்துக்காட்டலே ஒப்பிலக்கிய ஆய்வின் நோக்கமாகும்" என்பர் ஆஸ்கர் ஜெ.கம்பெல் மொழி யாப்பு அமைப்பினைக் கடந்த உணர்வின் வெளிப்பாடுகள் இலக்கியங்கள், மொழியாக்கங்கள் வழியே இன்னொரு நாட்டின் ஆன்மாவினை உணரும்போது எல்லை கடந்த மானிடம் ஒத்திசைக்கும் உண்மை பெறப்படும் மனித ஆன்மாவின் குரல்தானே இலக்கியம்? இருவேறு மொழிகளின் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராய்தல் வாயிலாக இனம், மொழி, நாட்டு எல்லைகளைக் கடந்த உலக இலக்கியப் பொதுமைக் கூறுகளை நாம் காண இயல்கிறது. உலகளாவிய திறனாய்வுப் பார்வைக்கு இது வழியாகிறது.

இந்தவகையில் மொழியால், மதத்தால் வேறுபட்ட மாணிக்க வாசகரும் குணங்குடி மஸ்தான் சாகிபுவும் மறைஞான அநுபவம் என்ற கோட்பாட்டில் தமது ஆக்கங்களில் மன்னும் உறவினை நோக்குகின்ற பொழுது சைவப் பாரம்பரியத்தில் தோன்றிய மாணிக்கவாசகரின் திருவாசகம் மிகச்சிறந்த பக்தி நூல், ஞான நூல் என்பது யாவராலும் அறியப்பட்டதாயினும் அது மிகச்சிறந்த மறைஞான நூலாகவும் விளங்குவதை ஆய்வின் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது. புலமைத் திறனும் படைப்பாற்றல் திறனும் கொண்ட மாணிக்கவாசகர் இறைவன் திருவருளைப் பெற்ற பின் அருட்புலமையாளனாக மறைஞானியாக விளங்குகின்றார்.

முற்றுமுழுதாக குர்ஆனையும், அரபையும் அடிப்படையாகக் கொண்ட இஸ்லாத்தில் சிற்றின்பத்தில் மூழ்கிப் பேரின்பத்தை மறந்து விடாமல் பரம்பொருளை அடைவதையே குறிக்கோளாகக் கொண்ட வழி சூஃபிநெறி ஆசாபாச அழுக்குகளைப் போக்கிப் பரிசுத்தத்தைப் போற்றுவது இறைவனின் கல்யாண குணங்களின் குடியிருப்பதாகத் தம்மை ஆக்கிக் கொள்ளச் சாதகரைத் தூண்டுவது. இத்தகைய சூஃபிநெறியில் ஊறித் திளைத்தவர் மஸ்தான் சாகிபு. இவரின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிர் என்பது இறை குணங்கள் நிறைந்தவராக இருக்க விரும்பிக் "குணங்குடியான்" எனப் பெயர் பெற விளைந்துள்ளார். இவர் சாத்திரம் சடங்குகளைக் கடந்து வேற்றுமையில் ஒற்றுமை காணும் மெய்புணர்வுக் கவிஞராகவும் விளங்குகின்றார். இயற்பெயர் மறைந்து "குணங்குடி மஸ்தான்" என அழைக்கப்பெற்றுள்ளார் "மஸ்த்" எனும் பாரசீகச் சொல்லானது போதை, மயக்கம் எனப் பொருள் தரும் " இறை காதல்" எனும் போதை மிகுந்திருந்தார்" என்பதை இவர் பெயர் புலப்படுத்துகிறது.

தமிழ்ப் பண்பாட்டுடன் இணைந்த இந்தியப் பண்பாடு சாராத முதல் மதமான இஸ்லாம் சமய மீதுணர்வுடமை காரணமாகச் சமய அடிப்படைகளையும் அதன் காரணமாகக் கிரியைகளையும், தத்துவங்களையும் நெகிழ்ச்சியற்ற முறையில் மிக இறுக்கமாகப் போற்றி வந்தது. அதுவும் பிறிதொரு மதப் பண்பாடு சமூக மேலாண்மையுடன் இருக்கும் சூழலில் அவற்றின் இறுக்கமான கடைப்பிடிப்பு ஒன்றே அந்த மதத்தின் தனித்துவமான உத்தரவாதமாக அமைந்திருந்தது. அரபு ஒன்று தான் இஸ்லாத்தின் சடங்காசார மொழியாகும். இஸ்லாமியச் சிந்தனைகள் குர் ஆனிலிருந்தே முகிழ்கின்றன. இந்த முகிழ்பினடியாக அரபு பாரசீக இலக்கியங்களின் உணர்வோட்ட சிந்தனாநெறி விஸ்தரிப்பு என்று சந்தேகத்துக்கிடமின்றி கூறத்தக்கதாய் தமிழிலக்கியத்தில் இடம்பெற்றிருப்பது குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் சூஃபிக் நிலை சரிதையாகும்.

இவரது கவிதை தமிழ்க்கவிதை சுட்டும் மறைஞான அநுபவ வெளிப்பாடுகளோடு மிகவும் பொருந்துவதாகக் காணப்படுகிறது. இவரது கவிதைகளுக்கும், தாயுமானவர் கவிதைகளுக்குமிடையே நிறைய ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இதைவிட மாணிக்க வாசகர் கவிதைகளோடும் சித்தர் பாடல்களோடும் மறைஞான அநுபவ வெளிப்பாட்டில் இவர் ஒத்திருப்பதைக் காணலாம்.

மறைஞானம் மனிதனைப் போன்று மிகப் பழமையானது. உலகிற் தோன்றிய ஒவ்வொரு மதமும் அகம் - புறம், ஆன்மா, சரீரம், இறைஞானம் அதன் அனுட்டானங்கள், சடங்குகள் என இரு பகுதிகளைக் கொண்டது. இப்பகுதி மேலைத்தேய நாடுகளில் இறை ஞானவியல் (The Osophy) என்றும் கீழை நாடுகளில் (வடமொழியில்) "பிரம வித்திய" என்றும் அழைக்கப்படுகின்றது. "தானாக மனித ஆன்மாவானது இறைவனோடு ஒன்ற (Personal Union) வகை செய்யும் நிரந்தரமான மாறுதலடையாத தனிச்சிறப்பிற்குரிய நேர்த்தி முறையே மறைஞானம்" (Mysticism) என்று ஏ.ஜே.ஆர்பெரி கூறுகிறார். எச்சமயத்தவருக்கும் எந்நாட்டவருக்கும் அது ஏகபோக

உரிமையன்று. வேறுபட்ட சமுதாய நெறி முறைகளைப் பின்பற்றி வாழ்ந்து வந்த மறைஞானிகள் அதே ஆர்வத்தோடு இதை வளர்த்து வந்தனர். பிற சமயங்களைப் போல இஸ்லாத்திலும் மறைஞானத்தை வளர்த்து இறைவனை அடைவதற்கு முயற்சிகள் உருவாயிற்று. அந்த முயற்சிகளில் ஒருவராகவே குணங்குடி மஸ்தான் சாகிபுவை நோக்க முடிகின்றது.

சாஸ்திரங்களிலும் சடங்குகளிலும் சமயங்கள் வேறுபட்டிருப்பினும் படைத்துப் பாதுகாக்கும் இறையன்பைப் பெறுவதையே அவை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த வகையில் சைவ பக்தி மரபின் ஆளுமைகளில் ஒருவரான மாணிக்கவாசகரும் சூஃபிக்நெறி நின்ற குணங்குடி மஸ்தான் சாகிபுவும் மறைஞான அநுபவத்தில் ஒன்றுபடுகின்றனர்.

ஆயினும் குணங்குடி மஸ்தான் சாகிபுவின் பாடல்களை ஆராய்கின்ற போது இவர் அடிப்படையில் ஒரு சித்தராகவே காணப் படுகின்றார். சித்தர்களுக்குரிய பண்புகளே இவரிடம் மேலோங்கிக் காணப்படுகின்றன. உண்மையில் தமிழிலுள்ள சித்தர் பாடல்கள் மிக ஆழமாக மறைஞானப்பண்பும் மெய்யியல் அடிப்படையும் துலங்குவன. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் பாடல்களையும் ஆராயும் பொழுது இவ்உண்மை பெறப்படும். இதுபற்றிப் பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுகையில் "இஸ்லாத்தின் ஏகத்துவ இறைக்கொள்கைக்கும் (எமது கொள்கைக்கும்) வேறுபாடுண்டு. ஆனால் பல்வேறு தெய்வ மூர்த்தங்களுக்கு அப்பால் நிற்கும் பேரிறையைக் காணும் மெய்த்தேடல்கள் சைவசித்தாந்தத்திலும், சித்தர் பாடல்களிலும் சொல்லப்பட்டதற்குப் பின்னரே தமிழில் இஸ்லாத்தின் ஏக இறைக்கோட்பாட்டை தமிழில் வெளிப்படுத்த வேண்டிய ஓர் இலக்கியத் தயார் நிலையை முந்திய முயற்சிகள் ஏற்படுத்தின என்று கொள்வதில் எவ்வித தவறும் இருத்தல் முடியாது. குணங்குடியாரின் பாடல்கள் தமிழிலக்கியத்தில் பெறும் இடத்தினைப் பற்றிய ஆய்வின் புகுமுகம் சற்று அகட்டப்பெறுமானால் அனைத்திந்திய மட்டத்தில் பக்தி நெறிக்கும், சூஃபி நெறிக்கும் இயைபும் இணைவும் ஏற்படுவதனை கபிர், நானக் ஆகியோரிடத்தில் காணலாம். குணங்குடியாரின் பாடல்கள் இச்செயன் நெறியின் தமிழ்நிலை என்றே கொள்ளப்படவேண்டும். இத்தகைய ஞானியரை ஆகம பண்டிதரும் உலமாக்களும் தத்தமது கண்ணோட்டத்தில் நின்று கொண்டு கண்டித்துள்ளனர். எனினும் இவைகள் அடிநிலை மக்களிடையே இஸ்லாமும், இந்துமதமும் ஏற்படுத்திய உணர்வொன்றுமையின் தத்துவ இலக்கிய பிரதி பலிப்புகளாகக் கொள்ளப்பட வேண்டும்" என்பார்.

இதைவிட குணங்குடியார் பாடல்களுக்கும், தாயுமானவர் பாடல்களுக்குமிடையே ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவை இருவரதும் மறைஞான அநுபவ வெளிப் பாடுகளாகவே அமைகின்றன. நந்தீஸ்வரக் கண்ணி, மனோன்மணிக்கண்ணி ஆபத்துப் பத்து ஆகிய பகுதிகளில் இருவரது கவிதைகளும் ஒற்றுமைப்படுகின்றன.

சித்தர்களோடும், தாயுமானவரோடும் ஒற்றுமைப்படுமளவிற்கு மாணிக்கவாசகரோடு நெருக்கமான உறவை குணங்குடியார் கொண்டிராதபோதும் இறையுடனான இணைப்பை ஏற்படுத்துகின்ற அன்பின்

வெளிப்பாடான மறைஞான அநுபவத்தில் இறைக்கும் ஆன்மாவிற்குமிடையிலான தேடலில் அந்த இறை அநுபவத்தை தாம் வாழ்ந்த சமூகக் குறியீடுகளினூடாக வெளிப் படுத்தும் வகையில் இவர்கள் ஒற்றுமைப் படுகின்றார்கள். அகக்கண்ணால் தாம் அநுபவித்த அநுபவத்தைப் பகிர்ந்து கொள்ள வார்த்தைகளால் எடுத்துக்கூற முடியாது. இருவரும் இடர்படுவதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் அப் பௌதிக நிலைப்பட்ட இறைவனுக்கு பௌதிகத்தை கொடுக்கும் முயற்சியில் இருவரும் ஒற்றுமைப் படுகின்றனர்.

"தேடக் கிடையாத திரவியமே தேன் கடலே" எனக் குணங்குடியார் பாட மாணிக்கவாசகர்
"ஆரமுதே அலைகடலே கரும்பே தேனே
ஆனந்தமலையே என் வாழ்முதலே"

எனக் குறிப்பிடுகின்றார். குணங்குடியார் யோக பரிபாஷைச் சொற்களாக சிவம், சக்தி, உமை, மனோன்மணி, அம்பிகை, வாலை, பரை, கேசரி, சாம்பசி, தட்சணாமூர்த்தி முதலான சொற்களைக் கையாள மாணிக் கவாசகர் எங்கள் பெருமானே சிவனே, சிகாமணி, ஈசன், அத்தன், கானவன், ஒளி என இறைவனைத் தன் சொற்களுக்குள் அகப்படுத்துகின்றார். மாணிக்கவாசகர் கையாளும் சொற்களை யோகபரி பாஷைச் சொற்களெனக் கூறமுடியாது. அவர் தன்னித யத்தால் இறைவனை அறிந்து அந்த அறிவின் இருப்பிடமான இறைவனைத் தன் வார்த்தைக்குள் சிக்கவைப்பதாகவே அவர் கையாளும் மொழி அமைகின்றது.

தன்னைப்பற்றியும் தன் ஆத்மாவைப் பற்றியும் அறிந்தவனாகிய மறைஞானி இறைவனோடு இணைவதன் மூலம் ஞானத்தைப் பெற்றுக் கொள்கிறான். இறைவனோடு ஒன்றி நிற்கும் வரைதான் அவனுள்ளத்தே தன்னிறைவு சாந்தி, விடுதலை என்பன ஏற்படுகின்றது. அந் நிலையில் மறைஞானியின் உள்ளத்தில் ஒளி பெருகுகின்றது. திருப்பெருந் துறையிலு றைபவனும், ஒப்பற்றவனுமாகிய இறை வனின் அருளொளியானது மீளாப் பிறவிக்கு வராத வீட்டு நெறியினைத் தந்து தெவிட்டாத அமுதாய் அமைந்தது என்பதை:

"வாரா வழியருவி வந்தெனக்கு மாறின்றி
ஆரா வமுதாய் அமைந்தன்றே - சீரார்..."
(திருவெண்பா 623)

என மாணிக்கவாசகர் குறிப்பிட குணங் குடியார் எட்டாவது காட்சி நிலையில்,

"வளி வசப்படும் பொறி வசப்பட்டுந்
தெளிவசந்திருந்த சிந்தையையனைத்தும்
ஒரு வழியோங்கு முயர் மனவழியே
திருவொளி கனிந்து திவலையிற்றிகழ்ந்து
வெளியிலிரவும் விளங்கிய பகலும்
ஒளியாயிருந்த வுவமையென்னத்
தோற்றுந்தோற்றத் தோற்றவருள்கெனப்
போற்றிப் போற்றிப் புகழ்ந்திரந் துயர்த்தது"
எனக் குறிப்பிடுகின்றார்.

உயர் மெய்ப்பொருளாகிய இறைவன் மறைஞானியிடத்தே விசேடத்துவம் பெறுகின்றான். மறைஞானி எப்பொழுதும் தன்னுள்ளே இறைவனைத் தேடுபவராகவும்,

காண்பவராகவும் இருக்கின்றார். இந்நிலையில் மறைஞானி தன் சித்தத்தை இறை சித்தத்துடன் இணைக்கின்றார். இந்தப் பண்பினை மாணிக்கவாசகரிடமும் குணங்குடியாரிடமும் அவதானிக்கலாம் தமது சித்தத்தை இறைசித்தத்தோடு இணைத்த இவர்கள் தமக்கு எல்லாமே அந்த மெய்ப் பொருள் தான் என்ற உணர்வு நிலைக்குள் வருகின்றார்கள் மாணிக்கவாசகர்.

"மின்னை ஒப்பவனே மெய்யே உவமிக்கின்
உன்னையே ஒப்பவனே உத்தரகோச
மங்கைக்கு அரசே
எனக்கு அன்னையே ஒப்பவனே அத்தனை
ஒப்பவனே
எனது அரும்பொருளாயுள்ளவனே....
என்னைப் பார்த்து அப்பா அஞ்சல் என்று
சொல்லிப் பாதுகாப்பவர் ஒருவருமில்லாது
வருந்தி நின்று எய்தலைந்தேன்
என்னைக் கைவிடு கின்றனையோ
கைவிடாத தொழிதல் வேண்டும்"
(நீத்தல் விண்ணப்பம்)

என்று குறிப்பிட குணங்குடியார்,

"மனத்தைத் தழுவித் தற்காத்துச் சீராடச்
செல்வப்பால் கொடுத்துப் படுக்க வைக்க
வரவேண்டும்.
தாயணைவின் பந்தனைத் தந்துதந்துகை
தழுவிநின் றருள் புரியவுந்
தந்தை தாயுந்தானு மாகவுமிருந்தெனைத்
தற்காத்துனதருள் புரியவஞ்
சேயேன்றிரங்கியணை காலியின் கன்றெனச்
சீராடவருள் புரியவுஞ்
செஞ்கீரையாகு சிறுமதலைபோற்கொஞ்சி
நான் செல்வமிடவருள் புரியவுஞ்......"

என்கின்றார்.

இறைவனை உணர்ந்து அவனோடு ஒன்றிய நிலையில் "வண்டினை" (கோத்தும்பி) முன்னிலைப்படுத்தி இறைவனின் திருவடிகள் மீது கொண்டுள்ள அன்பு மிகுதியால் உலகியலை மறந்து "கோத்தும்பி இவன் கள்வன், கடியன், கலதி என்று இகழ்ந்து தள்ளி விடாமல் அருள் வள்ளலாகிய இறைவன் என் மனத்தின் கண் பக்குவம் வரவரத் தானும் மெல்ல மெல்ல வந்து நிறைவுடையவனாயினான் என்று உள்ளத்து உண்டாகும் துன்பங்கள் ஒன்றும் ஒழியா வண்ணம் எல்லாவற்றையும் தெள்ளி ஒதுக்கிய அவன் திருவடி மலர்களிலேயே சென்று படிந்து ஒலித்து ஊதிப் பேரின்பத்தேனை நுகர்வாய்" என்று மாணிக்கவாசகர் குறிப்பிட குணங்குடியார்;

மெய்ப்பொருளை, "தவராசசிங்கம்", "அகத்தீசன்" "மௌனதேசிகன்" என விழித்து இறைவனோடு ஆட்பட்ட நிலையில் தன்னை ஆட்படுத்த வேண்டும் எனத் தனக்கும் இறைவனுக்குமிடையிலான ஐக்கியத்தினை வெளிப்படுத்துவதை

"காமக்குரோதமோ கக்கிளை களைந்து நான்
களைதீர வருள் புரியவும் ......
ஓமங்கண்முதலான நியமங்களெல்லா
மொதுக்குவித் தருள்புரியவும்
ஊருக்குளூர்திரிந் தலையாமலூதரு
ளுறைந்திடற் கருள் புரியவும்
மாமேருவொத்த மெய்த் தவராஜசிங்கமே"

வரவேண்டு மென்றெனருகே
மாகுணங்குடிவாழு மென்னகத்தீசனே
மவுனதேசிக நாதனே!

எனக் குறிப்பிடுகின்றார்.

மாணிக்கவாசகர் சிவனோடு ஐக்கிய மாகிய நிலையைச் சுட்ட தான் மெய்ப் பொருளோடு ஐக்கியமாவதற்கு தன்னகத்தே குடி கொண்டிருக்கும் அந்த ஈசனை மேலும் அருகே வரவேண்டுமென அழைக்கின்றார்.

ஒவ்வொரு மறைஞானியும் தினசரி ஒழுக்க வாழ்வுடன் ஆழமான தொடர்புள்ளவன் ஒழுக்கம் மீதான கவனம் மறைஞானியிடம் கூடுதலாகக் காணப்படும். மாணிக்கவாசகர் தன் கடந்த காலம் தொடர்பான மீட்டலின்போது ஒழுக்கமற்று தான் வாழ்ந்த வாழ்வியலை எண்ணிப்பார்க்கின்றார். அதே சிந்தனையை குணங்குடியாரிடமும் காணமுடிகின்றது. இது பற்றி மாணிக்கவாசகர் பல இடங்களில் குறிப்பிட்ட போதும்,

"மாடுஞ் சுற்றமும் மற்றுள
போகமும் மங்கையர் தம்மோடுங்
கூடி அங்குள குணங்களால்
ஏறுண்டு குலாவியே திரிவேனை
வீடுதந் தென்றன் வெந்தொழில்
வீட்டிட மென்மலர்க் கழல்காட்டி
ஆடு வித்தென தகம் புகுந்
தாண்டாதோர் அற்புதம் அறியேனே"

(அற்புதப்பத்து - 573)

என்ற செய்யுளில் செல்வத்தோடும் உறவினரோடும் மற்றுமுள்ள போகப் பொருள்களோடும், மகளிரோடும் தொடர்பு கொண்டு அங்குள்ள இயல்புகளால் கவரப்பட்டு அவ்வியல்புகளைப் பாராட்டிக் கொண்டாடித் திரிகின்ற என்னை என்னுடைய தீய செயல்களை அழித்தொழிக்கும் பொருட்டு தனது திருவடிகளை எனக்குக் காட்டி எனது அகம்புகுந்து ஆட்கொண்டருளிய அந்த அற்புதச் செயலை எவ்வாறுரைப்பேன் என்கின்றார். இதே சிந்தனை மஸ்தான் சாகிபுவிடம் காணப்படுவதை

"ஐயோ வெனக்குதவு மாதரவை விட்டு விட்டுத்
தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே"
என்கின்றார்.

இவ்வாறு தான் காடு போன்ற பிறவியில் அகப்பட்டு புழுத்தலை நாய் போல மகளிர்க்கே அவர் விரும்பினவற்றைச் செய்துகொண்டு அவர்களோடு கூடி அலைந்து திரிகின்ற என்னை எனது தந்தையாகிய இறைவன் இவ்வுலகத்தில் திருமாலும், பிரமனும் அறிய முடியாத தனது திருவடிகளைக் காட்டியருளி என்னை ஆட்கொண்டருளிய அற்புதச் செயலை இத்தன்மைக்கு என சொல்ல அறியேன் என்பதை,

"பொச்சை யான இப்பிறவியினிற்
கிடந்து நான் புழுத்தலை நாய்போல
இச்சை யாயின ஏழையர்க்
கேசெய்தங் கிணங்கியே திரிவேனை
இச்ச கத்தரி அயனுமெட்
டாததன் விரைமலர்க் கழல் காட்டி
அச்சன் என்னையும் ஆண்டு கொண்
டருளிய அற்புதம் அறியேனே"

(அற்புதப்பத்து பாடல் - 575

எனக் குறிப்பிட மாணிக்கவாசகர், குணங்குடியார் தன்னை ஆட்கொண்டருளிய மெய்ப்பொருளை அகத்தே மெய்ச்சி தன் அகத்தீசனைத் 'தனக்கு அருளவா' எனக் குறிப்பிடுகின்றார்.

"துர்ச்சனேனாயினும் பட்சம் வைத்
தென்றனைத்
தொழுதுகொண்டருள் புரியவும் ..........
களகளென்றானந்த பாஷ்பமிருகண்ணிற்
கழன்றிடர்க் கருள் புரியவும்
எச்சித்தனம் பண்ண வேண்டாமெனையனே
யெல்லா நீ ரருள் புரியவும்"

இவ்விடத்தில் மாணிக்கவாசகர் இறைவன் தனை ஆட்கொண்டமையை மெய்ச்சி இறைவனிற்கு நன்றி கூறுவது போல் தனது அனுபவத்தை வெளிப்படுத்தும் போது குணங்குடியார் தான் பெற்ற அனுபவத்தை இனியே பெறப்போவதாக இறைவனை மன்றாடுவதாகக் கவிதையை அமைத்துள்ளார்.

கடவுளை அடைவதற்கு மூன்று வழிகள் உண்டு என இஸ்லாமியர் கூறுவர். "செய்கை, அன்பு, அறிவு" என்ற மூன்றுமே அவர்கள் கூறும் நெறிமுறையாகும். இந்துக்கள் இதனை "கருமமார்க்கம் , பக்தி மார்க்கம், ஞான மார்க்கம்" என்பர் ஒருவன் நாளாந்த வேலைகளைத் தவறாது செய்வதன் மூலம் அந்த ஆனந்த இருப்போடு எவ்வாறு தொடர்பு கொள்ளலாம் என்பதைக் கருமயோகமும் ஒருவன் தனது உணர்வுகளை சிறப்பாக ஆற்றுப்படுத்துவதன் மூலம் அந்த நிலையை அடையலாம் என்பதை பக்தி யோகமும், தீட்ஷண்யமான அறிவின் சுயவிசாரணை மூலம் அந்த நிலையோடு எவ்வாறு தொடர்பு கொள்ளலாம் என்பதை ஞானயோகமும் காட்டுகின்றன. இது ஏனெனில் மனிதனுக்கு மூன்று ஆற்றல் வசதிகள் உண்டு. ஒன்று அறிவாற்றல், இன்னொன்று உணர்வாற்றல் மற்றொன்று செயலாற்றல், செய்கைகளின் மூல இடமே உடம்பு, இதயம் உணர்வுகளினதும் அன்பு பக்தி ஆகியனவற்றின் மூலஸ்தானம் அறிவு அறிவுக்காக அறிதல் போன்றவற்றின் மூலஸ்தானம் மனிதன் இம்மூன்று வாய்ப்புக்களின் ஊடாக இறைக்குள் நுழைய முடியும்.

உயர்ந்த மெய்ப்பொருளாகக் காணப்படும் இறைவனை அல்லது மெய்ப்பொருளை மறைஞானி உணர்பவனாகவும், தேடுபவனாகவும் காணப்படுகின்றான். அவனிடம் பக்தி வைராக்கியம் ஏற்படுகின்றது. மறைஞானிகளான மாணிக்கவாசகரும், குணங்குடி மஸ்தான் சாகிபுவும் சாஸ்திரங்களினாலும், சடங்குகளினாலும் வேறுபட்ட மதங்களைக் கொண்டிருந்தாலும் இறை அன்பைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள். அன்பு, இரக்கம், பொறுமை முதலான பண்புகளைப் போற்றியவர்கள். இறைவனின் படைப்புக்களாகிய மக்களிடம் பாசமும், நேசமும், காட்டி உதவிவர வேண்டும் என வலியுறுத்தும் உயர்ந்த உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட சமயங்களைச் சார்ந்தோர் இறைவனுக்கு எண்ணற்ற பெயர்களையும், கதைகளையும் கற்பித்துக்கொண்டு பல்லாயிரக்கணக்கான பிரிவுகளையும் படைத்துக்கொண்டு என் தெய்வம் உன் தெய்வம் என்று மாறுபட்டு

சண்டையிட்டு வருகின்றனர். காக்கப்பட வேண்டிய உயிர்கள் போக்கப்படுகின்றன. ஆக்கப்படவேண்டிய அறங்கள் அழிக்கப் படுகின்றன. இவ்வவல நிலையைக் கண்டு மஸ்தான் சாகிபு மதவேதம் மோதிடச் செய்வாயோ! இல்லை மதமற்ற ஞானத்தை படித்திடச் செய்வாயோ? என ஆன்ம பயணத்திற்குத் தடையாக இருக்கும் அனைத்தையும் நீக்கியருள வேண்டும் என இறைவனை வேண்டுகிறார்.

இவ்விடத்தில் மாணிக்கவாசகர் சிவனையே மெய்ப்பொருளாகக் கொண்டு அவனையன்றி வேறெதையுமே கருதாது தன் ஆன்ம பயணத்திற்குத் தடையாக இருக்கும் அனைத்தையும் நீக்கியருளுமாறு இறைவனை மன்றாடுகின்றார்.

மஸ்தான் சாகிபு சமய பேதங்களை நீக்குவதற்கு பல வழிமுறைகளை காட்டு கின்றார். பல பெயர்கள் கூறி பல முறை களால் வழிபடும் இறைவனின் ஒருமை யும் பொதுமையும் பல நிலைகளில் புலப்படுத்துகின்றார். எல்லாப் படைப்புக் களையும் படைத்து ஆகாரமளித்து ஆதரிப் பவன் இறைவன் ஒருவனே, வேறு எவருமல்லர் என்று உடன்பாட்டிலும் எதிர் மறையிலும் விளக்குகின்றார். பார்க்கப் பலவிதமாகத் தோன்றுகின்றான். அவற்றைக் காக்கும் நிலைக்கு உயிராகவும் இருக்கின்றான். அனைத்திற்கும் காரணமான பூரணை நாதனாகவும் விளங்குகின்றார் எனப் போற்றுகின்றார். அங்கிங்கு என்று கூறவியலா எங்கும் நிறைந்த அகண்ட பரிபூரணமாகவும் இறைவனை வர்ணிக் கின்றார். நான்மறையின் உட்பொருளாகக் கூறி இறைவனின் எங்கும் இருக்கும் உண்மையைப் புலப்படுத்துகின்றார்.

சூஃபி நெறிக்கும் தமிழ்நாட்டுச் சித்தர் நெறிக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. மஸ்தான் சாகிபு பாடல்களில் சித்தர்களைப் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. ஆதலின் இவரை “முஸ்லிம் சித்தர்” என்பர் சித்தர் பரிபாஷைகளை கையாண்டு தம் ஆன்மீக அனுபவத்தை ஆற்றலுடனும் இலக்கிய நயத்துடனும் விளக்குகின்றார். அம்பிகை, மனோன்மணி, உமை, சக்தி முதலியன குண்டலினியைக் குறிக்க வந்துள்ளன. இவ்வாறே சிவன்,வாசு தேவன், சிற்றம்பலம், சிதம்பரம் மன்று திருநடனம், திருக்கூத்து முதலிய பரிபாஷை களை மறைஞான அனுபவத்தை விளக்கப் பயன்படுத்துகின்றார். மேலும் தெட்சணா மூர்த்தம், இந்திரன், அளகேசன், கர்ணண் முதலிய பொருள்களைத் தரும் குறியீடு களாகவும் ஆளுகிறார்.

ஆனால் மாணிக்கவாசகர் சித்தர் மரபிற்குள் வராதவர். அவர் இறைவனை அணுகியமுறை வேறு குணங்குடியார் இறைவனை அணுகிய முறை வேறு. முதலாவது தமிழ்ப்பண்பாட்டுடன் இணைந்த இந்தியப் பண்பாடு சாராத முதல் மதம் இஸ்லாம் மாணிக்கவாசகரும், குணங்குடியாரும் தமிழ்ப்பண்பாடு பக்தி மரபின் அடியாகத் தோன்றிய வகையில் ஒற்றுமைப்படுகின்றார்கள். இருவரும் இறைவனை அறிந்தவர்கள் அதனால் உயர் ஞானத்தைப் பெற்றவர்கள் இறை வனைக் கண்ட மறைஞானி அவனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள

முனைகின்றான். மறைஞானி ஆழமான நீரில் அமிழ்ந்த நிலையில் செய்வதறியாது தவிப்பவன் போல் தாம் பெற்றுக்கொண்ட ஞானத்தைச் சொல்லவோ மெல்லவோ முடியாது தவிக்கின்றான்.

அந்தத்தவிப்பினை இருவரது கவிதைகளிலும் காணமுடிகிறது. இருவருமே உலகியல் இன்பங்களில் ஊறித்திழைத் திருக்கின்றார்கள். இறைநெறிக்குத் தாம் தகுதியுடையவர்களா என ஐயப்படுகின்றார்கள். இதனால் ஒழுக்கக் கோட்பாடு பற்றிப் பேசுகின்றார்கள். மாணிக்கவாசகர் கவிதைகளில் மறைஞான அநுபவம் இறைவனை மெச்சிப்பாடுதல், நன்றி பாராட்டுதல் என சொல்கடந்த சொற்களால் தனது அநுபவத்தை வெளிப்படுத்த மஸ்தான் சாகிபு தான் அநுபவித்ததை அநுபவிக்காதது போல் அதைத் தனக்குத் தருமாறு இறைவனை வேண்டுகின்றார். மாணிக்கவாசகர் ஒரு நாயனார். குணங்குடியார் ஒரு சித்தர். இருவரது மறைஞான அநுபவங்கள் ஒன்று பட்டபோதும் அதைப் பகிர்கின்ற முறையே மாணிக்கவாசகரைவிட தாயுமானவர் மற்றும் சித்தர்களுடனேயே குணங்குடியாரின் மறைஞான வெளிப்பாடு ஆனது பெரிதும் ஒத்திருப்பதைக் கண்டுகொள்ள முடிகிறது.

உசாத்துணைகள்:


1. தமிழ் இலக்கியத்தில் மதமும் மானிடமும், சிவத்தம்பி.கா.
1. மஸ்தான் சாகிபு போற்றும் மனித ஒருமைப்பாடு, நையினார்முகமது,6வது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஆய்வுக் கட்டுரை, மலேசிய உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 1980.
2. திருவாசக ஆராய்ச்சி உரை (1ஆம் பாகம்), அருளம்பலவாணர்.சு, 1967.




# தமிழர் பண்பாடும் ஓவியக்கலையும்

**திரு. கி.நிறஞ்சன்**
ஆசிரியர்,
யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்

பண்டைய காலம் தொட்டு இன்றுவரை ஓவியக்கலையானது படிப்படியாக முன்னேற்றத்தைக்கண்டு வருகின்றது. அந்த வகையில் இலங்கையில் படிப்படியான முன்னேற்றத்துடன் கலைகளுக்காக குறிப்பாக சித்திரம், சிற்பம், கட்டடம் என்பவை வளர்ச்சி காணும் காலமாக நான்கு காலப்பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. அவை அனுராதபுரம், பொலநறுவை, கண்டி, கொழும்பு எனப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அனுராதபுர காலத்தில் பௌத்த மதத்தின் செல்வாக்கோடு அது அமைந்தது. அடுத்து பொலநறுவைக் காலத்தில் சோழ மன்னர்கள் குறிப்பாக இராஜராஜசோழன், இராஜேந்திரசோழன் ஆகியோர் காலத்தில் தமிழர்கள் தழுவியிருந்த இந்துமதம் வளர்ச்சியைப் பெற்றிருப்பதுடன் சமயங்களுக்கும் தமிழர்களின் பண்பாடுகளுக்கும் ஏற்றமுறையில் சிற்பங்களையும் ஓவியங்களையும் உருவாக்கினார்கள். அதனைத்தொடர்ந்து கண்டி காலத்தில் தமிழ்க் கலைஞரான தெல்மட மூலாச்சாரியரால் அமைக்கப்பட்டது. இவற்றோடு கொழும்பு நகர்க் காலத்திலும் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் அமைத்து அதிலும் ஓவியமும் சிற்பங்களும் அமைக்கப்பட்டது.

தலைநகரை அடுத்து தமிழர் ஓவிய கலையை இலங்கையில் அதிகம் பறைசாற்றிய இடம் யாழ்ப்பாணமே ஆகும். அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் தமிழர்களின் ஓவியக்கலையை அறியக்கூடிய வகையில் காணப்படும் இடங்களாக அதிகம் ஆலயங்களே காணப் படுகின்றது. அத்துடன் ஓவிய வடிவிலான எழுத்துக்கள் கூட நினைவுக் கல்வெட்டுக்களில் காணக்கூடியதாக உள்ளது. ஈழத் தமிழர்களின் ஓவியக்கலை பற்றிய விடயங்கள் அனைத்துமே யாழ்ப்பாணம் பொது

நூலகத்தில் ஆரம்ப காலத்தில் இருந்தது. பின்னர் போர்த்துக் கேயர்காலச்சூழலில் அந்த நூலகம் எரிக்கப்பட்டதால் பல சான்றுகள் இல்லாமல் போய்விட்டது. அவ்வாறு தமிழர்களின் பழமை வாய்ந்த ஓவியக் கலைஞர்களின் ஓவியங்கள் பற்றிய செய்திகள் சில விரல்விட்டு எண்ணக்கூடிய வகையில் உள்ளமையைக் காணலாம். தற்காலத்தில் அமைந்த ஓவியர்களில் தாவடி மு.துரைசாமி அவர்களும் ஒருவராவார். இவரால் தாவடி முருகமூர்த்தி கோவிலில், வெள்ளைக்கை ஐயரும், விநாயகரும் வெள்ளைச்சேவல், அலங்காரங்களும் தாவடி முருகமூர்த்தி கோவிலில் காவடிக்காரன், வள்ளியை ஈன்ற மான் வசிட்டரும் காராம்பசுவும், வள்ளியை துரத்தும் காட்சி போன்றவை ஆலயங்களில் வரைந்துள்ளதுடன், வீடுகளிலும் ஓவியங் களையும் அலங்காரங்களையும் வரைந் துள்ளார்.

பழம்பெரும் கலைஞர்களில் அடுத்து நல்லூர் பெரிய தம்பி சுப்பிரமணியம் (மணியம்) என்பவர். பல ஆலயங்களில் ஓவியங்களை வரைந்திருக்கின்றார். அந்தவகையில் நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோவிலிலும் வீரமாகாளி அம்மன் கோவிலிலும் இணுவில் பரராச சேகரப் பிள்ளையார் கோவிலிலும் மானிப்பாய் சுதுமலை அம்மன் கோவிலிலும் வேலணை அம்மன் கோவிலிலும் ஓவியங்களை வரைந்துள்ளதுடன், சினிமாக்களுக்கான விளம்பரப்படம் (கட்அவுட்) என்பவற்றையும் வரைந்துள்ளார்கள். இவர்களைப் போன்ற பல பழம் பெரும் ஓவியர்கள் தமிழர்களின் பண்பாட்டினை மையப்படுத்தியே உடை, பழக்கவழக்கங்கள், சமயம், பண்பாட்டிற்கான கலாசாரத்தையே மையப்படுத்தி வரைந்தது மட்டுமன்றி, அவற்றுக்கேற்ப கருத்தினை உள்ளடக்கியே வர்ணங்களைப் பிரயோகித் துள்ளார்கள்.


இதனை அடுத்து எமது கலைப் பாரம் பரியங்களை வெளிப்படுத்திக் கற்பிக்கப்படும் பாடப்புத்தகங்களில் வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கந்தையா மற்றும் சங்கானையூரைச் சேர்ந்த ஓவியர் ஞானம் போன்றோரின் ஓவியத்திறன்கள் பெரிதும் பாராட்டிற்குரியது. இவற்றைப் போலவே வடமராட்சி பகுதியைச் சேர்ந்த ஓவியர்களின் வரிசையில் ஓவியர் சிவசுப்பிரமணியம் (ரமணி) இவர் ஓவியர் மட்டுமன்றி சிறந்த சிற்பியுமாவார். இவரின் பெரும்பாலான ஓவியங்கள் அட்டைப் படங்களாகவே காணப்பட்டன.

குறிப்பாக ரமணி அவர்கள் கலாநிதி க.குணராசா (செங்கையாழியன்) அவரின் பல நாவல்களுக்கு ஓவியங்களை வரைந்து பல விருதுகளைப் பெற்றவர். இவருடைய ஓவியங்கள் பெரும்பாலும் எமது கலாசாரப் பண்பாடுகளை வெளிப்படுத்தி நீர் வர்ணங்களால் அலங்கரித்துள்ளார். அடுத்து ஓவியரும் படைப்பாளருமான சி. சற்குணராஜா காணப்படுகின்றார். இவரும் ஓவியக்கலையினை வளர்க்க ஓவிய வரலாறுகளைப் புத்தக வடிவில் எல்லோர்க்கும் விளங்கக்கூடிய வகையில் வெளியிட்டார். இவர்களைப் போலவே இளங்கலைஞர்களாக ஓவியர் தீபா மற்றும் கந்தசாமி, தென்மராட்சி பகுதியைச் சேர்ந்த சி.ராஜன் போன்றோர்கள் காணப்படுகின்றார்கள்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மூத்த ஓவியக்கலைஞர்களை நோக்கும்போது திருநெல்வேலியிலுள்ள S.சுந்தரலிங்கம், S.துரைவீரசிங்கம், நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஓவியர் ஞானகுரு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஓவியர் யோகநாதன், மானியூர் ஜீவா, நகைச்சுவை ஓவியர் மானியூர் ரட்ணேஸ்வரன் (ரட்ணேஸ்), கொக்குவில் ஓவியர் வரதராஜன், ஓவியர் செல்வராசா, திரைச்சீலை ஓவியர் கொக்குவில் தேவா, ஓவியர் பஞ்சன் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர்.

இளங்கலைஞர்கள் என்றரீதியில் நோக்கும் போது ஓவியர் யசோதரன் ஓவியர் பட்டாபி, ஓவியர் கணேஸ், சிற்பியும் ஓவியருமான இணுவிலூர் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, இணுவிலூர் சிவகரன், வட்டூர் யோ. கேதீசன் போன்ற பல ஓவியர்கள் காணப்படுகின்றனர். இவர்களைப் போல் பல ஓவியர்கள் எமது தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் பல ஆலய ஓவியக்கலைஞர்கள் சிறப்புப் பெற்று விளங்குகின்றனர். இவர்கள் தம் ஓவியங்களூடாக எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் மேலெழுப்பிவிட்ட பெருமைக்குரியவர்களாயுள்ளனர்.

இவை மட்டுமல்ல ஓவியக்கலையுடன் சம்பந்தப்பட்ட எமது பண்பாட்டில் ஒன்றான கோல அலங்காரங்களும் ஆடைகளுக்கான அலங்காரங்களும் காணப்படுகின்றது. அது மட்டுமல்லாது எமது விழாக்களுக்கும் பண்டிகைகளுக்கும் அழகுபடுத்தும் அலங்காரப் பொருட்களிலும் சித்திர வேலைப்பாடுகள் காணப்படுகின்றது. அத்துடன் தோரணம், பன்னை வேலைகள் என்பவற்றுக்கும் இந்த ஓவியக்கலை வலுச்சேர்த்திருப்பதைக் காண முடிகின்றது. தமிழர் தம் பண்பாட்டிற்கு ஓவியக் கலையும் பெரும் பங்காற்றி வருகின்றது.







புனித செபமாலை மாதா ஆலயம், மூளாய்.



பறாளாய்.


கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்.

# இன்றைய காலகட்டத்தில் அறநெறிப் பாடசாலைகளின் முக்கியத்துவம்

**செல்வி கேஹணுகா கருணாகரன்**
கோகுலம் அறநெறிப்பாடசாலை
அராலி.

"நெஞ்சே நீ நினையாய் நிமிர் புன்சடை நிமலனை மஞ்சாடும் மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய்" உலகில் உள்ள சமயங்கள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்ததாக விளங்குவது நம் சைவசமயமே ஆகும். தொடக்கமற்றவாறு தொன்மை வாய்ந்ததாயும் முடிவற்றவாறு எல்லையற்ற எதிர்காலம் வரையும் நிலவவல்லதாயும் நம் இந்துசமயம் விளங்குகின்றது. பேரறிஞர்களின் சிந்தனையைக் கவரவல்ல உயரிய அம்சங்கள் வாய்ந்ததாய் இது திகழ்கிறது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் வாழ்க்கையோடு நெருங்கி இணைந்த சைவசமயத்தின் கொள்கைகள், கோட்பாடுகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் தன்நிலை இழந்து வருவதைக் காணமுடிகின்றது.

இன்றைய காலகட்டத்தில் பணம் வேண்டும், பட்டம் வேண்டும், பதவி வேண்டும், மற்றவர்களிலும் பார்க்கத் தான் மேலானவன், கனவான், தர்மசீலன் என்ற பெயர் எடுக்க வேண்டும் என்பதே மனிதர்களின் பேரவா. அதற்காகப் பொய், கொலை, களவு, வஞ்சம் ஆகிய மோசடிகள் செய்வதற்கும் அவன் தயங்குவதில்லை "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற ஔவையாரின் வாக்கிற்கிணங்க கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் அறத்தின் வழியில் நின்று முத்தியடைவதை நோக்காகக் கொண்டு வாழவேண்டும்.

கடவுளை நாம் ஏன் வழிபட வேண்டும்? என்று எண்ணத் தோன்றுகிற காலம் இது. நிற்க, இருக்க, உண்ண, உறங்கநேரம் இல்லாமல் ஓடிக் கொண்டிருக்கின்றோம். தொழில்நுட்பவளர்ச்சி, நாகரிக வளர்ச்சி நம்மையெல்லாம் ஆட்டிப்படைத்துக்

கொண்டிருக்கின்றன. நமது கலாசாரம், பண்பாடு எல்லாம் மண்ணோடு மண்ணாய்ப் போய்க் கொண்டிருக்கின்றது. சைவமும் தமிழும் நிலைகுன்றி வருகின்ற இன்றைய காலகட்டத்திலே அறநெறிப் பாடசாலைகளின் பங்களிப்பானது அவசியமாகின்றது.

சைவசமயத்தின் அருமை பெருமைகள் சிறுபராயத்தில் இருந்தே மாணவர்கள் மத்தியில் புகுத்தப்படுகின்றது. மனம் முதிர்ச்சியடையாத இளமைப்பருவத்திலே விதைக்கப்படுகின்ற கருத்துக்கள் என்றும் அழியாத்தன்மை வாய்ந்தவை. இதனால் தான் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்று பெரியோர்கள் கூறுவார்கள். மாணவப் பருவத்திலே சமயக் கருத்துக்களுடன் இணைந்ததாக வாழ்க்கை நெறிகள் போதிக்கப்படுகின்றன. இவ்வாறான சிறந்த வாழ்க்கை நெறிகளைப் போதிப்பதில் அற நெறிப் பாடசாலைகள் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன.

அறநெறிப் பாடசாலைகள் மாணவர்களை கலை, இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் வளர்ச்சியடையச் செய்து அவர்களது எதிர் கால வாழ்வை வளப்படுத்துகிறது. அறநெறிப் பாடசாலைகளிலே மாணவர்களுக்கு சமயம் சம்பந்தமான புராணக்கதைகள், சமயத் தத்துவங்கள் என்பன போதிக்கப்படுகின்றன. இதன்மூலம் மாணவர்கள் அந்நெறியை அறிந்து அதைப்பின்பற்றி சமூகத்திற்கு ஏற்றவாறு வாழத் தலைப்படுகின்றனர்.

இன்றைய இளஞ்சமுதாயத்தினர் நவ நாகரிகம் எனும் போர்வையில் புதையுண்டு தூங்கவும் முடியாமல் விழிக்கவும் முடியாமல் அல்லற்படுகின்றனர். இதற்காகத் தான் அறநெறிப் பாடசாலைகள் மாணவர்களுக்கு ஒழுக்க விழுமியங்களைக் கற்றுத் தரு கின்றது. "எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கை அல்ல இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே வாழ்க்கை" என்பதற் கேற்ப அறநெறிபாடசாலைகள் மூலம் மாணவர்கள் வாழும் முறையைக் கற்றுக் கொள்ளத் தலைப்படுகின்றனர்.

அறநெறிப்பாடசாலைகளில் மாணவர் களுக்குப் பயிற்றப்படுகின்ற ஆற்றல்மிக்க மந்திரங்களின் ஒலி அலைகள் மனதைத் தூய்மைப்படுத்தவும் மனதை ஒருநிலைப் படுத்தவும் வல்லன. மனம் ஒருநிலைப் பட்டால் தான் எம்மால் இறைவனை அடையமுடியும். தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறைப்பாடல்கள் அறநெறிப் பாடசாலைகளில் பண்ணுடன் பயிற்று விக்கப்படுகின்றன.

அறநெறிப் பாடசாலைகளால் மாணவர்கள் மத்தியில் நடாத்தப்படுகின்ற கலைநிகழ்வுகள் மற்றும் போட்டிகள் மூலம் மாணவர்களது ஆற்றல்கள் வெளிக்கொணரப்படுகின்றன. "இலை மறை காய் போல" இருக்கும் மாண வர்களின் திறமைகளை வளர்க்கும் ஒரு களமாக இன்று அறநெறிப்பாடசாலைகள் திகழ்ந்து வருகின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

காலம் மாற மாற நவீன சிந்தனைகள் உருவாக மனிதரின் பழக்க வழக்கங்களும் மாறிக்கொண்டே வருகின்றன. சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பனவும் மாறத்தான் செய்கின்றன. தொன்று தொட்டு கொண்

டாடப்பட்டு வருகின்ற பண்டிகைகள் பல அறநெறிப்பாடசாலைகளின் அயராத முயற்சியினால் மீண்டும் துளிர்விட ஆரம்பித்திருக்கின்றன. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடிகளென மார்தட்டிப் பேசிய தமிழர் கள் மட்டில் பண்டிகைகளும் தமக்குரிய அநுட்டானங்களும் இன்றும் நீடித்து நிலைத் திருக்கின்றன என்றால் அதற்கு அறநெறிப் பாடசாலைகளின் பங்களிப்பே காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இவ்வாறான பண்டிகைகளை அதற்குரிய நெறிமுறைகளுடன் கொண்டாடும்போது விருந்தோம்பல், பகிர்ந்துண்ணல், விட்டுக் கொடுத்தல், பெரியோரை மதித்தல், பிறருக்கு உதவிசெய்தல் போன்ற நற்பண்புகள் நம்மி டையே வளரும். இவ்வாறான நற்பண்புகளை நமக்குக் கற்பிப்பதில் அறநெறிப் பாடசாலைகள் முன்னின்று செயற் படுகின்றன.

மனித அமைதியைப் பெரிதும் தரவல்ல மதமே உலகின் தலைசிறந்த மதமெனப் போற்றப்படுகின்றது. அத்தகைய சிறப்பு வாய்ந்த நம் இந்து மதத்தைத் தாங்கி நிற்கின்ற அறநெறிப் பாடசாலைகள் சைவ சமய விழுமியக் கருத்துக்களை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக்கூறும் அதே வேளை பண்டைய பண்பாட்டு அம்சங்களை இன்றைய இளம் தலைமுறையினருக்கு வழங்குவதற்கும் தவறவில்லை. இம்மண் ணிலே நல்லவண்ணம் வாழ்வாங்கு வாழ்வதற்கு இன்றைய காலகட்டத்தில் அறநெறிப் பாடசாலைகளின் முக்கியத்து வத்தை உணர்ந்து நம் சைவசமயம் வேரூன்றி நிலைத்து நிற்க இன்றே ஏற்ற வழிசமைப்போமாக.

**ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.**

**லியோ டால்ஸ்டாய்**

# வட்டு. மிசனரி தலைமைகளின் கவனத்தை ஈர்த்த இந்து அறிவியல் சிந்தனைகள்

**திரு. ச.நிகேஸ், M.A,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், சங்கானை.

இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முக்கியமான ஓர் திருப்புமுனையாகும். இக்காலப் பகுதியில் அமெரிக்க மிஷனரிமார் நன்கு வளர்ச்சியுற்ற வலுவுள்ள மேனாட்டுக் கல்வி மரபின் முகவர்களாகச்செயற்பட்டனர். திருச்சபை வரலாற்றிலே இக்காலம் மிஷன்களின் காலம் எனப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் கல்வி மரபு பலம் வாய்ந்ததாக இருந்தபொழுதும் அதன் தலைவர்கள் மிஷனரிமாருடன் உறவாடத் தயங்கினர். இதனால் அந்த மரபின் பெருமையையும் தொன்மையையும் மிஷனரிமாரினால் முதலில் உய்த்துணர முடியாது போய்விட்டது. ஆனால் காலக் கிரமத்தில் அதன் சிறப்பினை மிஷனரிமார் விளங்கிக் கொண்டனர்.

வட்டுக்கோட்டை செமினரியின் முதலாவது தலைமைப் பொறுப்பினை டானியல் பூவர் அவர்கள் ஏற்றுக்கொண்டார். இவர் ஆங்கிலமொழியில் மட்டுமல்லாது, தத்துவக்கோட்பாடுகளிலும் ஆராய்ச்சித் துறையிலும் வல்லவராகக் காணப்பட்டார். இவரைத் தொடர்ந்து இச்செமினரியின் தலைமைப் பொறுப்பை H.R ஹொய்சிங்டன் ஏற்றுக் கொண்டுள்ளார். இவர் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த வானசாஸ்திர நூல்களையும் சமய நூல்களையும் கருத்தூன்றிக் கற்றுக்கொண்டார். இந்துசமயம் பெருமளவிற்கு வான சாஸ்திரத்தில் தங்கியிருப்பதனை உணர்ந்து கொண்டார். எனவே இந்து சமயத்தின் வானசாஸ்திரத்தை நன்கு ஆராய்ந்து அதில் கூறப்பட்ட கருத்துக்களில் தவறுகள் இருப்பதை சுட்டிக்காட்டுதல் அவசியம் என்பதை வெளிப்படுத்தினார். வண. கலாநிதி டானியல் பூவர் அவர்கள் அராலியூரில் இருந்து விஸ்வநாதன் சாஸ்திரியாருடன் விவாதங்களில் சேகரித்த தகவல்களை

ஆதாரமாகக் கொண்டு H.R. ஹொய்சிங்டன் இந்துவான சாஸ்திரத்தின் மூலத்திலிருந்து சோதி சாஸ்திரம் என்ற நூலை ஆங்கில மொழியில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். அத்துடன் தமிழில் இருந்த ஏனைய சமய நூல்களையும் கற்றுத் தேர்ந்து மூன்று முக்கியமான சாஸ்திர நூல்களான தத்துவக் கட்டளை, சிவஞானபோதம், சிவப்பிரகாசம் போன்ற நூல்களை மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களின் தொகுதியினை "Treatises on Hindu Philosophy" என்னும் பெயருடன் வெளியிட்டுள்ளார்.

இந்துக்களின் சோதிடத்தையும் சோதி சாஸ்திரத்தையும் அவற்றின் வரலாற்றையும் முழுவதுமாக மொழி என்னும் ஊடகத்தினூடாக சொல்வதென்பது முடியாத காரியம். எனினும் சோதிட சாஸ்திரம் எனப்படும் இந்நூல் ஒவ்வொரு மாணவனும் தனது முழுமையான அறிவுத்தேடலுக்கு தெளிவுறப் படித்தறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

இந்து சோதி சாஸ்திரம் மிக விரிந்த சோதிடத்துக்கு ஆதாரமாய் உள்ள நூலாகும். இந்நூலில் இராசிப் பிரிவுகளுக்கும், இருபத்தேழு (27) நட்சத்திரப் பிரிவுகளும் இவற்றுடன் கிரகங்களின் உண்மையான பாவநிலைகளும் அவை ஒன்றை ஒன்று நோக்கி நிற்கும் நிலைகளையும் இணைத்து ஓர் சிறந்த "சாஸ்திர நூலாக" இயற்றப்பட்டுள்ளது. விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என்பவற்றைக்குறியீடுகளாகக் கொண்டு பல்வேறு சூட்சங்களுடன் கோட்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. மக்களின் பார்வைக்கு சோதி சாஸ்திரத்தையும் பார்க்க பல அர்த்தங்கள் கொண்ட ஆச்சரியப்பாங்கு மிக்க சாஸ்திரமாய் மிளிர்ந்து நிற்கிறது. இந்நூலானது வானத்தின் மகாஞான நூலானது சாஸ்திரங்களைக்கணித்துச் சொல்பவர் வருங்காலத்தினை தீர்க்க தரிசனத்தோடு கணித்துச் சொல்வதற்கும் ஒவ்வொரு மனிதனும் தனது நெறிமுறைகளையும் கூறுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும் கூறுவதோடு, தாம் அவற்றை வகுக்கக்கூடிய வல்லவர்கள் என்பதையும் இந்நூல் வாயிலாகச் சாதித்திருக்கின்றார்கள்

"சோதி சாஸ்திரத்தின்" சோதிட விதி முறைகளைக் கொண்டே இந்நாட்டு மக்கள் தமது வாழ்வியல் ஒழுக்கங்கள் அனைத்தையும் கடைப்பிடிக்கின்றனர். "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதற்கிணங்க ஒவ்வொருவரது தொழில் முறைகளிலும் தோன்றும் பல்வேறு பிரச்சனைகளையும் சோதிடங்களைக் கணிப்பவர்கள் கூறும் சாஸ்திர ஒழுக்க விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் வழியாகவும் தடைகளைத் தாண்டி வாழ்க்கையில் வெற்றி பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்துள்ளனர். இவற்றுக்கு எடுத்துக்காட்டாக பல்வகை காலப் பகுப்புக்களிலும் "விவாகப் பொருத்தங்களையும்", புதுமனை புகுதற்குரிய பலகாரியங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு "சாஸ்திரத்திலும், "பஞ்சாங்கத்திலும்" கணிக்கப்பட்டவற்றை கணித்து எழுதப்பட்டு வரும் வழக்கை சாதாரண வைபவங்களிலிலும் காணலாம்.

"இந்துசோதி சாஸ்திரத்தை ஒரு நூலாக எடுத்துநோக்குமிடத்து அது கணித நூல் அல்லது செய்காரிய நூலாகும். எனினும் புராணங்களிற் கட்டுண்டு இருப்பதோடு எல்லாப் பொய்களையும் கொண்டிருக்கின்றது. இந்து சோதி சாஸ்திரம் ஓர் கணித

நூலாகவே இருந்தாலும் "ஐரோப்பிய சாஸ்திரத்திற்கு பிராமணரும் வேறே! இதன் ஆதாரப் பிரமாணமும் வேறாகும். ஏனெனில் உணரக்கூடிய வகையில் இந்து சாஸ்திரத்திற்கும் ஐரோப்பிய சாஸ்திரத்திற்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் சில வருமாறு.

- இந்து சாஸ்திரமானது "சுக்கிரனைப் போல்" சூரியனையும் ஒரு கிரகமென்று சொல்வதன்றிப் பூமியானது மண்டலத்துக்கெல்லாம் மையமென்றும் வெளிப்படையாய் அல்லது குறிப் பாய்ச் சாதிக்கின்றது. இது "கோபர்ணிக சாஸ்திரத்திற்கு சித்தாந்தப்பட்ட காரியங்களுக்கு விநோதமாய் இருக்கின்றது.
- கோபர்ணிக சாஸ்திரத்திற்கு மாறாக இது சோதி சாஸ்திரம் கூறும் கிரகங்களின் எண்ணிக்கை பிறழ்வாகக் காணப்படுகின்றது. குறிப்பாக "வெஸ்தே, சூனே, சீரீஸ், பல்வஸ் என்னும் அஸ்தடுக்குகளும், எர்சல் என்னும் கிரகமும் வியாழன், சனி, ஏர்சல் என்பவைகளுக்குள்ள, உபகிரகங்களும் இந்து சோதி சாஸ்திரத்தால் இனங்காணப்படவில்லை. அதுமட்டுமல்லாது "சந்திரன் முதற்கிரகணங்களில் ஒன்றாகவும்" இராகு கேது குளிக்கன் முதலிய மனோ பாவங்களும் கிரகங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளமை.
- ஐரோப்பிய சாஸ்திரத்தில் வானசோதிகளின் மத்திம கதியும் மூலத்துருவமும் இணைக்கப் பெற்று எழுதப்பட்டுள்ளன.
- ஐரோப்பிய சாஸ்திர முறையால் சித்திகள் அனைத்தும் மிக நுட்பமாக இருப்பதோடு, பல எண்ணிக்கையான சாஸ்திர விதிமுறைகளையும் கொண்டுள்ளன. ஆனால் இது சாஸ்திர விதிமுறைகளால் வரும் சித்திகளையும் பார்க்க "பூமி சாஸ்திரம், மாலுமி சாஸ்திரம்" முதலிய பல சித்திகளை மக்களுக்கு அளிக்க வல்லன.
- ஐரோப்பிய சோதி சாஸ்திர வாக்கியங்களோடு இணைத்துப் பார்த்தால் இந்து சாஸ்திர வாக்கியம் பிரித்தலிலும் நுட்பத்திலும் குறைவுபட்டிருக்கின்றது.

வெள்ளைக்காரப் பாதிரிமாரினாற் பஞ்சாங்கங் கணிக்கப்பட்டதெனின் தமிழ் மக்கள் அதனை விரும்பமாட்டார்களென்று எண்ணிப்போதலும், உயர்குடியிற் பிறந்த சுதேச ஆசிரியர் ஒருவரின் பெயரில் அவற்றை வெளியிட்டனர். பஞ்சாங்கத்தின் முகப்பு ஆசிரியரின் பெயரையுஞ் சாதியையுந் தெளிவாகக் கூறியது. 1835ஆம் ஆண்டு பஞ்சாங்கத்தின் முகப்புபின்வருமாறு

"திரியாங்கம்"

உஷ அநாரும் ஆண்டு
"விவாகன சகாத்தம் எனச் செல்லாநின்ற
மன்மத வருடத்துக்கு வட்டுக்கோட்டையிற்
சாத்திரப்பள்ளிக்கூடத்திற் சேர்ந்த வண்ணார்
பண்ணை
வெள்ளாளன் மயில்வானனர் சோமசேகரம்
பிள்ளை கணித்தது"

இந்தப் பஞ்சாங்கங்கள் மூலமாக மிஷனரிமார் மேனாட்டு வானசாஸ்திர முறைகளைச் சம்பாஷனைகளினூடாக போதித்தனர் என்பது தெளிவாகிறது.

**தத்துவக் கட்டளையும் தத்துவக் கருத்துகளும் உடற்கூற்று மருத்துவச் சிந்தனைகளும்:**

19ஆம் நூற்றாண்டின் மருத்துவத் துறையின் முன்னோடியாக டாக்டர் சாமுவேல் கிறீனைக் குறிப்பிடுவர். இருப்பினும் கிறீனுக்கு முன்பாக ஈழத்து மருத்துவத்துறையின் முன்னோடியாக H.R ஹொய்சிங்டன் காணப் படுகின்றார். தத்துவக்கட்டளை என்ற நூலின் மொழிபெயர்ப்பின் மூலம் அதிற் குறிப்பிடப் பட்டிருக்கும் சுதேச உடற்கூற்று வைத்திய முறையினை சர்வதேசத்திற்கு அறிமுகப் படுத்திய பெருமை இவரையே சாரும்.

மனித உடலில் காணப்படும் பத்து இரத்த நாளக்குழாய்களின் தொகுதியினை "தெசநாடி" என அழைப்பர். இவை இடை, பின்கலை, சுளிமுனை, காந்தாரி, சுத்தி, சிங்வலை, அலம்புருடை, சங்கிளி, வைரவன், நாடிகள் முதலியன உள்ளடங்கும். இவை அனைத்தும் எழுபத்திரண்டு பிரிவுகளாக உள்ளன. மனித உடலின் ஒவ்வொரு பாகத்திலும் இவை சூழ்ந்திருக்கின்றன. "இடைநாடி" என்பது இடுப்பிலிருந்து இடது பக்கமாக எழுகின்றது. அதிலிருந்து ஒரு பகுதி மேலாகவும் மறுபகுதி கீழாகவும் செல்கிறது. "பின்கலை" நாடி என்பது வலதுபக்க இடையில் இருந்து எழுகிறது. அது உப பிரிவுகளாகப்பிரிந்து மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் செல்கிறது. குறிப்பாக இடது கால் வலது கால் விரல்கள் வரை செல்கின்றது எனக் குறிப்பிடுகின்றார். சுளிமுனை நாடி பற்றிக் குறிப்பிடுகையில் இது பிறப்பு உறுப்புக்களிலிருந்து எழுந்து பல தடவைகள் சுழன்று செல்வதாகவும் இது தெய்வத்தின் ஆக்க சக்தியைக்குறிப் பிடுவதாகவும் கூறுன்றார். இது மிஸ்ரிக் ஓம் (Mystic Om) என்பதிலிருந்து தோன்றுவதாகவும் எனவே அதன் முக்கியமான பகுதி நீளம் எனப்படுகிறது. இதனால் அது நேரடியாக சிரசுக்குள் செல்கிறது. இதன் மூலம் மேலோங்கிய மனித உணர்ச்சிகள் தோற்றுவிக்கப்படுகின்றது. எனவே தெச நாடிகள் குழாய்கள் மூலம் மனித உடல் அவயங்களின் செயன்முறைச் சுழற்சி முறையினை வாயுக்களின் அடிப்படையில் அவை வேறுபடும் தன்மைகள் பற்றி விஞ்ஞான ரீதியான மருத்துவக் குறிப்புக்களை H.R.ஹொய்சிங்டன் தத்துவக் கட்டளை மொழிபெயர்ப்பு நூலில் விளக்கியுள்ளார்.

இந்நூலில் H.R. ஹொய்சிங்டன் விஸ்ணு ஆசனம் பற்றிக் குறிப்பிடுகையில் இதன் இரு நாடிகளும் இடையின் இருபக்கத்திலிருந்து ஆரம்பமாகி ஒன்றுக்கொன்று எதிராகச் சென்று பின்னர். தொப்புள் பகுதியினை அடைவதாகவும் அங்கு பிறைவட்ட வடிவமான அல்லது ஒரு மூடிய பகுதியாக அமைகின்றது. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இருதயத்தின் பகுதிகளைச் சென்றடைகின்றது. இருப்பினும் இவற்றின் இருப்பிடம் வயிற்றுப் பகுதியே ஆகும். இதனையே H.R ஹொய்சிங்டன் ருத்திரன் அல்லது சிவனின் சிம்மாசன அமைப்புடன் தொடர்புடையதாக விளங்குகிறது என்கிறார். பின்னர் கண்ணிமைகளிற்கு இடையே சென்றடைந்து ஒளியின் சிம்மாசனமாக அதாவது ஒளியைத் தரும் சதாசிவத்தின் சிம்மாசனமாக விளங்குகின்றது. விஷ்ணு வாகனமே மனித கட்புல பார்வையின் ஆளுமையினைத் தீர்மானிப்பதாகவும் இதன் இரு நாடிகளும் கண்களின் உயிர்நாடிகள் எனவும் இவற்றைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் H.R. ஹொய்சிங்டன் வலியுறுத்தியுள்ளார். மேலும் இந்தக் குறிப்புக்கள் இந்து மதத்தின் எல்லையில்லா மெய்ஞானத்திற்கு மட்டுமன்றி, அனைத்து

மக்களின் வாழ்விற்கும் பொருத்தமான அம்சமாக விளங்குகிறது.

H.R.ஹொய்சிங்டன் தத்துவக் கட்டளையில் குறிப்பிடப்பட்டிருக்கும் மனித உடற்கூற்று நாடிகளின் பிரதான நாடி வகைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பிரதான தொழிற்பாடுகளை விளக்கியுள்ளார்.

**1. காந்தாரிநாடி**

இருதயத்தில் இருந்து எழுந்து இந்நாடி கண்களில் முடிவடைகின்றது.

**2. ஆதிநாடி**

இருதயத்திலிருந்து எழுந்து பல பாகங்களிற்கும் சென்று இறுதியாக எலும்புப்பகுதிகளில் முடிவடைகின்றது.

**3. சிங்கன் குகை நாடி**

இருதயத்திலிருந்து எழுந்து நாக்கில் முடிவடைகின்றது. உச்சரிப்பு, தொனி முதலியவற்றைத் தீர்மானிப்பதாக அமைந்துள்ளது.

**4. ஆலம்புருதைநாடி**

இருதயத்திலிருந்து எழுந்து காதுகளில் முடிவடைகின்றது. செவிப்புல கேள் திறனை தீர்மானிப்பதாக இந்நாடி அமைந்துள்ளது.

**5. புருட நாடி**

இருதயத்திலிருந்து புறப்பட்டு பல கிளைகளாகப் பிரிந்து சென்று இறுதியில் கரங்களிலும் தசைநார்ப்பகுதிகளிலும் முடிவடைகின்றது.

மேற்கூறப்பட்ட பிரதான நாடி வகைகள் சுவாசத்துடன் கூடிய இருதயத்தின் செயற்பாட்டினால் கட்புல செவிப்புல வடிவங்களிற்கு வலுவூட்டுவதுடன் அதிக விசை கொண்டு செய்யப்படும் வேலைகளிற்கும் உந்துதல் அளிக்கின்றன. இவற்றோடு H.R.ஹொய்சிங்டன் மேலும் பத்து வகையான நாடிகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் வேறு ஆதாரங்களையும் கொண்டு நிறுவியுள்ளார்.

**1. பிராணன்**

இவ்வாயு உயிர் இருக்கும் வரை தொழிற்பட்டுக் கொண்டே இருக்கும்.

**2. உதனன்**

ஆதியிலிருந்து புறப்பட்டு கழுத்து வரை செல்கின்றது. அத்துடன் பிராண வாயுவை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளது. இவ்வாயு விக்கல், வலி, சுவாசக் குழாயின் வீக்கம் என்பவற்றுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

**3. வியனன்**

காந்தாரிக்கூடாகச் சென்று வாய்ப்பகுதியின் ஊடாக பேச்சு ஓசையினைத் தூண்டுவதற்கு காரணம் ஆகின்றது.

**4. சமனன்**

இது சங்கினிக்கூடாகச் சென்று இருதயத்தின் உட்பாகங்களோடு இணைந்து செயற்படுகின்றது. இதனால் மனித சரீரத்தின் வெட்ப தட்ப நிலையினை சமன் செய்து கொள்கிறது.

**5. நாகன்**

இந்நாடியானது அலன்புருதை நாடியுடன் இணைந்து மூளைக்குச் சென்று தும்மலுக்குக் காரணமாகிறது.

**6. கூர்மம்**

புருடனுடன் இணைந்து சென்று கரங்களிற்கும் உதடுகளிற்கும் சென்று கொட்டாவி விடுதலுக்கும் காரணமாகிறது.

**7. கிருதரன்**

இது சிங்குலையுடன் இணைந்து சென்று கண்ணிமைகளைச்சென்றடைந்து கண் சிமிட்டலுக்குக்காரணமாகின்றது.

**8. தேவதத்தம்**

இது சங்கினியோடு இணைந்து சென்று முகத்தில் பரவி புன்சிரிப்புக்குக் காரணமாக அமைகின்றது.

**9. தனஞ்சயன்**

இது உடலின் மேற்பகுதியில் அமைந் திருக்கும் தோற்பட்டையுடன் இணைந்து காணப்படுகின்றது. மரணத்தின் போது ஏனைய வாயுக்கள் செயலிழந்து சென்ற பின்னர் மேலெழுந்து செல்லும் இயல்பு டையது.

இந்துக்களின் எல்லையில்லா மெய் யியல் தத்துவங்களைக் கூறும் தத்துவக் கட்டளையினை மதக்காழ்ப்பின்றி மிகவும் நுண்ணிய நிலையில் தனது பரந்துபட்ட பகுத்தறிவு ஆற்றலின் மூலம் மொழி பெயர்ப்புக்கு உட்படுத்தி மூலத்தின் பொருள் சிறிதும் குன்றாது அதனை மொழி பெயர்த் துள்ளார். தத்துவத்தை மெய்யியலின் வழி விஞ்ஞானத்துடன் ஒப்பீடு செய்து 19ஆம் நூற்றாண்டில் மருத்துவக் குறிப்புக்களை ஈழத்தமிழர் பாரம்பரியத்திற்கு மட்டுமன்றி சர்வதேசத்திற்கும் வெளியிட்ட பெருமை H.R. ஹொய்சிங்டனையே சாரும்.

**உசாத்துணை நூல்கள்**


1. Ramachandran T.N, (1856) "Tattuva Kattalai English Translation of treatise on 36 essential nature"
2. ஹொய்சிய்டன் H.R, (1856) தத்துவக் கட்டளை மொழிபெயர்ப்பு


**அதிகமாகப் பேசினால், அமைதியை இழப்பாய்..**
**ஆணவமாகப் பேசினால், அன்பை இழப்பாய்..**
**வேகமாகப் பேசினால், அர்த்தத்தை இழப்பாய்..**
**கோபமாகப் பேசினால், குணத்தை இழப்பாய்..**
**வெட்டியாகப் பேசினால், வேலையை இழப்பாய்..**
**வெகுநேரம் பேசினால், பெயரை இழப்பாய்..**
**பெருமையாகப் பேசினால், ஆண்டவனின் அன்பை இழப்பாய்..**

**சுவாமி விவேகானந்தர்**

# வலி.மேற்கு வரகவி அமரர் பொன்னாலை பே.க.கிருஸ்ணபிள்ளை

**திருமதி ச. சந்திரராசா**
ஓய்வுநிலை ஆசிரியர்.
ஆசிரிய ஆலோசகர்.

**சை**வமும் தமிழும் கலையும் கலாசாரமும் தழைத்தோங்கிய மாவட்டம் யாழ்ப்பாணம். யாழ். மாவட்டத்திலே பல வளமும் நிறைந்த பிரதேசம் வலிகாமம் மேற்கு. வலி.மேற்கின் பிரதேசசபைக்குட்பட்ட கடல் வளமும், கமவளமும்,கலை வளமும்,கற்பகதருவாம் பனைவளமும் கொண்ட சிற்றூராகத் திகழ்ந்தவை பொன்னாலை, நெல்லியான் கிராமங்கள். இற்றைக்கு நூற்றுப்பதினாறு ஆண்டுகளுக்கு முன் சிற்றூரான நெல்லியான் கிராமத்தில் பேரம்பலம் கணபதியாருக்கும் கற்பகம் அம்மையாருக்கும் 1898.01.10 இல் முதல் மகனாக பிறந்தவரே பே.க.கிருஸ்ணபிள்ளை.

பண்டு தொட்டு சமயப்பற்றும் மொழிப்பற்றும் தம் வாழ்வியலோடு ஒன்றித்தவர்களாக விளங்கியவர்கள் நம் தமிழ் மக்கள். அதனால் அக்காலத்தில் தம் பிள்ளைச் செல்வங்களுக்குப் பெயரிடுவதானால் தாம் வணங்கும் கடவுளரின் பெயரை அல்லது தம் சந்ததிப் பெரியோரின் பெயர்களைச் சூட்டுவார்கள். அந்தவகையில் கணபதியாரும் தம் முதல் மகனுக்கு தம் குல தெய்வமான பொன்னாலைப்பதி உறையும் இறைவன் கண்ணபரமாத்மாவின் நாமமான கிருஸ்ணன் என்ற நாமத்தைச் சூட்டினார்கள். அந்நாளில் பிள்ளை என்பதைச் செல்லப்பெயராகச் சேர்த்துக் கொள்வது வழக்கம். அதனால் கிருஸ்ணபிள்ளை என்றும் அழைக்கப்பட்டார்.

இவரது தந்தையார் கணபதியார் கலையில் ஈடுபாடு கொண்டவர். நாடகத்துறையில் ஆண்டி வேடமிட்டு நடித்து மக்களின் பாராட்டைப் பெற்றதால் 'ஆண்டிக்கணபதியார்' என்று அழைக்கப்பட்டார். இவரும் தந்தையைப் போல் நாடகங்களில் நடித்து வந்ததால்

ஆண்டிக்கிருஸ்ணர். பபூன்கிருஸ்ணர் என்றும் நாடகங்களை ஆக்கி நாடக சபாக்கள் மூலம் நடிப்பித்தும் வந்ததால் 'அண்ணாவியார்' என்ற பட்டப் பெயரையும் பெற்றிருந்தார். சிறுவயதிலிருந்தே இறை பக்தியில் ஈடுபாடு மிக்கவராய் தமிழ் மீது அதீத பற்றுக் கொண்டவராய் விளங்கினார். இறையருளினாற் போலும் இயற்கையாகவே கவிபாடும் திறன் பெற்றிருந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை பொன்னாலை அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும் பின் ஆங்கிலக்கல்வியைக் கற்பதற்காக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் சேர்ந்து கற்றார். பாடசாலைக் கல்வியில் சிறந்து விளங்கினாலும் அவரின் நாட்டமெல்லாம் கலையிலே தான் இருந்தது. இதனால் தந்தையார் பாடசாலைக் கற்றலுடன் தமிழையும் இசை நாடகக் கலையையும் நன்கு கற்றுத் தெளிவதற்காக மூளாய் சுதேச வைத்தியரும் அண்ணாவியாருமான ஆ.சுப்பிரமணியம் என்பவரிடம் சேர்ப்பித்தார். அவரிடம் பயபக்தியோடு கற்றதாலும் குருபக்தி நிறைந்தாலும் தான் ஆக்கிய நூல்களிலெல்லாம் குருவின் பெயரை முதலிட்டு அவரின் சிஷ்யன் என்று குறிப்பிடத்தவறுவதில்லை. கற்கும் காலத்தில் கலைநிகழ்வுகளில் ஈடுபடுவதிலும் விகடமாக பேசுவதிலும் சந்தர்ப்பத்திற்கேற்ப பாடல்களை ஆக்கிப்பாடுவதிலும் விளையாட்டிலும் வல்லவராக விளங்கினார். இதனால் இவரைச் சுற்றி இளைஞர் கூட்டம் இருக்கும். பெரியவர்களும் இவரின் சிலேடை வாக்கியங்களையும் கருத்தாழம் மிக்க நகைச்சுவைப் பேச்சுக்களையும் பாடல்களையும் கேட்டுப்பாராட்டுவர். கலை ஆர்வத்தினால் உயர்கல்வியைத் தொடருவதில் நாட்டம் கொள்ளவில்லை.

அக்காலத்தில் அவரின் உறவினர் பலர் மலேசியாவில் நல்ல அரச பதவிகளில் இருந்தனர். இவரின் ஈடுபாடு படிப்பில் நாட்டமின்றி நாடகங்களிலும் கலைச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டதால் இவரின் எதிர்காலம் என்னவாகுமோ என்ற எண்ணத்தால் இவரின் உறவினரான சிறிய தந்தையார் மலேசியாவுக்கு அழைத்துச்சென்று புகையிரத நிலைய அதிபர் பதவியில் சேர்த்துவிட்டார். உத்தியோகத்திலிருந்த காலத்திலும் அங்கும் தனது பேச்சாலும் பாடல்களாலும் நடிப்பாலும் எல்லோரையும் கவர்ந்தார். ஆங்கிலம், சீனம், மலாய் மொழிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். அதனால் அந்நாட்ட வரிடையேயும் புகழ் பெற்றிருந்தார்.

ஒரு நாள் அலுவலக நேரம் இரவு 10 மணி புகையிரதம் நிலையத்திற்கு வருவதற்கு இன்னும் 30 நிமிடங்கள் இருக்கின்றது. நிலையத்திற்கு அருகே ஒரு கலை நிகழ்வு நடந்து கொண்டிருந்தது. இவருக்கு அதனைப்போய் பார்க்கும் ஆவல் எழுந்தது. புகையிரதம் வரும் போது நிலைய அதிபர் 'வளையம்' கொடுத்து புகையிரதம் நிலையத்திற்கு வந்து சென்றதை உறுதிப்படுத்த வேண்டும். நாடகமா?... அலுவலகப்பணியா?.... புகையிரதம் வர இன்னும் அரை மணிநேரமிருக்கிறது தானே; புகையிரத நிலைய இரவுக் காவலாளியை அழைத்து, "புகையிரதம் இன்னும் 30 நிமிடத்தில் வந்துவிடும், வளையத்தைக் கொடுத்துவிடு. நான் பக்கத்து விழாவிற்கு சென்றுவிட்டு உடனே வந்துவிடுகின்றேன். என்று கூற அவனும் ஒப்புக்கொள்ள இவர் நாடகம் பார்க்கச் சென்று விட்டார். காவலாளி நேரமிருக்கிறது தானே எனக் கண்ணயர்ந்துவிட்டார். புகையிரதம்

வந்தது. வளையம் கொடுபடவில்லை. அந்த நிலையத்தில் நிற்காமல் சென்றுவிட்டது. நிலையத்தில் அதிபர் கடமையில் இல்லாதது மேலிடத்திற்கு அறிவிக்கப்பட்டது. வேலை நீக்கம் செய்யப்பட்டார். முறையீடு செய்து மீண்டும் வேலையைப் பெறலாம் என உறவினர் கூறினார். ஆனால் "மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ" என்ற கம்பனின் இனத்தைச் சேர்ந்த கவிஞர் அவர். கலைஞனுக்குரிய வீராப்பு விடவில்லை. தன் நாட்டுக்குத் திரும்பினார். முழுமையாகத் தன்னை கலைச்செயற்பாட்டில் ஈடுபடுத்திக் கொண்டார்.

சமூக சீர்திருத்தம், சமயம், நாட்டுவளம், விளையாட்டு எனப்பல்துறை சார்ந்த பாடல்கள், கவிதைகள், நாடகங்கள், உரையாடல்கள் பலவற்றை ஆக்கி மக்களிடையே நற்கருத் துக்களைப் புகுத்தினார்.

தமிழ் வளர்த்த யாழ்ப்பாணத்தில் இன்று போல் அன்றும் இந்திய இசைக்கலைஞர்கள் நாடகக்கலைஞர்களை அழைத்து நிகழ்வு களை நடாத்திக் கௌரவிப்பது வழக்கம். எங்கெல்லாம் கலைநிகழ்வுகள் நடந்தாலும் அங்கெல்லாம் அண்ணாவியார் செல்வது வழக்கம்.

ஒருமுறை பிரபல இந்தியப் பாடகியும் நாடக நடிகருமான கே.பி.சுந்தராம்பாளின் குழுவினர் யாழ்ப்பாணத்தில் நாடகங்களை நடாத்த வந்திருந்த போது வலி மேற்கிலுள்ள அவருடைய ரசிகர்கள் அவரைப் பாராட்டிக் கௌரவிப்பதற்காக ஒரு கூட்டத்தினை நடாத்தினார்கள். அக்கூட்டத்திற்கு கிருஸ்ண பிள்ளையும் சென்றிருந்தார். அப்போது அவர் அன்றைய நிகழ்ச்சிகளை கருத்தாக அமைத்து ஒரு கவியை மேடையில் பாடினார். இப்பாடலைக் கேட்ட சுந்தராம்பாள் பெருவியப்பு அடைந்தார். இப்பாடலை ஏற்கனவே இவ்வாறு இயற்றி வைத்திருந்து பாடியிருக்க முடியாது. அப்போது அங்கே நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுப்பாடியதால் உடனடியாக அவர் அந்த பாடலை இயற்றி பாடியிருக்க வேண்டும் என்பது தெளிவாயிற்று.

இந்தியாவிலே சுப்பிரமணிய பாரதியார் நினைத்தவுடன் கவிபாடும் திறன் பெற்றிருந்தார். அவர் 'வரகவி' என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். இங்கு இவரும் அவரைப் போலவே நினைத் தவுடன் இயற்றி மிக அழகாக இப்பாடலைப் பாடியிருக்கிறார். எனவே இவருக்கு "வரகவி" என்ற பட்டத்தை அளித்து கௌரவிக்கின்றேன் என்று அழைத்தாராம். அன்று முதல் "வரகவி" என்ற பட்டமும் இவரைச் சேர்ந்து கொண்டது. வரகவியின் பாடல்கள், கவிதைகள் யாவிலும் ஓசை நயமும் கருத்துச் செறிவும் நிறைந்திருக்கும். எமது ஊரான பொன்னாலை முன்பு புன்னாலை என்று எல்லோராலும் அழைக்கப்பட்டது. வரகவி அவர்கள் தனது நூல்களில் 'பொன்னாலை வரகவி' என்று குறிப்பிட்டு வந்ததாலும் நாடகங்களில் தோன்றி நடிக்கும்போது 'பொன்னாலைக் கிருஸ்ணன்' என்று தன்னை அறிமுகப்படுத்தி வந்தாலும் எமது ஊரின் காயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் கிருஸ்ணன் என்பதையும் கருத்தில் வைத்து "முன்னாலே புன்னாலே பின்னாலே உன்னாலே பொன்னாலே" என்று கூறி பொன்னாலைப் பெயரை நிலை கொள்ளச் செய்தார்.

இவர் ஈழத்திலும் மலேசியா சிங்கப் பூரிலும் மாறி மாறிக் கலைப் பயணத்தில் ஈடுபட்டு இறுதியாக 1955 ஆம் ஆண்டு மலேசியாவிலிருந்து தன் சொந்த ஊருக்கு

வந்து சேர்ந்தார். இங்கு வந்து சேர்ந்த பின் ஊரிலுள்ள கலையார்வம் மிக்க பிள்ளைகளைச் சேர்த்து யோகாசனம், நடனம், நாடகம், பனையின் பெருமை பற்றிய உரையாடல் போன்றவற்றைப் பழக்கி மேடை ஏற்றுவித்தார்.

இவர் சுதேச உடை, உணவு, மருத்துவம் ஆகியவற்றுக்கு மதிப்பளித்தார். பனை ஓலையால் செய்த தொப்பியை அணிவார். தனது புத்தகங்களை பனை ஓலைப் பெட்டியிலான தொங்கு பையிலே வைத்திருப்பார். இவர் இயற்றி வெளியிட்ட நூல்கள் பல. ஆயினும் காலத்திற்குக் காலம் தமிழ் இனத்திற்கு ஏற்பட்ட இன்னல் போல மழை வெள்ளத்தின் போதும் இடப்பெயர்வின் போதும் நூல்கள் பலவற்றை இழக்க வேண்டி ஏற்பட்டது.

பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலைக் கல்வி வளர்ச்சிக்கு நிதி சேகரிப்பதற்காகவும் மாணவர்களை மேடை ஏற்றுவதற்காகவும் ஆட்டக்கலை அரங்கேற்று விழா என்று கலை நிகழ்ச்சிகளை நடாத்தினர். பாடசாலை வளர்ச்சிக்கான நிதியை அன்பர்கள் தங்கள் சக்திக்கேற்ப அன்போடு அளிக்கலாம் என்பதை முன்பே விழாக்குழு மூலம் அறிவித்திருந்தார். அதனால் நிதி சேகரிப்புக்கு நுழைவுச்சீட்டு அடிக்கப்படவில்லை. விழா அழைப்பிதழே நுழைவுச்சீட்டு. விழா அழைப்பிதழின் நிகழ்ச்சி நிரலில் இறுதியாக "இப்பத்திரம் பத்திரம், இதுவே உட்பிரவேசிப்பதற்கு உத்தரம்" என்ற வாக்கியம் பதியப்பட்டிருந்தது. விழாவிற்கு அதிதிகளாக வந்தவர்கள் அக்கால பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அ.அமிர்தலிங்கம், கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சுப்பையா என்பவர்கள். இருவரும் அழைப்பிதழை முன்னரே பார்வையிட்டதால் வரகவியின் சமயோசித புத்தியையும் கருத்தாளம் மிக்க சொல்லாடலையும் பாராட்டிப் பேசினர்.

1956 ஆம் ஆண்டு வடமாகாண அரச அதிபராகக் கடமையாற்றிய திரு.ஆ.ஸ்ரீகாந்தா அவர்களால் பனங் கருப்ப நீரிலிருந்து பனஞ் சீனி தயாரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் பனை மகோற்சவத்தை முன்னிட்டு அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க "பனைப்பாட்டு அல்லது தாலபுரத்தார் கீதம்" என்ற நூலை வெளியிட்டார். யாழ்.ஆனந்தா அச்சகத்தில் வெளியிட்ட நூல்களை எடுத்துவரும் போது மயக்கமுற்று நோய்வாய்ப்பட்டார். பத்து நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டும் பலனின்றி 10.10.1956 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அன்னார் இயற்றிய நூல்கள் பலவற்றில் தாலபுரத்தார் கீதம், நவரச கீதங்கள், தமிழர் பாட்டு, இயேசுநாதர் கானம், பனைப் பாட்டு அல்லது அற்புத கீதம் என்பனவும் தனிப்பாடல்கள், கோணேசர் தியானம், கதிர்காமக்கந்தன் கானம், பறாளாய் முருகன் பாடல் முதலிய பாடல் தொகுப்புக் களும் நாடகங்களாக "எது நல்ல வழி", "இராசாம்மாள்", "தீனதயாளர் வீடு" "கிருஸ்ண லீலா" என்பனவற்றில் கிருஸ்ண லீலா நாடகம் பாதுகாக்கப்பட்டது.

வீட்டு நிலைமையாலும் நாட்டு நிலைமையாலும் அவருடைய நூல்களை ஒன்று திரட்டி புத்தகமாக வெளியிடக்கூடிய காலம் கைகூடவில்லை. 1998 ஆம் ஆண்டு அன்னாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவும் கவிதைகளை வெளியிடவும் அறிஞர் பெரியோர் பலர் முன்வந்தனர். வரகவியின் பெறாமகன் சங்கீதபூஷ

ணம் சு.கணபதிப்பிள்ளை அவர்கள் கிடைக்கப்பெற்ற அன்னாரின் பாடல்களை ஒன்றுதிரட்டி மலர் உருவாக வேண்டிய ஆக்கங்களைச் செய்து கொடுத்தார். வலி. மேற்கு கலாசாரப்பேரவையின் ஆதரவுடன் 10.01.1998 அன்னாரின் நூற்றாண்டு விழாவும் கவிதைகள் நூல் வெளியீடும் சிறப்பாக நடைபெற்றன. அப்போது பிரதேச செயலராக விளங்கியவர் அமரர் கா.சந்திரராசா அவர்கள். கவிதைகள் நூலுக்கு முன்னுரை, அணிந்துரை வழங்கிய அறிஞர்கள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அமரர்கள் அருட்கவி வினாசித்தம்பி ஐயா, பிரம்மஸ்ரீ வீரமணி ஐயா, கலாநிதி க.கனகராசா ஆகியோர். அன்னாரின் கவித்துவத்தைப் போற்றிப்புகழ்ந்துரைத்துள்ளனர்.

எம்மூரவரான மறுமலர்ச்சி எழுத்தாளர் அமரர் தி.ச.வரதராசன், நாராயணதாசன், கு.பொ.சிவகுருநாதன் அயலூரவர்களான அமரர் மு.சிவானந்தன் (சங்கானை), கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை, ஓய்வுநிலை ஆசிரியர் செல்வி இரத்தினம் சுப்பிரமணியம் (பண்ணாகம்) ஆகியோர் வரகவியுடன் நேரடியாக தாம் கண்டு கேட்டு பேசி அனுபவித்தவற்றை மிக அழகாக ஆழமாகக் குறிப்பிட்டுள்ளனர். 'கற்பகதருவின் காவலன்', 'சிவ தரும வள்ளல்' கலாநிதி கனகராசா தாம் வாழ்ந்த காலத்தில் வரகவியின் பனையின் பயன்பற்றிய பாடலை பனை மகோற்சவத்தின் போது இலவச வெளியீடாக வெளியிட்டு மக்களுக்கு விநியோகித்து வரகவியைப்போற்றியுள்ளார். நாமும் அக் கவிஞனைப்போற்றி அவரின் சீர்திருத்தக் கருத்துக்களைப் பின்பற்றி பிரதேசத்தை வளமுறச்செய்வோமாக. இவரின் கவிதைகள், பாடல்கள் பல்கலைக்கழக மட்டத்திலும் ஆய்வுக் கட்டுரையாக வெளிவந்துள்ளன. அவை பற்றிக்குறிப்பிடின் கட்டுரை விரியும்.

பனை வளம் மிக்க எமது பிரதேசமாகிய வலி.மேற்கின் பிரதேச செயலக மலர் 'பணுவில் 2' என்ற பெயருடன் இன்று மலர்வது மகிழ்வளிக்கிறது. வலி.மேற்கில் வாழ்ந்து மறைந்த வரகவி பே.க.கிருஸ்ணபிள்ளை அவர்கள் ஆக்கிய எண்ணிறைந்த பாடல்களில் பனையின் பயன்கூறும் பனைப்பாட்டு அல்லது தாலபுரத்தார் கீதம் மிகச் சிறப்பானது. மலருக்காக ஆக்கங்கள் கோருவதை பத்திரிகையில் வாசித்ததும் இன்றைய சமூகத்தினர்க்கும் அக்கவிஞனைப் பற்றிய சில குறிப்புக்களைத் தரவேண்டும் எனும் ஆவலில் இக்கட்டுரையை பதிவு செய்கின்றேன்.

**நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய். உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.**

**சுவாமி விவேகானந்தர்**

# 2016 ஆம் ஆண்டின் கலைவாரிதி விருது பெறும் சான்றோர்கள்



திரு.வே.சிவசுப்பிரமணியம்
(சமய இலக்கியத்துறை)
சுழிபுரம் கிழக்கு.



திரு.செ.ஆனந்தகிருஷ்ணகுமார்
(பண்ணிசை, சமயத்துறை)
மூளாய் தெற்கு.



திரு.நா.கணேசலிங்கநாதன்
(சித்தமருத்துவத்துறை)
வட்டு.வடக்கு.



திரு.செ.ஜெயபாலகிருஷ்ணன்
(நாடகத்துறை)
சங்கானை கிழக்கு.



திரு.தி.சிவதட்சணாமூர்த்தி
(சமயத்துறை)
சங்கானை மத்தி.



திரு.மா.நித்தியானந்தன்
(இசைநாடகத்துறை)
தொல்புரம் மத்தி.

# உற்பத்தித்திறனின் முக்கியத்துவம்

**வி.சசிதா, டா.புஜாங்கன்**
உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம், சங்கானை.

உற்பத்தித்திறன் அறிவின் மூலம் அரச அலுவலக நடவடிக்கைகளிலும் மக்கள் நலனிலும் கணிசமான மாற்றங்களைச் செய்ய முடியும். வளர்ச்சியடைந்த நாடுகளில் உற்பத்தித்துறையிலும் சேவைத் துறையிலும் பெருமளவு மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு இவ் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் பெருமளவு துணைபுரிகின்றன. இதனைப் பின்பற்றி வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிலும் உற்பத்தித் திறன் அறிவை மேம்படுத்தி மக்கள் சேவையைத் துரிதப்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலில் உற்பத்தித்திறன் என்ற எண்ணக்கருவினை விளங்கிக் கொள்வோம்.

உற்பத்தித்திறன் ஓர் கண்டுபிடிப்பல்ல அது ஓர் அனுபவம் சார்ந்த நெறி முறையாகும். ஒவ்வொரு வேலைகளும் தரமாகச் செய்யப்படுவதுடன், அவை வினைத்திறனாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். ஒரு வேலையை விரைவாக செய்வது மட்டுமல்ல அவை சரியாகச் செய்தலை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும்.

விளைத்திறன் + வினைத்திறன் = உற்பத்தித்திறன்
(சரியானதைச் செய்தல்) (சரியாகச் செய்தல்)

Effectiveness + Efficiency - Productivity

குறிப்பிட்ட வளங்களைப் பயன்படுத்தி எத்தகைய வெளியீடு பெறப் பட்டுள்ளது என்பதைக் காண்பதே உற்பத்தித்திறன் ஆகும்.

$$\text{உற்பத்தித்திறன்} = \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$$

உற்பத்தித்திறன் எனும்போது பொருட் களை உற்பத்தி செய்யும் திறன் என்பது மட்டுமல்ல செய்யும் ஒவ்வொரு தொழி லையும், சேவையையும் சிறப்பாக ஆற்று வதைக் குறிப்பதாகும். உற்பத்தி என்பது வேறு, உற்பத்தித்திறன் என்பது வேறு. உற்பத்தி நடைபெறும் எல்லா இடங்களிலும் உற்பத்தித்திறன் இருப்பதாகக் கொள்ள முடியாது.

இன்றைய உலகில் உற்பத்தித்திறன் என்பது பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கவும் நாணயப் பெறுமதியை ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்கும், சிறந்த வாழ்க்கைத்தரத்தினைப் பேணுவதற்கும் அவசியமான ஒரு கருப்பொருளாகும்.

உற்பத்தித்திறன் கொள்கை வகுப்போர், வியாபாரிகள், தொழிலாளர்கள், உத்தியோக த்தர்கள், மனைப்பெண்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் போன்ற சகல துறையினருக்கும் உற்பத்தித்திறன் எண்ணக்கரு அவசியம் தேவையாகும்.

உற்பத்தித்திறன் பின்வரும் சிறப்பு இயல்புகளை உருவாக்கும். இது ஒரு எண்ணப் பாங்குடன் அமைந்தது. நடை முறை ஒழுங்குடன் சம்பந்தப்பட்டது. தெளிவாகக் காணக்கூடியது. தரமேம்பாடு, அளவு ஆகியவற்றை விருத்தி செய்வது. மக்களின் வேலைக்கு மேலதிக பெறுமதி சேர்ப்பது, குழு ஒன்றை உருவாக்குதல். விளைத்திறனுடனும் சம்பந்தமுடையது. நுகர்வோனின் விருப்பத்தை நோக்கி யமைந்தது. வேலையினால் பெருமை கொள்ளக்கூடியது. சிறந்த வாழ்க்கைத் தரத்தைப்பேணுவதாக அமைந்தது. இவ்வாறு பல சிறப்பியல்புகளை உற்பத்தித்திறன் உருவாக்குவதாக இருப்பினும் பலரினதும் மனதில் ஆரம்பத்தில் உற்பத்தித்திறன் தொடர்பாக பின்வரும் விடயங்கள் பதிந்து ள்ளன என ஆய்வு அனுபவங்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஊழியர்களைக்குறைப் பதற்கான மற்றொரு முறை, சுரண்டலுக்கான மற்றொரு முறை, அதிகம் வேலை செய்தல், கஷ்டமான நிலைமை, ஓய்வுநேரத்தை குறைத்தல், கடும் ஒழுக்கம் ஆகிய கருத்து க்கள் பதிந்துள்ளன.

உற்பத்தித்திறனின் வளர்ச்சிக்காக ஒழுங்கு படுத்தப்பட வேண்டிய துறைகள் பற்றி நோக்கு வோம்.

1. சுற்றாடல் - Environment (ஒளி, ஒலி, காற்று)
2. வேலை ஒழுங்கமைப்பு - Set up, இலகு வான உபகரணங்களைப்பயன்படுத்தல்.
3. வேலை முறை - Work Methods, மாதிரி, கணினி
4. வேலை இடம் - அசைவு, சிக்கனம்
5. ஊழியர் இயைபூக்கம் - அர்ப்பணிப்பு மிக்க ஒத்துழைப்பு, தொடர்பாடல் தொடர் புகள்.
6. ஊழியப்படையின் தரம், திறமை, சாதகமான கருத்துக்கள், அறிவு ஆகிய துறைகளை ஒழுங்குபடுத்துவது சிறந்தது ஆகும்.

மேலும் விரயங்களைக் குறைத்தல், ஒரு பொருளுக்கு மேலதிக பெறுமதியை ஏற்படுத்தல், மனித வளங்களை ஒழுங் குபடுத்துவதன் மூலம் உற்பத்தித்திறனை, அதிகரித்தல், நேரத்தை உரியமுறையில் முகாமை செய்வதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

பொருட்கள், சேவைகள், தளபாடங்கள், இயந்திரங்களைக்கையாள்வதன் மூலம்

உற்பத்தித்திறனை அதிகரித்தல், தரத்தை மேம்படுத்துவதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரித்தல், நல்ல சுற்றாடலை உருவாக்குதல் (Maintain Good Environment) நல்ல வெளிச்சம், காற்றோட்டம், பாதுகாப்பு, நேரக்கட்டுப்பாடு, நல்ல ஒளியமைப்பு, தேவையற்ற சத்தங்களைக் குறைத்தல், அலுவலகத்தை ஒழுங்கு முறையாக அமைத்தல், தேவையற்ற கையாளுகையைக் குறைத்தல் (Reduce Handling), தேவையற்ற பிரயாணத்தைக் குறைத்தல், தேவையற்ற நடமாட்டம், மனித உழைப்பைக் குறைத்தல், ஒழுங்கமைப்புப்படம், வேலை ஒழுங்கு முறைகள் என்பவற்றை அமைத்தல், தரச் சுற்று அமைத்தல் (Quality Circle), தரச்சுற்று மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், உற்பத்தித்திறன் தொடர்பான ஐவகை எண்ணக்கருவினை (5S) நடைமுறைப் படுத்தல், கைசன் (Haizen), ஆலோசனைக் குழு முறை (Employee Suggestion Scheme), தொடர்பாடல் முறை என்பவற்றை மேம் படுத்தல் மூலம் ஓர் அலுவலகத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும்.

இலங்கையில் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் மூலம் நாட்டிலுள்ள பாடசாலைகள், திணைக்களங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் உற்பத்தித்திறன் செயற்பாடுகள் தொடர்பான வேலைத்திட்ட ங்கள் போட்டிகள் நடைமு றைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உற்பத்தித்திறன் என்றால் என்ன, உற்பத்தித்திறன் ஏன் அவசியம், உற்பத்தித் திறன் செயற்பாடு எத்துறை யினருக்கு அவசியம், உற்பத்தித்திறன் எச்சிறப்பியல் புகளை உருவாக்கும், அலுவலகங்களில் எவ்வாறு உற்பத்தித்திறனை அதிகரிக்கலாம், உற்பத்தித்திறனின் முக்கியத்துவம் என்பன பற்றி இங்கே நோக்கியிருந்தோம். எனவே உற்பத்தித் திறனாக செயற்படுவதன் மூலம் உரிய நன்மைகளைப் பெறமுடியும்.

உற்பத்தித்திறன் என்ற எண்ணக்கரு உறுதியான உழைப்பையும் தரமான வாழ்வையும் உறுதிப்படுத்துகின்றது. ஒவ்வொரு நபர்களதும் படிப்படியான முன்னே ற்றம் தனது வீட்டினதும் தான் கடமைபுரியும் நிறுவனத்தினதும் இறுதியாக நாட்டினதும் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவி புரியும். எனவே, உற்பத்தித்திறன் செயற்பாடுகள் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ய நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

**அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது.**
**அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது.**
**அதிகம் செயற்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.**

# தொல்புரமும் கலாலயமும் பாரம்பரியக் கலைகளும்

மு.சடாட்சரம், செ.உதயச்சந்திரன்
கலாலயம், தொல்புரம்.

"பல்புரத்து நல்வளமும் ஒவ்வாப் பல்வளம் சேர் தொல்புரம்" எனப் புலவோர்களால் புகழ்பாடும் வகையில் கலைத் தகைமைகளில் வல்லமை பெற்ற கலைஞர்கள் இங்கு பல்வேறு காலங்களில் அண்ணாவியர்களாக வாழ்ந்திருந்தனர்.

இவர்கள் வரிசையில் பட்டர் மகன் அழகர். அவர் மகன் பரிவுடையர். அவர் மகன் காங்கேயர். அவர் மகன் சட்டம்பி நாராயணர். அவர் மகன் வேலுப்பிள்ளை அவர் மகன் முருகேசு அவர் மகள் சின்னம்மா அவர் மகன் முருகையா அதிபர் இப்படியாக இவர்களின் காலத்தில் குறிப்பாக சட்டம்பி நாராயணர் காலத்தில் சிதம்பரக்கும்மி, கரகம், காவடி, வசந்தன் கம்பு அடித்தல், வடமோடி, தென்மோடி சிந்துநடை துள்ளல் உளக்குக் கூத்துக் கலைகள் பலவும் சீனடி சிலம்படி எனப் பலபல பாரம்பரியக் கலைகள் வளர்ந்தோங்கிக் காணப்பட்டனவாம்.

இச்சட்டம்பி நாராயணரது உற்ற நண்பரும், தந்தை S.J.V.செல்வ நாயகத்தின் தந்தையாருமான வேலுப்பிள்ளைச் சட்டம்பியாரும் கலைப்பெருங்குடிகளாக வர்ணிக்கப்பட்ட தொல்புரம் மண்ணின் இருமைந்தர்களாவர். இச்சட்டம்பியர்கள் காலத்தில் கீசகண வதை, இடும்பன் வதம், வெடியரசன் ஆட்டக்கூத்து, இராமகதை, தர்மபுத்திரர் கூத்து, சகுந்தலை விலாசம், கோவலன் கண்ணகி, சத்தியவான் சாவித்திரி, வள்ளி திருமணம், இன்னோரன்ன சரித்திரங்கள் தீப்பந்த வெளிச்சத்தில், வட்டவடிவ மண் அரங்கிலேயே அண்ணாவிகளால் அரங்கேற்றப்பட்டிருந்தன.

"பட்டரோடழகருயர் பரிவுடையர் காங்கேயர்"
பட்டங்கட்டி வளவில் வளர் சட்டம்பி நாராயணர்

பட்டாடைகள் சாற்றிப் பாமாலைகள் பாடிக்
கொட்டாரமதில் வைத்தார்
கொட்டடியம் பதித்தாயை"

என்பது முதுபெரும் பிரதேச பாடல். இவ்வகைத் தீப்பந்த கூத்துக் காலத்தின் பின்னர் சட்டம்பி நாராயணரது பூட்டனும், அன்னாரது அரிச்சுவடிகளைப் பின்பற்றிய வருமான திரு.முருகேசு செல்லையா அவர்கள். தென் இந்தியக் கலைஞர்கள் பலரையும் அழைத்துவந்து முகாமிட்டுப் பல நாடகங்களை வழங்கி வந்தார். ஒலி பெருக்கி சாதனத்தை முதன்முதலில் யாழ்ப் பாணத்திற்கு அறிமுகம் செய்து வைத்த பெருமை இவரையே சாரும். சீன்கள் ஒளி, ஒலிபெருக்கி, சாதனங்கள், ஒப்பனைக் கலை ஞர்கள், வாத்திய இசைக் கலைஞர்கள் எனப் பலர் இத்தொழிலையே முதன்மையாகக் கொண்டு சிறப்புற்றிருந்தனர்.

நாடக ரசனை மிக்க எம் முன்னோர்கள் நாடகங்களையே பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். பல பல விடயங்களை ஆவணப்படுத்த முடியாத போதிலும் நாடக பாத்திரப் பெயர்களைக் கொண்டே பலர் அழைக்கப்பட்டமையைக் கொண்டு என்ன நாடகங்கள் அரங்கப்படுத்தப்பட்டன என்பதை அறியமுடிகின்றது.

திருவாளர் முருகையா ஆசிரியர் அவர்கள் இளைஞராயிருந்த காலத்தில் நடிப்புத்துறையிலும் இசைவாத்தியங்களை இசைப்பதிலும் திரு.மு.செல்லையா அவர்க ளிடம் பயிற்சிகளைப் பெற்றிருந்தார். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும், சங்கீதத்தை முதன்மைப்பாடமாகக் கற்றுக் கொண்ட மையால் முத்தமிழிலும் வல்லமை பெற்றார்.

ஆரம்ப காலங்களில் வில்லிசை, மெல்லிசை, நாட்டிய நடனம், குறு நாடகங் கள் எனப் பல்வேறு கலைகளிலும் பலரை யும் வழிநடத்தி வந்தார். 1974 இல் தம்மிடம் பயின்ற கலை வல்லுநர்களை அழைத்து தமது கொப்பாட்டனார் சட்டம்பி நாராயணரது பாணியில் புராண இதிகாச நாடக முயற்சியில் மரபுகள் மாறாவண்ணம் உருவாக்கத் திட்டமிட்டார். இதில் தீவிரமாக செயற்பட்ட வேளை "கலாலயம்" என்னும் நற்பெயர் சூட்டி "கலாலயத்தில் களித்திடும் உந்தன் கழலடி தொழுவோம் எனும் இனிய கீதத்தையும் ஆக்கி செயற்பட ஆரம்பித்தார்.

முதலாவதாக "குந்தியின் செல்வன்" என்னும் இசை நாடகத்தையும் இதன் கதை, வசனம், பாடல், இசையமைப்புக்களையும் தாமே சுயமாக ஆக்கிய நடிகர்களிற்கான பயிற்சிகளையும் வழங்கி தாமே அண்ணா வியராகவும் ஆர்மோனிய வித்துவா னாகவும் இருந்து மேடையிலும் நெறிப் படுத்தி ரசிகப்பெருமக்களிடையே மிகுந்த பாராட் டினைப் பெற்றார். இதனால் மகிழ்ந்து 1975ல் "இரணியன் செல்வன்" 1976ல் "பக்தகுசேலர்" 1980ல் "தசரதன் செல்வன்" 1981இல் "ருக்மணி கல்யாணம்" என்னும் நாடகங்களை அரங்கேற்றினார் இவரிடமி ருந்த தமிழ் வளமும், இசை நயமும், இதர சிறப்புக்களும், அவரிடம் பயின்ற கலைஞர் களை கவர்ந்தமையால் அவர் விட்டுச்சென்ற பாதையில் மீண்டும் தடம்பதிக்க முயன்றனர்.

இதே காலகட்டத்தில் "சக்தி புரடக் சன்ஸ்" நாடக மன்றமும் உதயமாகி திரு.வ. அமிர்தலிங்கம் யோ.பத்மானந்தன் மு.சடா ட்சரம் போன்றோர் நிர்வாகிகளாக "வல்லவன் ராமு" "நெஸ்பிறே" 'நீதிக்குப் பின்பாசம்' நீதியா பாசமா எனப் பல சமூக நாடகங்களையும் அரங்கேற்றினர்.

கலாலயம் "தடாதகை கல்யாணம்" "கஜரோகம் கந்தப்பர்" "கண்ணகி" போன்ற

வில்லிசைகளையும் அரங்கேற்றியது குறிப் பிடத்தக்கது.


பொன்னாலையம்பதி நாடகப் பிரிய னான நாராயணப் பெருமானிற்கு நாடகங் களைச் சமர்ப்பணம் செய்வது பாரம்பரிய கடமையாக எண்ணிய இளையோர் 2011இல் மீண்டும் "குந்தியின் செல்வன்" நாடகத் தினை புதுமெருகோடு நவீன தந்திரக காட்சிகளையும் சேர்த்து அரங்கேற்றினர். இவ்வரிசையில் 2012 இல் "இரணியன் செல்வன்", 2013இல் "நரகாசுரன்", 2014இல் "தசரதன் செல்வன்", 2015இல் கம்சன், 2016இல் "லங்காதகணம்" போன்ற நாடகங்களைப் புதுமெருகுடன்கலைவாரித் திரு.செல்லையா உதயசந்திரன் அவர்கள் எழுதி நெறியாள்கை செய்து தாமே அதி உன்னத கதாபாத்திரங்களை ஏற்று நடிக்க கலாபூஷணம் திரு.மு. சடாட்சரம் அவர்கள் பாடல்களை எழுதி இசையமைத்து ஆர்மோனியத்தையும் தாமே இசைத்தும் நடித்தும் கலாபூஷணம் திரு சு.சிவபாதம் அவர்கள் போன்ற மூத்த நடி கர்களோடு இளையோர்களும் சிறுவர்களும் சேர்ந்து நடித்து அரங்கேற்றினர்.

கலாலயத்தின் மீள்வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருந்து வளர்தெடுத்த பொறுப்பு சர்வ வோதயத் தலைவர் திருவாளர் கிருஷ்ணர் நடராசா அவர்களையே சாரும். 2012 ல் கலாலயம் நாடகமன்றமாக அரசில் பதிவு செய்யப்பட்டமையினால் சங்கானைப் பிரதேச செயலாளரதும், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினதும் பண உதவிகள் வாத்தியங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒத்தாசைகள் கிடைக்கின்றன.

பிரதேச செயலகம், துறைசார் திணைக் களங்களினால் கலைவாரிதி, கலாபூஷணம் போன்ற பட்டங்கள் கலாலய உறுப்பினர் அனேகருக்கு கிடைக்கப்பெற்றமை, கலாசார அமைச்சினதும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களதும் பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்தினதும் ஊக்குவிப் புத்தன்மையை எடுத்துக்காட்டி நிற்கின்றது. இவர்கள் ஊக்கமுடன் ஆடிப்பிறப்பு விழா, கலாசார விழா எனப் பல விழாக்களை ஏற்பாடு செய்து பலவகைப் போட்டிகளையும் அதற்கான பரிசில்களையும் தக்கதருணம், குறித்த நேரம் தவறாமல் நிகழ்த்துகின்றமையும் எம்மையும் பங்குபெறச் செய்கின்றமையும், அவர்களது அயராமையைத் தெளிவுபடுத்துகின்றது.

திறமை வாய்ந்த இவ் அதிகாரிகளின் சேவை பெருகவும் எங்கள் கலாலயத்தின் வளர்ச்சி ஓங்கவும், வலி.மேற்கு கலைகளில் ஓங்கி வளரவும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.






Print @ Andra Printers, Jaffna. | 021 222 8929